# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 32

சுடர் 33 கதிர் 03 கார்த்திகை 13ஆம் நாள் புதன்கிழமை 29 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


# சமஷ்டி அதிகாரத்தை வழங்கத் தயாரில்லை

## தென்கொரியாவில் மைத்திரி வலியுறுத்து



கொழும்பு, நவம்பர் 29

கூட்டாட்சி (சமஷ்டி) அதிகாரத்தையோ அல்லது நாடு பிளவுபடக்கூடிய அதிகாரத்தையோ வழங்க நான் தயாராக இல்லை. நான் அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது தேசத்துக்குத் துரோகம் இழைப்பதற்காக அல்ல என நேற்றுத் தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

தென்கொரியா சென்றுள்ள அரச தலைவர் அங்குள்ள இலங்கையர்களைச் சந்தித்தார். நாட்டின் தலைநகர் சியோலில் உள்ள கிராண்ட் ஹைற் ஹோட்டலின் நம் சன் >> 29

## அஞ்சல் வழி வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 29

93 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் அஞ்சல் மூலம் வாக்களிக்க விரும்பும் வாக்காளர்கள் டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டு இன்று கிடைக்கக்கூடும் எனவும், அவை கிடைக்கப் பெற்றதும் உடனடியாக திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் யாழ்ப்பாணத் தேர்தல் >> 29

## சாவகச்சேரி நகர சபையில் 18 உறுப்பினர்கள் 12 ஆயிரம் வாக்காளர்கள்

யாழ்ப்பாணம், நவ. 29

சாவகச்சேரி நகர சபைக்கான தேர்தலில் 12 ஆயிரத்து 490 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களுக்காக 11 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன் சாவகச்சேரி நகரசபைக்கு 18 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்டத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது. >> 29

## வழக்கு மீளப்பெறப்பட்டு தையில் முழுத் தேர்தல்

### உயர் நீதிமன்றத்தில் இன்று முடிவு அறிவிக்கப்படும்

யாழ்ப்பாணம், நவ. 29

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடும் முயற்சிகளை முறியடிக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு 93 சபைகளுக்குத் தேர்தலை அறிவித்துள்ள பின்னணியில், தேர்தலுக்குத் தடை ஏற்படுத்தும் >> 29

## ஈபிடிபி நேற்று கட்டுப்பணம் செலுத்தியது

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாணத்தில் வேட்புமனுக் கோரப்பட்டுள்ள ஒரே ஒரு சபையான சாவகச்சேரி நகர சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நேற்றுக் கட்டுப்பணம் செலுத்தியது. >> 29



## அரச பஸ் சேவை இன்றும் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவைகள் இன்றும் வடக்கு மாகாணம் முழுவதும் இடம்பெறமாட்டாது எனச் சபையின் வட பிராந்தியத் தொழிற்சங்கத் தலைவர் ஆர். வாமதேவன் தெரிவித்தார்.

சபையின் வடபிராந்திய முகாமையாளர் உபாலி கிரிவத்துட்டுவ மற்றும் பிராந்திய பாதுகாப்பு அலுவலர் வி. சுரேந்தர் ஆகியோரை உடனடியாக இடமாற்றக்கோரி போக்குவரத்துச் சபையின் வடபிராந்தியத் >> 29

## வாள்வெட்டுக் குழு நபர் நேற்றும் கைது

வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த சந்தேகநபர் ஒருவரை யாழ்ப்பாண நகரில் வைத்து நேற்று மாலை தாம் கைது செய்துள்ளனர் எனக் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுபாஷ் மனுஷ்லா காந்தாவள தெரிவித்தார்.

ஆவாக் குழு உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் ஏற்கனவே கைது செய்யப் பட்டவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாகவே இவர் கைது செய்யப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சாரு என்று அழைக்கப்படும் 17 வயது இளைஞனே கைது செய்யப்பட்டவர். அவரது வீட்டிலிருந்து கோடாரி மற்றும் வாள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (உ-5)

## யாழ். நகரில் ஹெரோயின் விற்பனை; இருவர் கைது






யாழ்ப்பாணம், நவ.29

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இருவர் யாழ்ப்பாணம் >> 04

## பிரபாகரனின் பிறந்த நாளை கொண்டாடியோர் கைதாவர்

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, நவ. 29

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாளைக் கொண்டாடிய அனைவரும் கைது செய்யப்படுவார்கள். குற்றப் புலனாய்வுத் துறையின் உதவியுடன் இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார் பாதுகாப்பு இராஜாங்கஅமைச்சர்ருவான்விஜயவர்தன.

"வடக்கு மக்களை ஆயுத கலாசாரத்தின் பக்கம் திருப்பச் செய்யும் எந்த நடவடிக்கையையும் அனுமதிக்க முடியாது" என்றார் அவர்.

கம்பகாவில் இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் மற்றும் மாவீரர் >> 29

## கடும் காற்றுடன் மழை பொழியும்

யாழ்ப்பாணம், நவ. 29

இலங்கையின் தென்கிழக்குத் திசையில் வளிமண்டலத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளதால் நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக வடக்கில் 75 தொடக்கம் நூறு மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. காற்றின் வேகமும் மணிக்கு 50 கிலோ மீற் >> 29

## மைத்திரி - மகிந்த அணிகளின் இணைப்பு இழுபறி தொடர்கிறது

கொழும்பு, நவ. 29

மைத்திரி, மகிந்த அணிகளை ஒன்றிணைக்கும் முயற்சி தொடர்ந்தும் இழுபறிநிலையிலேயே இருந்து வருகின்றது. நேற்று நடைபெற்ற இணக்கப் பேச்சும் முடிவு எதுவுமின்றி இரு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தமது அமைச்சுப் பதவிகளை >> 29

## துப்பாக்கி களவாடிக் குற்றம் புரிந்தவருக்கு ஆயுள் சிறை

### வவுனியா மேல் நீதிமன்று விதித்தது

வவுனியா, நவ.29

இராணுவத்தின் ஆயுதங்களைத் திருடிக் குற்றச் செயல்கள் செய்த நபருக்கு ஆயுள் தண்டனை தீர்த்தது வவுனியா மேல் நீதிமன்றம்.

வவுனியா, மதகு வைத்த குளத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரே ஆயுள் சிறைக்கு அனுப்பப்பட்டார். இந்த நபர் 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி இலங்கை இராணுவப் படைக்குச் சொந்தமான ரி56 ரகத் துப்பாக்கி ஒன்றையும், 4 ரவைக் >> 29

## தமிழ் இனம் விழித்துக் கொண்டதற்கான கட்டியம் மாவீரர்கள் நாள்: முதலமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 29

மாவீரர்கள் துயர் வர விடமாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் எழுந்துள்ளது. எமது இனம் விழித்துக் கொண்டிருக்கின்றது என்பதற்குத் துயிலும் இல்லத் தொடர்பாடல்கள் கட்டியம் கூறி நிற்கின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வழக்கம் போல முதலமைச்சரால் அனுப்பி வைக்கப்பட்ட கேள்வி பதில் அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. >> 29




Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# என்னைக் கைது செய்ய அனுமதிக்கவேண்டாம்

## கோத்தபாய மேல்நீதிமன்றில் மனு

கொழும்பு, நவ.29



தான் கைது செய்யப்படுவதைத் தடுக்கவேண்டும் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அவருக்கு எதிரான பொதுச் சொத்துக்களை மோசடி செய்த வழக்கின் தீர்ப்பு இன்று வெளியாகவுள்ள நிலையில் அவர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

டீ.ஏ.ராஜபக்ச அருங்காட்சியகத்தை அமைப்பதற்கு 90 மில்லியன் ரூபா அரச நிதியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார் என்று கோத்தபாய ராஜபக்ச மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இது தொடர்பான வழக்கை பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தாக்கல் செய்திருந்தது. பொலிஸாரால் இந்த விசாரணைகளை முன்னெடுக்க முடியுமா என்பது தொடர்பில் ஆராய மேன்முறையீட்டு நீதிமன்று நேற்று கூடியது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்த நிலையில் நேற்று மன்றில் முன்னிலையான அரச சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, மனுதாரரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராகத் தடை உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

மேன்முறையீட்டு நீதியரசர்களான எல்.ரீ.பீ.தெஹிதெனிய, ஷிரான் குணதிலக ஆகியோர் இது தொடர்பான தீர்மானம் இன்று அறிவிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

கோத்தபாய ராஜபக்ச தாக்கல் செய்த மனுவில் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு அதிகாரிகள் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்படலாம் என்று வெளியான தகவலை அடுத்து தென்னிலங்கை அரசியல் களம் பரபரப்பாகியுள்ளது.

(ற)

## கோத்தாவைக் கைது செய்தால் கொழும்புக்குப் படையெடுப்பேன்

### அச்சுறுத்துகின்றார் மேர்வின்

கொழும்பு, நவ.29

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்பட்டால் ருகுணு மக்களுடன் கொழும்புக்குப் படையெடுப்பேன். இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார். வழக்கு விசாரணை ஒன்று நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றுக்குச் சென்ற மேர்வின் சில்வா நீதிமன்ற வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்வதை ஒருபோதும் ஏற்க முடியாது. போரை முடிவுக்குக் கொண்டுவர அவர் கடுமையாக உழைத்தவர். துட்டகைமுனு மன்னன் போர் செய்த பின்னர் மக்களுக்குக்காகத் திறைசேரியைத் திறந்துவிடுவார். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை அளிக்கவே அவர் அவ்வாறு செய்தார். முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் அவ்வாறானவர்தான். நாங்களும் ராஜபக்சகுடும்பத்துடன் இணைந்து செயற்பட்டவர்கள்தான். ருகுணு பிரதேசத்தைச் சேர்ந்த நான் கோத்தபாய ராஜபக்ச கைது செய்யப்பட்டால் ருகுணு மக்களுடன் கொழும்புக்குப் படையெடுப்பேன் - என்றார்.

(ற)

## எல்லை நிர்ணயம் தொடர்பாக யாழ். மக்களுக்கு விளக்கமில்லை

### ஆணைக்குழு தலைவர் தவலிங்கம் கவலை

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மக்கள் தமது பிரதேச எல்லை நிர்ணயம் தொடர்பில் முழுமையாக விளக்கம் இல்லாது உள்ளனர்.

இவ்வாறு மாகாணங்களுக்கான எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் க.தவலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று மாவட்ட எல்லை நிர்ணயம் தொடர்பான கருத்துக்களைப் பதிவு செய்யும் நிகழ்வு நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய மாகாண சபைத் தேர்தல் முறையின் கீழ் விகிதாசார, தொகுதி வாரியாக 50க்கு 50 என்ற அடிப்படையில் எல்லை நிர்ணயம் செய்யப்படவுள்ளது. அதற்காக கடந்த ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் எமது குழு தெரிவு செய்யப்பட்டது. அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நாம் ஊடகங்களில் விளம்பரங்கள் ஊடாகப் பொதுமக்களிடமும் அரசியல்வாதிகளிடமும் இருந்து கருத்துக்களைப் பெற்று வருகின்றோம்.

தற்போது நாம் மாவட்ட ரீதியாகச் சென்று கருத்துக்களைக் கேட்டுவருகின்றோம். யாழ்ப்பாணப் பயணத்துடன் நாம் இதுவரை 17 மாவட்டங்களுக்குச் சென்றுள்ளோம். வவுனியா மாவட்டத்துக்கு நேற்றுமுந்திணம் சென்றோம்.

அங்கு மூவின மக்களும் வசித்து வருகின்றனர். சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் தமக்கு எனப் பெரும்பான்மை கொண்ட தொகுதிகள் ஒன்றாவது ஒதுக்கிதரப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். யாழ்ப்பாணப் பயணத்தின்போது தீவகப் பிரதேசத்தை எந்த தொகுதியுடன் இணைப்பது என்றே பேசப்பட்டுள்ளது. சிலர் யாழ்ப்பான மாநகர சபையின் எல்லையுடன் இணைக்கலாம் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். வேறு சிலர் காரைநகர் தொகுதியுடன் இணைக்கலாம் என்றகருத்தைமுன்வைத்துள்ளனர். கருத்து வழங்கலுக்கு மக்கள் பெரும்பாலும் வரவில்லை. அரசியல்வாதிகள் பொது அமைப்பை சேர்ந்தவர்களே வந்தனர். யாழ்ப்பாண மக்கள் மத்தியில் எல்லை நிர்ணயம் தொடர்பில் முழுமையான விளக்கம் இல்லை என்பதை அறிய முடிகின்றது - என்றார்.

(ற-8)

## கோத்தாவை சிறைப்பிடிப்பது புலம்பெயர்ந்தவர்களின் கனவு

### அபேதிஸ்ஸ தேரர் கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ.29

புலம்பெயர் சமூகத்தின் எதிர்பார்ப்பை நிறைவேற்றவே முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பேராசிரியர் மெதகொட அபேதிஸ்ஸ தேரர்.

எதிர்காலத்துக்கான ஒளி என்னும் அமைப்பு கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் இராணுத்தினர் வேட்டையாடப்படுகின்றனர். யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தை மையப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் நினைவுகூரப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களை நினைவு கூருவதாக இருந்தால் மே 18ஆம் திகதியே நினைவுகூர வேண்டும். ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவரது பிறந்தநாளை அவர்கள் அரசின் உதவியுடன் கொண்டாடுகின்றனர். இரத்த ஆறாக மாறியிருந்த நாட்டைக் காப்பாற்றியவர் தான் கோத்தபாய ராஜபக்ச. அவரது நடவடிக்கை தமிழீழ விடுதலைப் புலிகள், புலம்பெயர் சமூகம், விடுதலைப் புலிகளைப் பலமடையச் செய்த பன்னாட்டு அமைப்புகளுக்குப் பேரிடியாக அமைந்தது. கோத்தபாய ராஜபக்சவை ஒருநாளாவது கைது செய்து சிறையில் வைப்பது அவர்களின் கனவும், எதிர்பார்ப்பும் ஆகும் - என்றார்.

(ற-ரி4)



## அண்ணனும், தங்கையும் ஆற்றில் சடலமாக மீட்பு!

நுவரெலியா.நவ.29

காணாமல்போயிருந்த அண்ணனும், தங்கையும் நேற்று சடலமாக மீட்கப்பட்டனர். 18, 28 வயதுடைய சகோதரர்களே சடலமாக மீட்கப்பட்டனர். இந்தச் சம்பவம் மஸ்கெலியாவில் நடந்துள்ளது.

மஸ்கெலியா கௌரவில அபாக்ரோதோட்டத்தில் காணாமல் போன இவர்கள் கௌரவில ஒயாவில் கடற்படையினரால் சடலமாக மீட்டனர்.

மஸ்கெலியா பாக்ரோ தோட்டத்ததைச் சேர்ந்த இவர்கள் கொழும்பு பகுதியில் தொழில் செய்பவர்கள் எனவும் பாக்ரோ தோட்டத்தில் இடம் பெற்ற சடங்கு வைபவத்துக்கு கொழும்பில் இருந்து வந்திருந்தபோது கடந்த 26ஆம் திகதி முதல் காணாமற்போனதாக உறவினர்கள் மஸ்கொலியா பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்திருந்தனர்.

காணாமல் போன இருவரும் ஒரு தாய் பிள்ளைகள் எனவும், இவர்களின் தந்தையர்கள் இருவர் என குடும்பத்தாரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ரி4)

## புடைவை ஏந்திய விடயம் சட்டமா அதிபர் அறிக்கை

கொழும்பு, நவ.29

உலக சாதனைக்காக கண்டியில் மணப்பெண் அணிந்திருந்த நீளமான புடைவையை ஏந்த நடுவீதியில் மாணவர்கள் நிறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்குஅமைவாகவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. 1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க குற்றவியல் பிரிவுக்குட்பட்டதான 308ஆவது சரத்துக்கு (அ) அமைவாக வழக்குத் தொடரக் கூடியமை தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் சட்டமா திணைக்களத்திடம் ஆலோசனை கோரப்பட்டது.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைவாக இது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

திருமண வைபவத்தில் 3.2 கிலோ மீற்றர் நீளமான புடைவைத் தலைப்பை அணிந்து, கண்டியைச் சேர்ந்த பெண்ணொருவர் கின்னஸ் சாதனை செய்ய முயன்றார். இந்தச் சம்பவம் கடந்த செப்ரெம்பர் மாதம் நடந்துள்ளது.

லொறி ஒன்றில் கொண்டுவரப்பட்ட 3.2 கிலோமீற்றர் நீளமான புடைவைத் தலைப்பை விரிப்பதற்கு வீதியில் சுமார் 250க்கும் மேற்பட்ட சிறுவர்கள் நிறுத்தப்பட்டனர். பாடசாலைச் சீருடையுடன் மாணவர்கள் வீதியில் நிறுத்தப்பட்டிருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

(ற)

## ஓரினச் சேர்க்கையால் ஆண்களுக்கு எய்ட்ஸ்

யாழ்ப்பாணம், நவ.29

ஓரினச் சேர்க்கை மூலம் ஆண்கள் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாவது இலங்கையில் கடந்த 3 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் எய்ட்ஸ் நோய் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் 1984-1987ஆம் ஆண்டு காலப் பகுதியில் எய்ட்ஸ் நோய் கண்டுபிடிக்கப்பட்டது. 2 ஆயிரத்து 700 நோயாளர்கள் வரையில் இதுவரை இனம் காணப்பட்டுள்ளனர். ஆண், பெண்களுக்கு இடையில் எய்ட்ஸ் நோய் பரவும் விகிதம் ஆரம்பத்தில் 14:1 என்று வீதத்தில் காணப்பட்டது. அதாவது 14 ஆண்களுக்கு இந்த நோய் இருந்தால் ஒரு பெண்ணுக்கு இந்த நோய் தொற்று காணப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த விகிதம் 19:1 விகிதத்தில் அதிகரித்துள்ளது. வருடம் ஒன்றுக்கு 240 நோயாளர்கள் இனம் காணப்படுகின்றனர். இவர்களில் ஆண்களே அதிகம் தொற்றுக்கு உள்ளாகின்றனர். ஆண்களின் ஓரினச்சேர்க்கை அதற்குப் பிரதான காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதில் வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து 35 பேர் சிகிச்சைக்காகப் பதிவு செய்தனர். இவர்களில் நோய் நிலமை பற்றி தெரியாமல் இறுதி நேரம் இன்னொரு நோய்க்காகச் சிகிச்சை பெற வரும்போதே அவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டமை தெரியவந்தது. இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் எய்ட்ஸ் நோய்க்கான பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. கூச்சம் இல்லாமல் பரிசோதனை செய்ய முன்வரவேண்டும். இரண்டு நாள்களில் பரிசோதனை முடிவுகள் கிடைக்கும். பரிசோதனை மேற்கொள்ளுபவர்களின் விவரம் முழுமையாக பாதுகாக்கப்படும்.

நாடு முழுவதும் கடந்த வருடம் 23 கர்ப்பிணிகளில் இந்த நோய் தொற்று காணப்பட்டது. அவர்களுக்கான சிகிச்சைகள் உடனடியாக வழங்கப்பட்டன. அவர்களின் குழந்தைகள் நோய் தொற்று இல்லாமல் பிறந்துள்ளன.

நோய் தொற்றுக்கு உள்ளானவர் 10 வருடங்களின் பின்னரே நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து இறக்கும் நிலை ஏற்படும். நாளை வியாழக்கிழமை எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-ரி)



## இ.போ.ச. தொழிற்சங்கத்தை சேர்ந்த ஐவருக்கு எதிராக யாழ்.பொலிஸில் முறையீடு

பருத்தித்துறை,நவ.29

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கப் போராட்டத்தை ஒழுங்கமைத்தனர் என்ற குற்றச்சாட்டில் 5 பேருக்கு எதிராக யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.மையப் பேருந்து நிலையப் பொறுப்பாளர் எஸ்.கனகராஜா இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

"வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தொழிற்சங்கம் சட்டத்துக்கு மாறாக பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது. இதானால் பொதுமக்கள் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைத்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டாளர்கள் ஐந்து பேருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று முறைப்பாட்டாளர் கோரியுள்ளார்.

தொழிற்சங்கத்தின் தீர்மானத்துக்கு மாறாக பருத்தித்துறை சாலைப் பொறுப்பாளரின் பணிப்பில் 'அந்த சாலையின் பேருந்துகள் நேற்றுக் காலை சேவையில் ஈடுபட்டன.

இதனால் தொழிற் சங்கத்தினருக்கும் பருத்தித்துறை சாலை பேருந்து சாரதி, நடத்துனருக்கும் இடையே யாழ்ப்பாண மையப் பேருந்து நிலையத்தில் முறுகல் நிலை ஏற்பட்டது. பொலிஸார் தலையிட்டு அதனை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

இந்த நிலையிலேயே யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையப் பொறுப்பாளரால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ரி-2)

# இ.போ.ச சாலை ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு





யாழ்ப்பாணம்,நவ.29

இலங்கை போக்குவரத்து சபை வடபிராந்திய முகாமையாளர் மற்றும் வடபிராந்திய பாதுகாப்பு அதிகாரி ஆகியோரை இடமாற்றம் செய்யக் கோரி வடமாகாண இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட பிராந்திய முகாமையாளர் உபாலி கிரிவத்துட்டுவ மற்றும் வட பிராந்திய பாதுகாப்பு அதிகாரி (வடக்கிலுள்ள 7 சாலைகளிலுமுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் தலைமை உத்தியோகத்தர்), வீ.சுரேந்தர் ஆகியோரை இடமாற்றக் கோரியே வட பிராந்திய சாலைகளின் இணைந்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

1. வட பிராந்திய காரியாலயத்தின் கையொப்பமிடாது கடமையாற்றுவது.
2. தகுதியற்ற நியமனங்கள் வழங்கியமை.
3. பக்கச் சார்பான தண்டனை மற்றும் இடமாற்றம் வழங்கியமை,
4. அரசியல் சுய இலாபத்திற்காக இலங்கை போக்குவரத்து சபை வளங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை.
5. தலைமைக் காரியாலயத் தலைவரின் பணிப்புரைகளை செயற்படுத்தாமை.
6. நீதிமன்ற தீர்ப்புக்களை அவமதித்தமை.
7. சொந்தப் பகை காரணமாக அதிகாரிகள் மற்றும் தொழிலாளிகளைப் பழிவாங்கியமை.

உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து பிரதான பிராந்திய முகாமையாளருக்கு எதிராக இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

நேற்று காலை முதல் பேருந்து சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இதனால் பொது மக்கள், மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்ளை எதிர்கொண்டனர்.

இது தொடர்பில் தமிழ்தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கம் யாழ்சாலைத் தலைவர் மற்றும் வடபிராந்திய சாலைகளின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

இச் சேவைப் புறக்கணிப்பால் மக்களுக்கு போக்கு வரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இருப்பினும் எமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

வேலை செய்யும் எமது மன நிலைகள் நன்றாக இருந்தால்தான் மக்களுக்கு சிறந்த சேவைகளை நாம் வழங்க முடியும் என்றார்.

**வவுனியா**

வவுனியா பஸ்நிலைய சாரதிகள், பஸ் நடத்துனர்கள், உத்தியோகத்தர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் வட பிராந்திய ஒன்றிணைந்த தொழிற்சங்கத்தின் தலைவர் இராசரத்தினம் வாமதேவன் கருத்து தெரிவிக்கையில்,

எமது நடவடிக்கைகளை நாங்கள் இன்று (நேற்று) முடக்கி வைப்பதற்குறிய காரணம் எங்களுடைய வட பிராந்திய முகாமையாளர் ஒரு தலைப் பட்சமாக ஒரு சிலரின் கருத்துக்களைக் கேட்டு செயற்படுவதுடன் பழிவாங்கும் செயற்பாட்டில் நடந்து கொள்கின்றார். வடக்கில் தகுதியான பல உத்தியோகத்தர்கள் இருக்கின்ற போதும் தகுதியற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்படுகிறது. அவரது கட்சி சார்பானவர்களுக்கே முன்னுரிமையளிக்கிறார்.

எமது சாலையில் எரிபொருளை நிரப்பி விரயம் செய்வது போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை போக்குவரத்து சபையின் வட பிராந்திய முகாமையாளர், வட பிராந்திய பாதுகாப்பு முகாமையாளரையும் இடமாற்றக்கோரி கடந்த 18.11.2017 அன்று புணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டோம் .

இதன் பின்னர் இ.போ.சபையின் வவுனியா சாலைக்கு விரைந்த சிறி லங்கா சுதந்திர கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் வாசல இவர்கள் இருவரையும் ஒரு வாரத்தினுள் வடக்கிலிருந்து இடமாற்றம் செய்வதாக வாக்குறுதியளித்தார்.

தற்போது 10 நாள்கள் கடந்துள்ள நிலையிலும் அவர்கள் இருவரும் இடமாற்றம் செய்யப்படவில்லை ஆகவே வடக்கிலுள்ள வவுனியா , முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், காரைநகர் ஆகிய சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டோம்.

வடக்கு தவிர ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த இ.போ.ச பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதால் பொதுமக்கள் பெரியளவிலான அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க வில்லை. என்றார். (ரி2.40)



## பழங்கள் பதனிடும் நிலையம் திறப்பு



யாழ்ப்பாணம், நவ.29

திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கத்தின் தானியங்கள், பழங்கள் பதனிடும் உற்பத்தி நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் கனேடியத் தூதுவர் டேவிற் மக்கின் நிலையத்தைத் திறந்தார்.

மாவட்ட விவசாயிகள் மற்றும் அபிவிருத்தி கருதியும் செயற்கை மருந்துகளால் பாதிக்கப்படும் மக்களை பாதுகாக்கும் நோக்கிலும் உற்பத்தி நிலையத்தை கனடா அரசு அமைத்து வழங்கியது. அதில் நேரடியாக 10 பேருக்கு வேலை வாய்ப்பும், மறைமுகமாக மாவட்ட விவசாயிகள் நூற்றுக்கணக்கில் நன்மை அடைவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. நிதியை கனேடிய தூதரகம் யு.என்.டீ.பியின் ஊடாக வழங்கியது. ஒரு கோடியே 9 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த நிலையம் அமைக்கப்பட்டது. (ற-101)

# மனுவை மீளப் பெற்று தேர்தலை நடத்துங்கள்

### ஜே.வி.பி. கோரிக்கை

கொழும்பு, நவ.29

உள்ளூராட்சி சபைகளின் எல்லைகள் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை வரையறை செய்து, உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை நாளை மீளப் பெற வேண்டும் என்று மனுதாரர்களிடம் மக்கள் விடுதலை முன்னனி கோரிக்கை விடுத்துள்ளது.

பத்தரமுல்லையில் உள்ள மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்படுகின்ற செயற்பாட்டின் பின்னணியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், சிறி லங்கா சுதந்திரக் கட்சியினரும் தான் உள்ளனர்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தவிடாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை துரிதகதியில் விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யவேண்டும் என்று சட்டமா அதிபர் தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கானது விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படும்போது தேர்தல் பிற்போடப்படுகின்றமைக்கான காரணத்தை நீதிமன்றில் தெரிவிக்க ஜே.வி.பி. தற்போதே தயாராகிவிட்டது. சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவுக்கு இணங்க எதிர்வரும் 30 ஆம் திகதி (நாளை) வழக்கு விசாரணைக்கு வரும் போது வர்த்தமானிக்கு எதிராகத் தாக்கல் செய்த மனுவை குறித்த தரப்பினர் மீளப் பெற வேண்டும் என்று நாம் வலியுறுத்துகிறோம். அந்த மனுவை மீளப் பெறாவிட்டால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒரு போதும் இடம்பெறாது என்பதாலேயே நாம் இதனைக் கூறுகிறோம். இது மட்டும் நடைபெறாவிட்டால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு கோரி அடுத்த வாரம் கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்துவோம். என்றார். (ற)

## அங்கவீனமுற்ற இராணுவத்தினர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,நவ.29

அரசதலைவர் செயலகத்துக்கு முன்பாக அங்கவீனமுற்ற இராணுவத்தினர் நேற்று ஆர்பாட்டம் நடத்தியுள்ளனர். அரசு உறுதியளித்த ஓய்வூதியத்துக்கு மேலதிகமான எந்தவித மானிய கொடுப்பனவுகளும் இதுவரை வழங்கப்படவில்லை என அவர்கள் குற்றஞ்சாட்டினர். சுதந்திரத்தினத்தன்று அரசதலைவர் தமக்கு வாழ்நாள் முழுவதுக்குமான கொடுப்பனவுகளை வழங்குவதாக கூறினார். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டகாரர்கள் அரசதலைவர் செயலகத்துக்குள்பிரவேசிக்க முற்பட்ட போதும் பொலிஸார் அதற்கு அனுமதி வழங்கவில்லை. அங்கவீனமுற்ற இராணுவத்தினர் சார்பில் ஐவரை மாத்திரம் அரசதலைவர் செயலகத்துக்குள் செல்ல பொலிஸார் அனுமதித்தனர். (ற-ரி4)

# போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் இழப்பீடு வழங்கவில்லை

## கூட்டமைப்பு எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 29

போர்க் காலத்தில் தமிழ் மக்கள் பல சொத்துக்களை இழந்துள்ளனர். சிலர் தமது சொத்துக்கள் குறித்த ஆவணங்களைக் கொண்டிருக்கின்ற போதும் அவர்களுக்கான இழப்பீடுகள் கூட இதுவரையில் வழங்கப்படவில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடபகுதியில் போர் முடிவுக்கு வரும் வரை பல கைத்தொழிற்சாலைகள் கைவிடப்பட்டன. போர் முடிந்து ஒன்பது வருடங்கள் முடிந்துள்ள போதும் இந்தத் தொழிற்சாலைகளை மீள இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது மாத்திரமன்றி அங்கு பணியாற்றியவர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவை கூட வழங்கவில்லை. பணியாளர்களின் குடும்பங்கள் கடும் வறுமைக்கு முகம்கொடுத்துள்ளன.

பெண் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லும்போதும் அவர்களின் பிள்ளைகளை பராமரிப்பதற்கு சரியான இடங்கள் இல்லாமையால் வீட்டில் உள்ள மூத்த பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுகிறது. கல்வி மாத்திரமன்றி பிள்ளைகளின் போசாக்கு என்பனவும் பாதிக்கப்படுகிறது.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தொழிற்சாலைகளில் பணிக்குச் செல்லும்போது சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். அவர்களின் பாதுகாப்பு தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது சொத்துக்களை இழந்துள்ளார்கள். அதற்கான ஆவணங்களை அவர்கள் வைத்துள்ளபோதும் அதற்குரிய இழப்பீடுகள் வழங்கப்படவில்லை. வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து பெருந்தொகை தங்கம் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவமே அறிவித்திருந்தது.

அதற்கான உரிமையாளர்களை அடையாளம் காணும் வகையில் கடந்த இரண்டு வருங்களுக்கு முன்னதாக பதிவொன்றும் மேற்கொள்ளப்பட்டது. நீண்டவரிசையில் எத்தனையோ பெண்கள் தமது பொருள்களுக்கான ஆவணங்களைக் காட்டியவாறு பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். அந்தப் பொருட்கள் இதுவரையில் வழங்கவும் இல்லை. அவற்றுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவுமில்லை. அந்த மக்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்படுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய மிகவும் அவசியமாகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு துறைமுகத்தை அமைப்பதற்கான முன்மொழிவு சமர்ப்பக்கப்பட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இதனை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. அது குறித்து நடவடிக்கைளையும் அரசு மேற்கொள்ள வேண்டும் - என்றார். (5.31)

# காங்கேசன், திருமலை துறைகள் அபிவிருத்தி

## ஆசிய வங்கி நிதிப் பங்களிப்பில்

வடக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தையும், கிழக்கில் திருகோணமலை துறைமுகத்தையும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய அரசு தீர்மானித்துள்ளது. இவ்வாறு துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கப்பல் துறை அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் அமைச்சுப் பதவி ஏற்றதன் பின்னர் மே மாதமளவில் பல சவால்களை எதிர்கொண்டேன். அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் தொடர்பான சவாலே முக்கியமானது. ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முடிக்கப்பட்டிருந்த நிலையில் எனக்கு அதனை நடைமுறைப்படுத்த மாத்திரமே இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு மாதத்திற்குள் அரசுக்கும் மக்களுக்கும் பாதிப்பு ஏற்படாத இலாபகரமான ஒப்பந்தத்துக்குச் சென்றோம். அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்திலும் சமர்ப்பித்தேன். குழப்பம் ஏற்பட்டமையால் விவாதம் நடத்த முடியாமல் போனது. தற்போதும் விவாதம் நடத்த நான் தயாராகவே உள்ளேன். மறைக்க ஒன்றும் இல்லை.

அம்பாந்தோட்டை ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தும் தினத்தை டிசெம்பர் முதலாம் வாரத்தில் அறிவிக்கவுள்ளோம். நடைமுறைப்படுத்தும் திகதிக்கு முன்னர் 22 மில்லியன் டொலரை தவணை கடன் கொடுப்பனவாக செலுத்தவுள்ளோம். அதனை மீண்டும் திறைசேரிக்கே பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தையும், கிழக்கில் திருகோணமலை துறைமுகத்தையும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கவுள்ளோம். திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் பெருமளவிலான இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (5.31)

### யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேருந்து நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். நேற்றுப் பிற்பகல் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 2 கிராம் எடையில் பொதி செய்யப்பட்ட 60 ஹெரோயின் பைக்கற்றுக்கள் கைப்பற்றப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. கைது செய்யப்பட்டவர்கள் 28, 38 வயதுடையவர்கள் என்றும், மாத்தளை மற்றும் கந்தளாயைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழான சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவு சுற்றுக்காவலில் ஈடுபட்டபோதே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகள் தொடர்கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-101)

# நாம் நாட்டுக்கு வழங்கியவற்றை அரசு வெளிநாட்டுக்குத் தாரை வார்க்கிறது

## குற்றம் சுமத்துகிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, நவ. 29

நாம் நாட்டுக்கு வழங்கியவற்றை இந்த அரசு வெளிநாடுகளுக்கு தாரை வார்த்து வருகின்றது என்று முன்னாள் அரச தலைவரின் புதல்வரும், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அரச நிறுவனங்களை அரசு துரித கதியில் தனியாருக்கு தாரை வார்த்து வருகின்றது. நல்லாட்சியில் அரச நிறுவனங்களுக்கு நேர்ந்துள்ள கதி இதுவாகும். அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்குத் தாரை வார்த்துள்ளது. அங்கு பணிபுரியும் இலங்கை ஊழியருக்கு எந்தவித பாதுகாப்பும் கிடையாது. 432 ஊழியர்கள் நிர்க்கதியற்ற நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு இறங்குதளத்தை அபிவிருத்தி செய்வதற்கு நாம் நடவடிக்கை எடுத்த போதிலும் நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

அதற்கு மாறாக அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான இறுதி ஒப்பந்தத்தை எதிர்வரும் 7 ஆம் திகதி அமைச்சரவையில் முன்வைத்து 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம்நடத்திநிறைவேற்றியதன் பின்னர் கைச்சாத்திடுவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளதாக எமக்கு அறியக் கிடைத்துள்ளது. அவசர அவசரமாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் அரசு முன்னெடுத்துள்ளது. நாம் இந்த நாட்டுக்கு வழங்கியவற்றை இந்த அரசு வெளிநாடுகளுக்குத் தாரைவார்த்து வருகின்றது - என்றார். (5,31)

# எல்லை நிர்ணயம் தொடர்பில் கிளிநொச்சியில் கருத்தறிவு

கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லை நிர்ணயம் தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஆய்வில் 20 பொது அமைப்புக்கள் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தன.

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் க.தவலிங்கம் தலைமையில் கருத்துப் பதிவு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 மாகாண சபை உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் இரண்டு தொகுதிகள் அமையப் பெறும். தொகுதிகளுக்குத் தனித் தனியான பெயர்களை சூட்டும்போது பிரதேச மக்கள் தமது கிராமத்தின் பெயரோ அல்லது பிரதேச செயலக பிரிவின் பெயரில் தொகுதி அமைந்தால் ஏனைய இரு பிரதேச செயலகங்களின் பெயர்கள் இல்லாத நிலமை காணப்படும்.

அதைக் கருத்திற் கொண்டு பச்சிலைப்பள்ளி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவையும் கரைச்சி மேற்கின் ஒரு பகுதியையும் உள்ளடக்கி கிளிநொச்சி கிழக்குத் தொகுதியெனவும், கரைச்சி மேற்கையும், பூநகரி பிரதேச செயலாளர் பிரிவையும் உள்ளடக்கி கிளிநொச்சி மேற்கு தொகுதியெனவும் இரு தொகுதிகளை உருவாக்க முடியும் என அதில் சுட்டிக்காட்டப்பட்டது. (ற-101)

## தொகுதிப் பங்கீடு:

# சிறிகொத்தாவில் நாளையும் பேச்சு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தில் தொகுதிப் பங்கீடு உட்பட பல்வேறு விடயங்களை ஆராயும்பொருட்டுதலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க் தலைமையில் நாளை வியாழக்கிழமை சிறிகொத்தா கட்சி தலைமையகத்தில் பேச்சு நடைபெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடவுள்ள சிறிய கட்சிகளுக்கு நாடு முழுவதிலும் தொகுதிப் பங்கீடுகளை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதுடன் இதன் மூன்றாம் கட்டப் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (5.31)

# அரிசித் தட்டுப்பாடு நீங்கும்

## இறக்குமதிக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர் ஹரிசன்

கொழும்பு, நவ. 29

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு உள்ளது. தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபையின் கையிருப்பில் இருந்த 50 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியையும் பகிர்ந்தளிக்கவுள்ளோம். தட்டுப்பாடை நிவர்த்தி செய்யும் வகையில் சதொச மற்றும் தனியார் நிறுவனத்தின் ஊடாக அரிசி இறக்குமதி செய்யத்திட்டமிட்டுள்ளோம். பொது மக்களுக்குத் தட்டுப்பாடு இன்றி அரிசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜசிறி, 2010ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை சிறு மற்றும் பெரும்போக பருவங்களில் நெல் அறுவடை ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு? இந்தக் காலப் பகுதியில் நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்த நெல்லின் அளவு யாது? தற்சமயம் நெல் சந்தைப்படுத்தல் சபையால் பேணிவரும் நெல் கையிருப்பு எவ்வளவு? என்று கேள்வி எழுப்பினார்.

இந்தக் கேள்விக்கு அமைச்சர் பி.ஹரிசன் பதிலளிக்கும் போது,

2015ஆம் மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் பெரும் போக அறுவடையால் 2.9 மில்லியன் மெட்ரிக் தொன்னும், 2016 ஆம் ஆண்டில் சிறுபோக அறுவடையினால் 1.51 மில்லியன் மெட்ரிக் தொன்னும் கிடைக்கப்பெற்றுள்ளது.

2015ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 1 லட்சத்து 75 ஆயிரத்து 267 மில்லியன் மெட்ரிக் தொன்னும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பெரும் போகத்தில் 1 இலட்சத்து 31 ஆயிரத்து 982 மில்லியன் மெட்ரிக் தொன்னும், 2016ஆம் ஆண்டு சிறுபோகத்தில் 25 ஆயிரத்து 447 மெட்ரிக் தொன் நெல்லும், நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்துள்ளது.

தற்போதைக்கு நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் 50 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல் கையிருப்பில் உள்ளது.

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு உள்ளது. எனினும் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபையின் கையிருப்பில் இருந்த 50 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசியையும் பகிர்ந்தளிக்கவுள்ளோம்.

நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட வறட்சியான கால நிலை காரணமாகவே அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டது. வறட்சியினால் 10 வீதமளவிலேயே நெல் எமக்குக் கிடைத்தது. அரிசித் தட்டுப்பாடு உள்ளது. இதனைப் போக்குவதற்கு இறக்குமதி செய்யவுள்ளோம் - என்றார். (5.31)

## சாவகச்சேரியில் ஒரேநாளில் 3 கொள்ளைகள்; ஒரு திருட்டு

### மக்களிடம் அச்சம்

சாவகச்சேரி, நவ. 29

சாவகச்சேரியில் நேற்று ஒரே நாளில் 3 கொள்ளைச் சம்பவங்களும் ஒரு திருட்டும் இடம்பெற்றுள்ளன. இதனால் மக்கள் அதிர்ச்சியும் அச்சமும் அடைந்துள்ளனர். **கல்வயலில் அதிகாலை** வேளை, கத்திமுனையில் வீட்டு உரிமையாளர்களை அச்சுறுத்தி தங்க நகைகள் உள்ளிட்ட 20 லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் கொள்ளையிடப்பட்டன. அதே பகுதியில் வேறு இரு வீடுகளிலும் கொள்ளையர்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். ஒருவீட்டிலிருந்து சூட்கேஸ் ஒன்றையும், பொருள்களையும் கொள்ளையிட்டுள்ளனர். மற்றொரு வீட்டில் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளியின் திறப்பை எடுத்துக் கொண்டு தப்பித்துச் சென்றனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை நடத்திக் கொண்டிருக்கும்போதே நேற்றுப் பட்டப்பகலில் சாவகச் சேரியில் வீடு ஒன்றை உடைத்து அங்கிருந்த 10 பவுண் நகைகள், பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

கல்வயல் பகுதியில் உள்ள ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலய அறங்காவலர் வீட்டிலேயே முக்கியமான கொள்ளை இடம்பெற்றது. முகத்தை துணியினால் மூடிக் கட்டிய நிலையில் நுழைந்த நான்கு கொள்ளையர்கள் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தித் தம்மை ஓரிடத்தில் அமர்த்திவிட்டு வீடு முழுவதும் சல்லடை போட்டு தங்கநகைகள் மற்றும் பெண்களின் கையில் அணிந்திருந்த காப்பு, தோடு மோதிரம் கைப்பையினுள் வைத்திருந்த பணம், அலைபேசி, மற்றும் வீட்டிருந்த பெறுமதிமிக்க பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர்.

இதேவேளை அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த சூட்கேஸ் ஒன்றையும், பொருள்களையும் அபகரித்துச் சென்றனர். மற்றொரு வீட்டில் கதவைத் திறக்க முற்பட்ட கொள்ளையர்களை இனம் கண்ட வீட்டார்பொலிஸ்நிலையத்துக்கு தகவல் வழங்க முற்பட்டதும் வீட்டின் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளியின் திறப்பை எடுத்துக் கொண்டு கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பித்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. மோப்பநாயுடன் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் தேடுதல்களிலும், விசாரணைகளிலும் ஈடுபட்டனர். அவர்கள் விசாரணையில் ஈடுபட்டிருந்தபோதே நகரப் பகுதியில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

வர்த்தகர் ஒருவருடைய வீட்டில் இருந்த அலுமாரி உடைக்கப்பட்டு அதிலிருந்த 10 பவுண் தங்க நகைகள், 50 ஆயிரம் ரூபா பணம் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டன என வர்த்தகரான சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (உ-21.9)

## வடக்கு ஆசிரியர்களுக்கு கைவிரல் பதிவேடு கட்டாயம்:

# அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகளை 8 மணிக்கு ஆரம்பிக்க அமைச்சர் யோசனை

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான கைவிரல் பதிவேடு கொழும்பு அரசின் சுற்றறிக்கைக்கு அமைய நடைமுறைப்படுத்தப்படும். போக்குவரத்துச் சிக்கலைத் தீர்க்க அதி கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளை மட்டும் காலையில் 30 நிமிடங்கள் தாமதமாக ஆரம்பிப்பது தொடர்பில் ஆராயப்படுகிறது.

இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கான கைவிரல் பதிவேடு முறைமை பெரும்பாலான பாடசாலைகளில் நடைமுறையில் உள்ளன. கொழும்பு அரசின் அறிவுறுத்தல்படியே அது நடைமுறையில் உள்ளது. வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 71 வீதமான ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பிறமாவட்டங்களுக்குப் பணியாற்றச் செல்கின்றனர். இவ்வாறான நிலையில் நாம் இதனை நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. புதிய நடைமுறைகள் வரும்போது அவற்றுக்கு எதிர்ப்பலைகள் எழுவது வழக்கம். எதிர்ப்பலைகள் வந்தாலும் நாட்டின் சட்டத்தை நாம் நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது. அந்த வகையில் வடக்கு மாகாணத்திலும் கைவிரல் பதிவேட்டு முறை நடைமுறைப்படுத்தப்படும். அது நடைமுறைக்கு வரும்போது வடக்கில் அதி கஷ்டப் பிரதேசங்களுக்கு நாம் சில சலுகைகளை வழங்கத் தீர்மானித்துள்ளோம். அதாவது இரண்டு பேருந்து எடுத்து பயணிக்க வேண்டிய இடங்கள், பல தூரம் நடந்து செல்லக்கூடிய இடங்கள் ஆகியவற்றுக்கு நாம் பாடசாலை நேரத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவது என்று உத்தேசித்துள்ளோம்.

அதி கஷ்ட்ட பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை காலை 8 மணிக்கு ஆரம்பித்து பிற்பகல் 2 மணிக்கு நிறைவு செய்வதன் ஊடாக கைவிரல் பதிவேட்டை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சவாலைத் தீர்க்க முடியும். இவை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டு இது நடைமுறைப்படுத்தப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (4-8)

## பாதுகாவலர் கொலை: விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் பாதுகாவலரைக் கொன்ற குற்றச்சாட்டுள்ள சந்தேகநபர்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு யாழ்ப்பாண நீதவான் மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. அதன்போதே மறியல் நீடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் கடந்த ஜூலை 22 ஆம் திகதி துப்பாக்கிச் சூட்டில் நீதிபதியின் பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தர் ஹேமச்சந்திர கொல்லப்பட்டார். பொலிஸ் கான்ஸ்டபிள் விமலரத்ன காயமடைந்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையைப் பொலிஸார் ஆரம்பித்து ஒருவரைக் கைது செய்தபின்னர் முதன்மைச் சந்தேகநபர் என்று கூறப்படும் நபர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## பொருத்தமற்ற ஆளணியை வைத்துக்கொண்டு

# வட மாகாணத்தின் கல்வி நிலையை உயர்த்துவதென்பது முடியாத காரியம்

### உறுதிபடத் தெரிவிக்கின்றது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், நவ. 28

பொருத்தமற்ற ஆளணியை வைத்துக் கொண்டு வடக்கு மாகாணத்தின் கல்வி நிலையை உயர்த்துவதென்பதும், ஆசிரிய பரம்பலைச் சீராக்கம் செய்வதென்பதும் எவராலும் முடியாத காரியம் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா.புவனேஸ்வரன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள 1093 பாடசாலைகளில் 1065 பாடசாலைகள் இயங்குகின்றன. இங்குள்ள 12 வலயங்களிலும் 22 தேசிய பாடசாலைகளும், 06 தனியார் பாடசாலைகளும் உள்ளன. இவற்றுள் 1ஏபி தர பாடசாலைகள் - 105, 1சீ பாடசாலைகள் -123, வகை 2 பாடசாலைகள் - 315, வகை3 பாடசாலைகள் - 460ம் உள்ளன.

மாகாணப் பாடசாலைகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 12ஆயிரத்து 261. ஆசிரியர்களின் எண்ணிக்கை 15ஆயிரத்து 123. இவர்களுள் பெண் ஆசிரியர்கள் 10 ஆயிரத்து 998பேர். ஆண் ஆசிரியர்கள் 4ஆயிரத்து 8பேர்.

சராசரியாக 14 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் வடக்கு மாகாணத்தில் உள்ளனர். ஆனால் இந்த ஆசிரியர்களின் பாடத்துறை பொருத்தப்பாடு இன்மையால் பாட ரீதியாக இரண்டாயிரத்திற்கும் அதிகமான ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன.

உதாரணமாக, முன்னைய காலங்களில் அழகியல் துறைசார்ந்த ஆசிரியர்கள் 1சீ பாடசாலைகளில் இரண்டு பாடசாலைகளுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் கடமை புரிந்தனர். தற்போது ஒரு பாடசாலையில் இரண்டுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கடமையில் உள்ளனர்.

இதைவிட திணைக்களக் கடமையில் 500ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் உள்ளனர். இவர்களோடு கடமை நிறைவேற்றும் பணியில் 1000ற்கும் அதிக மானவர்கள் உள்ளனர்.

இத்தகைய குழப்பமான தரவுகளோடு வடக்கு மாகாணத்தின் கல்வியை மேம்படுத்துவது எப்படி?

இதற்கான மாற்று வழிகள் பலவற்றை பல்நாட்டுக் கல்வி முறைகளுடன் ஒப்பீடு செய்து, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்தது. அதனை எவரும் கருத்தில் கொள்ளவும் இல்லை. நடைமுறைப்படுத்த எண்ணவும் இல்லை. இதைவிட மத்திய அரசின் ஆசிரிய நியமனங்கள் பல எமது மாகாணத்துக்குப் பொருத்தமில்லாததாக இருக்கின்றன. உதாரணமாக வடக்கு மாகாணத்தில் பற்றாக்குறையாக உள்ள கணிதம், விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி, ஆங்கிலம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கு இன்னும் பற்றாக்குறை உள்ளது.

தற்போது வடக்கு மாகாணத்தில் ஆசிரிய ஆளணியைச் சீராக்கம் செய்வதற்காக புதிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை வடக்கு மாகாணசபையும் ஏற்றுள்ளது.

அதற்கு முன்னதாக ஆசிரிய ஆளணியின் உண்மைத்தன்மை வலயங்களில் பின்பற்றப்படுகின்றதா? பேணப்படுகின்றதா? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

சில ஆசிரியர்களின் நியமனவகை வேறு. கற்பிக்கும் பாடம் வேறு. அதிபர்களிடம் தகவல்கள் பெறப்படுகின்ற போது, ஆசிரியர்களால் வழங்கப்படும் தகவல்களையே தரவுகளாக வலயங்கள் வெளிப்படுத்துகின்றன. இதில் எவ்வளவு பாரதூரமான தவறு இருப்பதென்பதை எவரும் உணரவதில்லை. மாறாக எழுந்தமானமாகப் பொதுவாக ஆசிரியர்கள் என்ற பதத்தை மட்டும் பயன்படுத்தி வலயங்களுக்கு இடையேயான இடமாற்றங்கள் நிகழ்கின்றன. இதனால் சில பாடத்துறை சார்ந்த ஆசிரியர்கள் ஓரிரு இடங்களில் செறிந்துவிடுகின்ற நிலைமை உருவாகின்றது. இதற்கு என்னதான் வழி? என்றுள்ளது. (எ)

## யாழ். பல்கலை மாணவர் கொலை:

# அரச பகுப்பாய்வு அறிக்கை ஒரு வருடம் கடந்தும் இல்லை

### வழக்கு பெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கில் அரச பகுப்பாய்வுத் திணைக்கள அறிக்கை ஒருவருடம் கடந்துவிட்டபோதும் இன்னும் கிடைக்கவில்லை. அதனால் வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி 20ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாண நீதிமன்றில் மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அரசபகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை கிடைக்கவில்லை என்று குற்றவிசாரணைப் பிரிவினர் மன்றுக்கு அறிவித்தனர். இந்த நிலையிலேயே வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களான விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகியோர் கொக்குவில் குளப்பிட்டியில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி நள்ளிரவு துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் அவர்கள் கொல்லப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. விசாரணைகளின்பின்னர் யாழ்ப்பாண தலைமைப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் ஜவரும் யாழ்ப்பாண மேல் நீதிமன்றால் பிணையில் விடு விக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (4-103)

## மத நல்லிணக்கம் தொடர்பான தெற்காசிய மாநாடு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 29

தெற்காசியாவின் மதங்களுக்கிடையிலான நல்லிணக்கம் தொடர்பானபன்னாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய மாநாடு ஒன்று தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. அங்கு தெற்காசியாவில் பன்முகத்தன்மை உள்ளடங்கும் சமூகங்களை வளர்ப்பது தொடர்பாகவும் அதற்கு மதத்தலைவர்கள் மற்றும் நடிகர்களின் பங்கு தொடர்பாகவும் இலங்கை இந்துமாமன்றப் பிரதித் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருதத்துறை மூத்த விரிவுரையாளருமான கலாநிதி ம.பாலகைலாசநாத சர்மா சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார்.

இந்த மாநாடு ஆசியநாடுகளில் மதங்களின் பெயரில் நடைபெறும் வன்முறைகளைத் தடுத்தல், அனைத்து மதங்களும் நல்லிணக்கத்துடன் தத்தம் மக்களை வழிநடத்தல், ஒருமதம் இன்னொரு மதத்தின்மீது ஏற்படுத்தும் சவால்களை எதிர்கொள்ளல், இந்த விடயத்தில் மதத் தலைவர்கள், நடிகர்கள் மற்றும் நிறுவனங்களின் வகிபாகம் பரஸ்பர மதித்தல் போன்ற பலமுக்கியமான செயற்பாடுகளினூடாகத் தெற்காசியாவில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை மையமாகக் கொண்டு நடைபெறுகின்றது என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

# விஞ்ஞான பிரிவு மாணவர்கள் தொழில்நுட்ப துறைக்குத் தாவல்

## வடக்கு மாணவர்களின் எண்ணிக்கை விஞ்ஞான துறையில் குறைய இதுவே காரணம் என்கின்றனர் வடக்குக் கல்வி அதிகாரிகள்

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாணத்தில் விஞ்ஞான துறையில் தேர்ச்சி உடைய தமிழ் மாணவர்களில் அதிகமானவர்கள் தொழில்நுட்பவியல் துறையைத் தேர்வு செய்வதாலேயே விஞ்ஞான துறையில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து செல்கின்றது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் கூறு கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

இலங்கையின் கல்வித் திட்டத்தில் ஜீ.சீ.ஈ. உயர்தர மாணவர்களின் பாடத்திட்டத்துக்குள் தொழிநுட்பவியல் கற்கை நெறியும் அண்மையில் உள்வாங்கப்பட்டுள்ளது.

எமது நாட்டில் தொழிநுட்ப துறையை வளர்ப்பதற்கும், கலைப் பிரிவுக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்களைத் தொழில்நுட்பத் துறைக்குள் உள்ளீர்ப்பதுமே, இந்தத்துறை உள்வாங்கிய தன் முதன்மை நோக்கங்களாக உள்ளன. ஆனால் வடக்கு மாகாணத்தில் விஞ்ஞானத் துறையில் தேர்ச்சி உடைய அதிகளவான மாணவர்களே தொழிநுட்பத் துறைக்குளும் செல்கின்றனர். இதனால் விஞ்ஞானத் துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களின் வீதம் குறைவடைந்து செல்கின்றது. அதேநேரம் கலைத்துறைக்குத் தோற்றும் மாணவர்களின் வீதத்தில் அல்லது கலைத் துறையிலிருந்து வேறு துறைக்கு செல்லும் மாணவர்களுக்கான வீதத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

கலைத்துறையினர் தொழிநுட்ப துறையிலும், விஞ்ஞானத்துறை மாணவர்கள் விஞ்ஞானத் துறையையும் தெரிவு செய்யும்போதே எமது மாகாணத்தில் பல்கலைக்கழகங்களுக்குச் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையில் நாம் மாற்றத்தை எதிர்பார்க்க முடியும். தற்போதைய சூழ்நிலையில் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களே விஞ்ஞான துறைக்குத் தெரிவாகி வருகின்றனர்.

இந்தநிலை மாற்றப்பட வேண்டும். கலைத்துறையைத் தெரிவுசெய்யும் மாணவர்கள் தொழிநுட்பத்துறையில் ஆர்வம் காட்டவேண்டும். மாணவர்கள் அதற்கு முன்வர வேண்டும்.

இதற்குப் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அந்தத் துறையில் மாணவர்களை நாட்டம் கொள்ள வைக்க வேண்டும். இதனை மாணவர்களும் உணர்ந்து செயற்பட வேண்டும் என்று கூறினர். (4-8)

## வடக்கு கல்வி அமைச்சிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு போட்டிப் பரீட்சை விரைவில்

யாழ்ப்பாணம், நவ.29

வடக்கு மாகாண கல்வி, விளையாட்டு, கலாசார திணைக்களங்களில் காணப்படும் உத்தியோ யோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குப் போட்டிப் பரீட்சைநடத்தப்படவுள்ளது. மாகாண கல்வி அமைச்சின் 56 ஆவது அமைச்சரவைக்கூட்டத்தில்இதுபற்றிய தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கல்வி, விளையாட்டு, கலாசாரம் ,இளைஞர் விவகாரம் ஆகிய துறைகளை மேம்படுத்துவதற்கு அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. ஆனால் இந்தத்திணைக்களங்களில் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் வெற்றிடங்கள் காணப்படுவதால் திணைக்களம் சார்ந்த வேலைகள் செய்வது கடினமாகின்றது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தற்போது அமைச்சு முன்வந்துள்ளது.

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் 5 விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் 3 கலாசார உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றை நிரப்புவதற்கு மாகாண விளையாட்டு உத்தியோகத்தர், கலாசார உத்தியோகத்தர், சேவைப் பிரமாணக்குறிப்புக்கு அமைய போட்டிப் பரீட்சைகள் நடத்தி நேர்முகத் தேர்வு மூலமாக ஆள்ச்சேர்ப்புச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியைப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு அமைச்சர் சபையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-ரி)



# காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு உதவ செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை

## அதன் பிரதிநிதி கிளிநொச்சியில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 29

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவுகளின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு அடுத்த வருடம் உதவிகள் வழங்கவுள்ளன.

பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஆன் மெறொக், இவ்வாறு கூறினார் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு நேற்றுமுன்தினம் வந்திருந்த பிரதிநிதி மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரை மாவட்டச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் அருமைநாயகம் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காணாமல்போனோரின் உறவுகளின் தற்போதைய நிலை என்ன? அவர்களுக்கான உடனடித் தேவைகள் என்ன? அதற்குப் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் உதவ வேண்டிய வழிவகைகள் என்ன? என்பன தொடர்பிலும், அவர்களின் வாழ்வாதார நிலமைக்குப் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் உதவக்கூடிய வழிகள் தொடர்பிலும் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

அதற்கு, "காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோர் தொடர்ந்தும் போராடுவது தமக்கான வாழ்வாதாரம் தொடர்பில் எனில் நாம் தலையீடு செய்து முயற்சித்தி ருப்போம். அவர்கள் மிக முக்கியமாகக் கோருவது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை ஒப்படைக்குமாறே. அவ்வாறு தொடர்போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டிருப்பதால் அவர்களின் குடும்பங்களில் காணப்பட்ட நெருக்கடிநிலை மேலும் அதிகரித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரில் ஆண்கள், பெண்கள் என இருதரப்புமே உள்ளனர். அதிக எண்ணிக்கையானவர்கள் ஆண்களே. இதனால் தற்போது பெரும் நெருக்கடிகள், சுமைகளைத் தாங்குபவர்களாக பெண்களே காணப்படுகின்றனர். இந்தப் பெண்களும் இன்று வீதியில் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவதனால் அந்தக் குடும்பங்களில் உள்ள இளையவர்கள், சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே அவர்களது கோரிக்கைக்கான போராட்டம் இடம்பெற்றாலும் வாழ்வாதாரமும் குடும்பச் சூழலின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான தேவைகள், வாழ்வாதார உதவிகளையும் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் வழங்க வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தோம்.

"காணாமல் ஆக்கப்பட்டோரின் அதிக எண்ணிக்கையிலான உறவுகள் பல காரணங்களுக்காக இன்றுவரை எந்தப் பதிவும் மேற்கொள்ளாத நிலையில் உள்ளனர். அதனால் அவர்களின் முழுமையான எண்ணிக்கையை உடனடியாக வழங்க முடியவில்லை" என்பதனையும் சுட்டிக்காட்டினோம்.

இவைதொடர்பில் ஆராய்ந்த செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, "காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கான உடனடித் தேவைகள் மற்றும் வாழ்வாதார உதவிகளை 2018 ஆம் ஆண்டில் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம் வழங்க நடவடிக்கை எடுக்கும். அதேநேரம் அது தொடர்பான எண்ணிக்கையை பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கமே திரட்டிக் கொள்ளும்" என்று கூறினார் - என்றார் அருமைநாயகம். (4-101)

## நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு முன்சேவை பயிற்சி 3 இடங்களில்

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் 2017ஆம் ஆண்டுக்கென புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழிநுட்ப எதிர்வரும் டிசெம்பர் 4ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை உளவியல், புவியியல், குடியியல், வரலாறு ஆகிய பாடங்களுக்கான முன்சேவைப் பயிற்சிகள் இடம்பெறும்.

வவுனியா மருக்காரம்பளை மாகாண தொடர்பாடல் தொழிநுட்ப வளநிலையத்தில் சிங்கள பாட ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி நடைபெறவுள்ளது.

வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை தமிழ், மனைப்பொருளியல், விவசாயம்,தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், ஊடகக் கற்கை ஆகிய பாடங்களுக்கான முன்சேவைப் பயிற்சி நடைபெறவுள்ளன என்று வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார். (4)

## வடக்கு அரச திணைக்கள சொத்துகள் முழுமையாகப் பேணப்படுகின்றனவா?

### முதலமைச்சரை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 29

வடக்கு மாகாண சபையின் கீழ் 35க்கும் மேற்பட்ட அரச திணைக்களங்கள் இயங்குகின்றன. எனினும், ஒவ்வொரு திணைக்களத்தின் கீழ்வரும் நிலையான காணி, கட்டடங்கள், இயந்திரத்தொகுதிகள், வாகனங்கள், மற்றும் தளபாடங்கள் போன்ற சொத்துக்கள் முழுமையாக பேணப்படுகின்றனவா என்பதை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆவணப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளருமான க.கருணாகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 30 வருடங்களாக வடக்கு மாகாணத்தில் போர் இடம்பெற்றது. இதனால் அனைத்து அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள் என்பன தமது சொத்துக்கள் தொடர்பானதும் இயந்திங்கள், வாகன்ங்கள்,காணி தொடர்பான ஆவணங்களைப் பேணவில்லை. போர் நிறைவு பெற்ற தற்போது 9 வருடங்கள் கடந்துள்ளன. அரச நிர்வாக இயந்திரம் முழுமையாக செயற்படுகின்றது. எனவே, வடக்கு மாகாணத்திலுள்ள அரச திணைக்களத் தலைவர்கள் தமது திணைக்களங்களுக்குக் கீழ்வரும் கட்டடங்கள், காணிகள், இயந்திரங்கள், வாகனங்கள் தொடர்பான சொத்துக்களைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்த வேண்டும். சொத்துக்கள் தொடர்பான ஆவணங்களைப் பேணிப் பாதுகாப்பதுடன் ஆவணங்கள் இல்லாத சகல காணிகள், கட்டடங்கள், வாகனங்களுக்கு ஆவணங்களைப் பெறுவதற்கு முயற்சிசெய்ய வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் வடக்கு மாகாணத்தில் இடம்பெறுவதனை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றார். (4-50)

## இலையான் பெருகும் வகையில் கோழிப்பண்ணை நடத்தியவருக்கு 50 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது

தென்மராட்சி, நவ. 29

இலையான் பெருகும் வகையில் சுகாதாரக் கேடாகக் கோழிப் பண்ணை வைத்திருந்தவருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று 50 ரூபா தண்டம் விதித்தது.



பொதுமக்களுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் இலையான் பெருக்கம் ஏற்பட கோழிப்பண்ணை நடத்துவதாக கடந்த ஓகஸ்ட் மாதம் கோழிப்பண்ணை நடத்துபவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைதடிப் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது கோழிக் கடை உரிமையாளர் நீதிமன்றில் தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஏற்க மறுத்ததால் வழக்கு விசாரணைக்கு என்று ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அவர் குற்றத்தை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். அதனையடுத்து அவருக்கு 50 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (4-9)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 . 02 . 1932



உதிர்வு 10 . 12 . 2016

அமரர்

## இரத்தினம் சரஸ்வதிப்பிள்ளை

அம்மா ! உமையிழந்து ஆண்டொன்று ஆனதுவோ ?
ஆசைமுகம் மறைந்து அவலம்தான் சூழ்ந்ததுவோ?
செம்மையாம் சிரிப்பு செந்தளிப்பாம் பூவதனம்
சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம் மறைந்திடுமோ?
உம்மைக்காக்க உழைத்தோம் முடியவில்லை
ஒவ்வோர் பொழுதுமிங்கு உம் நினைவில் வாடுகின்றோம் !
எம் வீட்டு நாயகியே ! என்றென்றும் நாம் மறவோம் !
இறைவன் தாழ் மலரில் நீரமரப் பிரார்த்திக்கின்றோம்.

இல.18 , கதிரவேல் லேன்
அரியாலை, யாழ்ப்பாணம்.

- ஓம் சாந்தி -

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## அருளப்பு பிரான்சிஸ் அன்ரன்



மண்டைதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 123, 4ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு பிரான்சிஸ் அன்ரன் 25.11.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மடுத்தீன் அருளப்பு - அல்பிரட்டம்மா தம்பதியரின் அன்பு மகனும் திருமதி பிரான்சிஸ் அன்ரன் சகாயவேபியின் அன்புக் கணவரும் காஸ்ரன் (கனடா), மேரி அனிஸ் (புனித பத்திரிசியார் கல்லூரி), மேரி ஜெனிஸ் (அன்ட்றா பிறின்டர்ஸ்), பிரான்சிஸ் அருஸ்ரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மேரி திரேசா (கனடா), லூர்து மேரி (ஆஸ்திரேலியா), அருட்சகோதரி ஜேரூட் AC, பிறேமா, அருந்தவநேசன் (கனடா), காலஞ்சென்ற யேசுதாசன், லில்லிகிறேஸ், ஜடா (கனடா), வேணன் (கனடா), சாந்தி (டென்மார்க்), சலமோன் பிலிப்பையா ஞானமலர் ஆகியோரின் மருமகனும் பவளசிறியின் மைத்துனரும் டோல்ரன் பிரகாஷ், ஜெயப்பிரபானந், மேரிஅனுசியா ஆகியோரின் மாமனும் அன்ரீனா, ஸ்ரசி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.11.2017) புதன் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் (123, 4ஆம் குறுக்கு வீதி) எடுத்துச் செல்லப்பட்டு பி.ப. 2.00 மணியளவில் அவரது சொந்த ஊராகிய மண்டைதீவில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப. 2.30 மணிக்கு புனித பேதுருவானவர் தேவாலயத்தில் இரங்கல் நன்றிப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## முருகேசு சரவணமுத்து



பிறப்பு 22.03.1950 இறப்பு 10.11.2017

யாழ். சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Bobigny ஐ வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சரவணமுத்து 10.11.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரவி - ராசம்மா தம்பதிகளின் அன்புமருமகனும், கனகேஸ்வரி (ராசாத்தி - பிரான்ஸ்) அவர்களின் அன்புக் கணவரும், ராஜஸ்ரீ (பிரான்ஸ்), ராஜகுமார் (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), ஜெயந்தி (பிரான்ஸ்), தர்ஷினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலக்ஷ்மி (கனடா), ராஜலக்ஷ்மி (யாழ். சுழிபுரம்), தவராசா (ராமு - யாழ். சுழிபுரம்), கலியுகவரதன் (குவைத்), சோமசுந்தரம் (சோமு - லண்டன்), அன்னலெட்சுமி (அன்னம் - யாழ். கொல்லங்கலட்டி), ராஜேந்திரம் (சதா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் செல்லத்துரை, கணக்கர், போமன், சின்னத்தம்பி, பாலு, குணம், கிச்சி, தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பரதன், எமில், பிரவீனா, கருணாகரன், ராகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பமிலன், ஹர்சிஹா, கனிஸ்ஹா, எமிலி, எர்வின், ஜெனி, நவீனா, ரஜித், அஷ்மி, அக்ஷன், ருதீஷ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம சாந்தியை முன்னிட்டு பிரார்த்தனைகள் நாளை (30.11.2017) வியாழக்கிழமை அவரது மைத்துனராகிய வை.செல்வரத்தினம் (பாலன்), கோசலா TRANSPORT V.C. ROAD, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**வை. செல்வரத்தினம் (பாலன்),**
**அன்னலட்சுமி (அன்னம்),**
**ராஜலக்ஸ்மி (யாழ்.சுழிபுரம்,**
**சகோதரர்),**
**தவராசா (ராமு, யாழ். சுழிபுரம்).**

**077 187 4767, 021 224 2835,**
**ராசாத்தி (பிரான்ஸ்)**
**0033 148 022 918**

## வகுப்புக்கள்

தரம் 10,11 வர்த்தகம், தரம் 6 -11 வரலாறு, தரம் 12,13 கணக்கீடு குழுவாக, தனியாக கற்பிக்கப்படும். **- 077 832 1677**

## தேவை

யாழ்ப்பாணத்தில் பில்கிளாக், பொதியிடல், உதவியாளர், சமையல் என்பவற்றுக்கு பெண்கள் தேவை. **தொடர்பு - 077 991 2304**

# மரண அறிவித்தல்

## ஏனஸ்டீன் சிறீதரன் சபாரத்தினம்
## Ernestine Sritharan Sabaratnam

சுண்டிக்குளியை பிறப்பிடமாகவும், இல்போர்ட் இங்கிலாந்தை வதிவிடமாகக் கொண்ட ஏனஸ்டீன் சிறீதரன் சபாரத்தினம் நவம்பர் 23ம் திகதி இங்கிலாந்தில் காலமானார். இவர் ஷிரானி இன் அன்புக்கணவரும், ஷிரோமி, ஷர்மி அவர்களின் பாசமுள்ள தந்தையும், சுனில் இன் அன்பு மாமனாரும், காட்டுக்கு கந்தோர் ஒழுங்கை காலம் சென்ற சபாரத்தினம், புஷ்பாமிர்தம்(பபா) (இரத்மலானை) அவர்களின் பாசமிகு புதல்வரும், அமிர்தா (பேர்த்) சாரதா (பேர்த்) வனிதா (லண்டன்) இரஞ்சனா(பேர்த்) நரேந்திரன் (ஜெர்மனி) ரோஷனா (பேர்த்) மோகனா (இரத்மலானை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், உடுவில் லவ் லேனை சேர்ந்த காலம் சென்ற பிரின்ஸ், ஹில்டா (மெல்போர்ன்) இரத்தினத்தின் அன்பு மருமகனும் ஆனந்தன் (பேர்த்), ஜெயரஞ்சன்(லண்டன்), கஜன் (பேர்த்), ஜெயா(லண்டன்), ரஜீவ்(பேர்த்) லோகன் (இரத்மலானை) தீபம் (மெல்பே ர்ன்), பிரீத்தி (சிங்கப்பூர்) தர்மினி (மெல்பேர்ன்) ஆகியோரின் அன்பு சகலனுமாவர். அன்னாரின் நல்லடக்க ஆராதனை (29.11.17) இல்போர்ட் மேனர் பார்க் தேவாலயத்தில் நடைபெறும்.

**இத் தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**
**தகவல் : மோகனா லோகநாதன் (சகோதரி)**
**56A நெலும்புர, மாளிகாவவீதி, இரத்மலானை**
**Tel: 011 2610440**

# கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை

யாழ் மாநகர ஆளுகைக்குட்பட்ட இருநூறுக்கும் (200) அதிகமான தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உக்கக் கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் மூடிய வாகனத்தில் பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கை தீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவுசேர் நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கான கழிவு அகற்றும் சேவை வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகர சபை, பொறியியலாளர் பகுதியில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 29.11.2017 – 13.12.2017 வரையான காலப் பகுதியில் கடமை நாள்களில் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 மற்றும் வரிகளைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

கேள்விப்படிவங்களை 14.12.2017 திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் ஆணையாளர், மாநகர . சபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பிரதம பொறியியலாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.

கேள்வி திறத்தல் 14.12.2017ம் திகதி பி.ப 2.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

குறிப்பு– குறித்த கழிவகற்றல் சேவை தொடர்பான முறைமையும் விளக்கங்களும் அடங்கிய ஆவணத்தினை 13.12.2017பி.ப 3.00 மணிவரை கடமை நாள்களில் யாழ் மாநகர சபை, பொறியியலாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திரு.இ.த.ஜெயசீலன்,
ஆணையாளர்,
யாழ்ப்பாணம் மாநகர சபை.
29.11.2017.

# மீள் கேள்வி அறிவித்தல் - 2018
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட.கீழ் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழி இறைச்சிக்கடைகள் என்பவற்றை 2018.01.01 ஆம் திகதி தொடக்கம் 2018.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 08/12/2017 பி.ப 3.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 11/12/2017 பி.ப 2.00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 11/12/2017பிப 2.30 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலி தென்மேற்கு பிரதேச சபை. தலைமைஅலுவலகம்

**2018 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அட்டவணை**

| இல | சந்தைகள், இறைச்சிக் கடைகள், கோழி இறைச்சிக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் N.B.T தவிர | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை N.B.T தவிர | மாதாந்த வாடகை N.B.T தவிர |
|---|---|---|---|---|---|
| | மானிப்பாய் பட்டின உபஅலுவலகம் | | | | |
| 1 | மானிப்பாய் மீன் சந்தை (புதிய கட்டடத் தொகுதி) | 1.000.00 | 15.000.00 | 1.063.000.00 | |
| 2 | மானிப்பாய் மரக்கறிச் சந்தை (பழைய மீன் சந்தைக் கட்டிடம் தவிர) | 1.000.00 | 10.000.00 | 494.500.00 | |
| 3 | மானிப்பாய் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை (புதிய கட்டடத் தொகுதி) | 1.000.00 | 5.000.00 | 127.500.00 | 600.00 |
| 4 | மானிப்பாய் பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை (புதிய கட்டடத் தொகுதி) | 1.000.00 | 10.000.00 | 528.000.00 | 600.00 |
| | மானிப்பாய் கிராம உபஅலுவலகம் | | | | |
| 1 | காக்கைதீவுப் பொதுச்சந்தையும் மற்றும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையமும் | 1.000.00 | 15.000.00 | 1.279.000.00 | |
| 2 | காக்கைதீவு பழைய மீன் சந்தைக்கட்டிடம் (கடலுணவுகள் களஞ்சியப்படுத்துவதற்கு மாத்திரம்) | 500.00 | 1.500.00 | 34.500.00 | |
| 3 | நவாலி பிரசாத் சந்தை | 1.000.00 | 5.000.00 | 222.500.00 | |
| 4 | சாவற்கட்டு சந்தை | 1.000.00 | 5.000.00 | 252.000.00 | |
| 5 | ஆனைக்கோட்டை சந்தி ஆட்டிறைச்சிக்கடை | 1.000.00 | 5.000.00 | 44.500.00 | |
| 6 | ஆனைக்கோட்டை சந்தி கோழி இறைச்சிக் கடை | 500.00 | 1.500.00 | 69.000.00 | |
| 7 | பண்டத்தரிப்பு பட்டின உபஅலுவலகம் | | | | |
| 1 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை | 1.000.00 | 15.000.00 | 1.796.000.00 | |
| 2 | பண்டத்தரிப்பு பொதுச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 1.000.00 | 5.000.00 | 482.000.00 | 1.500.00 |
| | பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகம் | | | | |
| 1 | மாகியப்பிட்டி பொதுச் சந்தை | 1.000.00 | 5.000.00 | 212.000.00 | |
| 2 | மாகியப்பிட்டி சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 1.500.00 | 158.500.00 | 250.00 |
| 3 | இளவாலை பொதுச்சந்தை கோழிஇறைச்சிக்கடை | 1.000.00 | 5.000.00 | 102.000.00 | |

மேற்படி மீள்கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 21.10.2017ஆம் திகதிய உதயன், தினக்குரல் பத்திரிகைகளிலும் எமது சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

**திரு.கு.சற்குணராசா**
**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**
**29.11.2017**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 621 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 28.11.2017
வெற்றி இலக்கங்கள்
07 10 15 62 J
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 14,015,384/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

# கண்ணீர் அஞ்சலி



2017.11.27 ஆம் திகதி இறைபதம்
அடைந்த முன்னாள் பிரதம குரு

**சிவஸ்ரீ**
**நா. யோகீஸ்வரக்குருக்கள்**

அவரது மறைவை இட்டு அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் குருக்களின் ஆத்மா அத்தியடிப்பிள்ளையார் பாதங்களை அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அத்தியடி வாழ்மக்கள், அத்தியடி யாழ்ப்பாணம்.**

# அரசாங்க அறிவித்தல்
# கேள்வி அறிவித்தல் - 2018

யாழ் மாவட்ட செயலகத்தால் பின்வரும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. செயலக சுத்திகரிப்புச் சேவை (மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறம்) 2. புகைப்படப்பிரதி இயந்திர (Photo Copy Machine) பராமரிப்பு 3. உள்ளகத் தொலைபேசித் தொகுதி பராமரிப்பு 4. வாகன சுத்திகரிப்புச் சேவை 5. செயலக பாதுகாப்புச் சேவை 6. வளிபதனாக்கிகள் பராமரிப்பு சேவை

மேற்படி விடயம் தொடர்பான மேலதிக தகவல்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் செயலக பெறுகைகள் அலகில் 2017.11.29 ஆந் திகதியிலிருந்து 13.12.2017ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ரூபா 5000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன், "தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட சேவையினுடைய விபரத்தினை குறிப்பிட்டு 2017.12.14 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடிய வாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையி லுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் மு.ப 11.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப் படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

நா.வேதநாயகன்,
மாவட்ட செயலாளர்,
யாழ் மாவட்டம்.

# தென்மராட்சியின் கலாசார விழா

தென்மராட்சி, நவ. 29

தென்மராட்சிப் பிரதேச கலாசார அபிவிருத்திச் சபை மற்றும் கலாசார பேரவை ஆகியவற்றின் ஏற்பாட்டிலான பிரதேச கலாசார விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறுமென அறிவிக் கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் திருமதி தே.பாபு தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநா ய கனும் சிறப்பு விருந்தி னர்களாக மாந்தை கிழக்கு பிரதேச செயலர் செல்வி றஞ்சனா நவரத் தினம் வடக்கு மாகாண கலாசார திணைக்களப் பணிப்பாளர் திருமதி அபிராமி ஆகியோரும் மதிப்புறு விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் ச.மார்க்கண்டுவும் கலந்து கொள்வர்.

(4-9)

# உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு கொள்ள ஆர்வமுடைய பெண்களுக்கு கருத்தரங்கு

உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு கொள்ள ஆர்வமுள்ள பெண்களின் இயலாற்றலை மேம்படுத்தும் கருத்தரங்கு நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கருத்தரங்கில் புதிய தேர்தல் திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் த. அகிலன் கருத்துரை வழங்கவுள்ளார். இதனோடு யாழ்ப் பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் "அரசியலதிகாரத்தில் பெண்கள்" என்ற தலைப்பிலும், உள்ளூராட்சி மன்றக் கட்டமைப்பு மற்றும் அதிகாரம் தொடர்பாக சு.பரமநாதனும் உரையாற்றவுள் ளனர்.

நிகழ்வின் முடிவில் பெண்கள் உள்ளூராட்சித்தேர்தலில் வெற்றிபெறுவதற்கான செயன்முறைத் திட்டமொன்று முன்மொழியப்படும். இந்தக் கருத்தரங்கில் பங்கு கொள்ள விரும்பு வோர் 0212223668 என்ற தொலைபேசி இலக் கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடி யும் என்று அரசசார்பற்ற நிறுவனங்களின் தலை வர் தேவ நாயகம் தேவானந்த் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட அரச சார் பற்ற நிறு வனங்களின் இணையம், போரின் பின்னர் வடபகுதியில் பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் என்ற தலைப்பில் கடந்த ஜீலை மாதம் தேசிய மநா டொன்றை நடத்தியிருந்தது. இதன் தொடர்ச்சியாக மாநாட்டில் இனங்காணப் பட்ட சவால்களை எதிர் கொண்டு முன்ன கர்வது தொடர்பான செயற்றிட்டங்களை வடிவமைத்துச் செயற்படுத்தி வருகின் றது. அதில் பெண் தலைமைகளை உரு வாக்குவதற்கான முயற்சிகள் முக்கியமா னவை. இதில் பெண்கள் அரசியலில் ஈடுபட வேண்டும் என்பதை அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையம் வலி யுறுத்தி வருகின்றது. இதற்காகவே நடை பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் பங்கு கொள்ள ஆர்வமுள்ள பெண்களின் இயலாற்றலை மேம்படுத்தும் நோக்கில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறுகிறது என அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் தே.தேவானந்த் மேலும் தெரிவித்தார்.

(21)

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 221
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 28.11.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 76,596,260/-
C 15 23 25 55
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 90
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.11.28
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 55,586,215/-
வெற்றி இலக்கங்கள்
10 17 56 70 W
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 28.11.2017 | வெற்றி வாரம் 2217 | வர்ணம் நீலம்
கன்னி
வெற்றி இலக்கங்கள் 03 06 37 52
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,774,556/=
2017.12.01ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

# அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.29

நெடுந்தீவு நடுக்குறிச்சி பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தினுடைய மண்டபங்களின் சீரமைப்புக்கும், புதிய சபா மண்டபத் துக்குமான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று புதன்கிழமை மு.ப 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண, இந்தியத் துணைத்தூதரக கொன்சூலர் ஏ. நடராஜன் இதற்கான அடிக்கலை நடுவார் எனவும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் ஆலய தர்மகர்த்தாக்களும், பரிபாலன சபையினரும் தெருவித்தனர். (21)

## தேவை

1] Technical Assistant தேவை
Construction Site Supervisor
(Minimum 1 Year Experience)
2] மேசன், உதவியாளர் (கூலி)
E-mail Shaganaconstruction@hotmail.com
தொடர்புகளுக்கு - 077 813 9761

## வீடு வாடகைக்கு

நல்லூர் கோவில் வீதியில் (கோவிலில் இருந்து 400 m தூரம்) சிறிய குடும்பம் அல்லது பல்கலைக்கழக மாணவர்களுக்கு வீடு வாட கைக்கு உண்டு. ஒருவருட முற்பணம் அவசியம். T.P:_ 0777 078 577

# யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்
## 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரை

யாழ் போதனாவைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரையான காலப்பகுதிக்கு யாழ் போதனாவைத்தியசாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் 'கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்' என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ருபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 30.11.2017 தொடக்கம் 14.12.2017 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணிதவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ருபா 50,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
3. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும் சுகாதாரப்பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" ட / சான்றிதழின் பிரதியையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. விலைக் கேள்விகள் 15.12.2017 திகதி (பி.ப) 03.00 மணிக்கு முன்பதாக இவ் போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
5. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில்/தொலைபேசி இலக்கத்துடன் 021-2222261 (Exchange No 201) தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
6. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
7. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்தகாலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**தலைவர்/ பணிப்பாளர்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
# யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்
# விஞ்ஞான இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டம்
# B.Sc Natural Sciences கல்வியாண்டு 2017 / 2018

**அனுமதித் தேவைகள்**

க.பொ.த (உயர்தர) கணித விஞ்ஞானப்பிரிவில் மூன்று பாடங்களில் சித்தி அல்லது திறந்த பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான அத்திவாரப் பாடநெறியில் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான இலங்கைத்திறந்த பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.

**பாடப்பரப்புகள்** தாவரவியல் / இரசாயனவியல் / கணினி விஞ்ஞானம் / தூயகணிதம்/ பிரயோக கணிதம் / பௌதீவியல் / விலங்கியல்

**விண்ணப்பப்படிவக்கட்டணம் ரூபா 350/=**

**விண்ணப்பங்கள் : 05.11.2017 தொடக்கம் 07.12.2017 காலப்பகுதிக்குள் www.ou.ac.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து விண்ணப்பிக்கமுடியும்.**

**இக்கற்கை நெறி தொடர்பான மேலதிக விளக்கங்கள் மற்றும் விவரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.**

**மேலதிக தகவல்களுக்கு - 021 222 3374**

**இணைய வருவழி மூலமே விண்ணப்பிக்க முடியும்.**

பதிவாளர்,
இலங்கைத்திறந்த பல்கலைக்கழகம்.



# சிறுமிக்கு நீதி கோரி நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா,நவ.29

வவுனியாவில் சிறுமியைத் வன்புணர்வுக்கு உட்படுத்தியதைக் கண்டித்தும் சிறுமிக்கு நீதி வேண்டியும் வடக்கு பெண்கள் நாடாளுமன்ற அமைப்பும், வடக்கு பெண்கள் அமைப்பும் இணைந்து கண்டன ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தினர்.

பொலிஸ் நிலைத்துக்கு முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் பொது மருத்துவமனை வீதி ஊடாக வவுனியா மாவட்டச்செயலகம் வரை சென்றது. மாவட்ட செயலாளர் சோமரத்தினவிதான பத்திரணவிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

சிறுமிக்கு நீதி வேண்டும், ஆண்களும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க முன்வாருங்கள், பெண்கள் வன்முறைகளை தடுத்து நிறுத்துங்கள் என்ற பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



கடந்த 14ஆம் திகதி கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி ஒருவர் கூட்டு வன்புணர்வுக்கு உட்பட்டார்.

இந்த விடயம் தொடர்பாக 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் ஒருவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

பொலிஸார் மற்றையவரையும் கைது செய்து நீதியை வழங்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. (ற.ரி4)

# தென்கொரியா சென்றார் அரச தலைவர்

கொழும்பு, நவ.29

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று தென்கொரியவைச் சென்றடைந்தார். தென்கொரிய அரசும் அந்த நாட்டின் பிரதி வெளிநாட்டு அமைச்சர் சோயுன் மற்றும் தேசிய பாதுகாப்புதலைவர் சுங்ஈயொங் உள்ளிட்டமூத்த பிரதிநிதிகள் அரசதலைவரை மிகச்சிறப்பாக வரவேற்றனர் என அரச தலைவரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இலங்கைக்கும் தென்கொரியாவுக்குமிடையே இராஜதந்திர உறவுகள் ஏற்பட்டுத்தப்பட்டு 40 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு அரசதலைவர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

தென்கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டிருந்த கொந்தளிப்பான சூழலில் இலங்கை வழங்கிய ஒத்துழைப்புக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டிருந்தன. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தென்கொரிய மூன் ஜேயினுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு இன்று இடம்பெறவுள்ளதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான கூட்டுறவை மேம்படுத்தும் உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

# மீனவர் தினத்தை முன்னிட்டு மன்னாரில் நேற்று ஊர்வலம்





மன்னார், நவ.29

உலக மீனவர் தினத்தை முன்னிட்டு மன்னாரில் நேற்று ஊர்வலம் நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் 14 மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள, தமிழ் மீனவர்கள் கலந்துகொண்டனர்.

சமூகப் பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளை அடிப்படை மனித உரிமையாகப் புதிய யாப்பில் உறுதிப்படுத்துவோம் எனும் தொனிப் பொருளில் ஊர்வலம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் தலை மன்னார் வீதி ஊடாக நகரசபை மண்டபத்தை வந்தடைந்தது. மன்னார் நகர மண்டபத்தில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன.

மீனவர்களின் சுதந்திரம் காக்கப்படவேண்டும், விடுவிக்கப்படாத மக்களின் காணிகள் விடுவிக் கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலம் நடத்தப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, வடமாகாண அமைச்சர்களாக க.சிவனேசன், அனந்தி சசிதரன், தேசிய மீன்வ ஒத்துழைப்பு இயக்கத்தின் வட கிழக்கு மாகாண இணைப்பாளர் அன்டனி ஜேசுதாஸ், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-56)

# நியமனம் வழங்கக் கோரி பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, நவ.29

போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்துப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கவேண்டும் என்று வலியுறுத்தி மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகளால் அவர்களின் கோரிக்கைகள் அடங்கிய மனு கிழக்கு மாகாண ஆளுநர் ரோகித போகொல்லாகமவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்கவேண்டும், அரச தொழிலில் ஏற்கனவே இருக்கின்ற பட்டதாரிகளுக்கு மீண்டும் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது உள்ளிட்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழங்குவதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 6 ஆயிரத்து 800 பட்டதாரிகள் தோற்றினர். 40 புள்ளிகளுக்கு மேல் பெற்று 2 ஆயிரத்து 868 பட்டதாரிகள் சித்தியடைந்திருந்தனர். அவர்களில் ஆயிரத்து 119 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன. (ற-ரி4)







தேசிய மர நடுகை மாதத்தை முன்னிட்டு நேற்று சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மரக் கன்றுகளை வழங்கினர். சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பொது அமைப்புகளின் கட்டட வளாகங்களில் நடுகை செய்வதற்காக மரங்கள் சபையின் செயலாளரிடம் வழங்கப்பட்டன. பொது அமைப்புகளின் பிரதிநிதிகளிடம் சபை அலுவலர்களால் அவை கையளிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)





# ருவன் வீரசேகர காலமானார்

முன்னணி வயலின் வித்துவான் ருவன் வீரசேகர நேற்றுக் காலமானார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், உடல்நிலை பாதிக்கப்பட்டு கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையில் தொடர் சிகிச்சை பெற்று வந்த ருவன் வீரசேகர, நேற்றுக் காலை சிகிச்சை பயனின்றிக் காலமானார்.

# இடர்களில் மக்களின் காவலராக வேண்டும்

## ஏறாவூர் நகர சபையின் ஊழியர்களுக்கு அழைப்பு

மட்டக்களப்பு, நவ.29

இடர் காலங்களின்போது மக்களைப் பாதுகாக்கும் உத்தியோகத்தர்களாகவும், ஊழியர்களாகவும் நாம் செயற்படவேண்டும்.

ஏறாவூர் நகர சபையின் செயலாளரும் சிறப்பு ஆணையாளருமான பிர்னாஸ் இஸ்மாயில் தெரிவித்தார்.

இடர்கால சூழலுக்கு ஏற்றவாறு திட்டமொன்றை முன்வைக்கும் கலந்துரையாடல் நேற்று நகர சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடெங்கும் அடைமழை பெய்வதால் வெள்ளப் பெருக்கு மற்றும் டெங்கு நுளம்பு பரவுதல் போன்றவற்றிலிருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக ஏறாவூர் நகர சபையின் உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் 24 மணி நேரமும் தயார் நிலையில் இருக்கவேண்டும். வேலைகளை முன்னெடுப்பதற்கு வாகனங்களையும் தயாராக வைத்திருக்கவேண்டும்.

வெள்ள காலங்களில் பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான கொள்கலன்களையும் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டும். அதற்கு ஏற்றவாறு நகர சபையின் முகாமைத்துவக் குழு உள்ளிட்ட ஊழியர்கள் கொண்ட குழுவினர் இன்றிலிருந்து தயார் நிலையில் இருக்கவேண்டும் - என்றார்.

கலந்துரையாடலில் தலைமை முகாமைத்துவ உதவியாளர், உத்தியோத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்துகொண்டனர். (ற-ரி4)

# உள்ளூராட்சி எல்லைகள் தொடர்பான வழக்கை நாளை விசாரிக்கக் கோரி மனு

கொழும்பு, நவ. 29
கடந்த பெப்ரவி மாதம் வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடைவிதித்த வழக்கைநாளை 30ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கக் கோரி நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்ட மா அதிபர் அரச தலைவர் சட்டத்தரணி ஜயந்த ஜயசூரியவினால் இந்த நகர்த்தல் பத்திரம் மேன் முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

'கடந்த 22ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடை காரணமாக அந்தத் தேர்தல்களை நடத்த முடியாது உள்ளது. தேர்தலை நடத்த முடியாது போவதால் அது பொதுமக்களின் வாக்குரிமைக்கு விடுக்கப்படும் பெரிய அச்சுறுத்தல்' என்று நகர்த்தல் பத்திரத்தில் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டினார்.

இந்த மனுவானது நாளை எடுத்துக்கொள்ளப்படும்போது, பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவை விலக்கிக்கொள்ள அல்லது வழக்கில் மேலதிக வாதங்களை முன்வைத்து குறித்த மனுவைத் தள்ளுபடி செய்யச் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சட்டவாதிகள் முயற்சிகளை மேற்கொள்வர் என்று தெரியவருகின்றது.

**பின்னணி**

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை, அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் கடந்த பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த வர்த்தமானி அறிவித்தலை இல்லாமல் செய்யுமாறு கோரி வாக்காளர்கள் அறுவரினால் மேன் முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவைக் கடந்த 22ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போதே மேற்படி இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

தாக்கல் செய்யப்பட்ட மனுவில், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில், எல்லை நிர்ணயம் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சர் தனது அதிகாரத்துக்கு அப்பால் சென்று செயற்பட்டுள்ளார். தொகுதிவாரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அமைச்சர் விகிதாசார உறுப்பினர்களின் எண்ணிக்கை என்று மாற்றியுள்ளார். விகிதாசார உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தொகுதிவாரி உறுப்பினர்களின் எண்ணிக்கை என்றும் மாற்றியுள்ளார். இது சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கை என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (5,31)

## உள்ளூராட்சித் தேர்தல்:

# வழக்கைத் திரும்பப் பெற்று தேர்தலை நடத்த சமரசமுயற்சி

## ரணில், கரு ஜெயசூரிய, சுமந்திரன் கொண்ட குழுவும் நியமிப்பு

கொழும்பு, நவ. 29
உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்தவேண்டுமென கட்சித் தலைவர்கள் அனைவரும் கூட்டாக விடுத்த வேண்டுகோளை ஏற்ற தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் தலையிட்டு உடனடித் தீர்வைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை இணைத்துக்கொண்டு, தேர்தலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்த தரப்பினருடன் சமரசப் பேச்சுகளை நடத்தவுள்ளதாகத் தலைமை அமைச்சர் ரணில் குறிப்பிட்டார்.

கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை சபாநாயகரின் தலைமையில் அவரது நாடாளுமன்ற அறையில் நடைபெற்றது.

கலந்துகொண்ட கட்சித் தலைவர்கள் பலரும் தேர்தல் உரிய நேரத்தில் காலதாமதமின்றி நடத்தப்படவேண்டுமென வலியுறுத்தியதுடன் தேர்தல் கிரமமாக நடத்தப்படாத பட்சத்தில் சாத்வீகப் போராட்டங்களும், எதிர்ப்புச் செயற்பாடுகளும் நடத்தப்படுமென சுட்டிக் காட்டியுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழு மற்றும் சட்ட மா அதிபர் மற்றும் அந்தத் திணைக்கள அதிகாரிகள் கட்சித் தலைவர்களின் கூட்டத்துக்கு வந்திருந்த அதே வேளை, அவர்களிடமும் இடைக்கிடையே இது விடயத்தில் ஆலோசனை பெறப்பட்டது.

இங்கு கருத்து வெளியிட்ட தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தவர்களுடன் சமரசப் பேச்சுக்களை நடத்த சபாநாயகர் மற்றும் சுமந்திரனுடன் இணைந்து நான் செயற்படவுள்ளேன்.

வழக்குத் தாக்கல் செய்தவர்களுக்கு எவ்வாறான உதவிகளை வழங்குவது என்பது குறித்தும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேச்சு நடத்தப்படும். இதன் முடிவுகள் கட்சித் தலைவர்களுக்கு விரைவில் அறிவிக்கப்படும் - என்றார்.

இதேவேளை இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் சபாநாயகர் அலுவலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மூன்று தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்ற வர்த்தமானிக்கு எதிரான வழக்கைத் துரிதப்படுத்த மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும்.

தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மீளப் பெறவேண்டும்.

மேற்குறித்த இரண்டு வழிகளும் தோல்வி அடைந்தால் 2015ஆம் ஆண்டுக்கான வர்த்தமானியை அடிப்படையாகக் கொண்டு தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்பினை ஆராய்தல். (தற்போது சிக்கலாக உள்ள 64 பல்லினத் தொகுதிகள் தவிர்ந்த ஏனைய தொகுதிகளுக்கு 2015ஆம் ஆண்டு வர்த்தமானியை நடைமுறைப்படுத்த முடியும்)

தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை மீளப் பெற வேண்டும் என்ற இரண்டாவது தீர்மானத்தை முன்னெடுப்பதற்காகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சபாநயகர் கருஜெயசூரிய, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கொண்ட அணி நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது. (5,31)

# வெளிநாட்டுக்கு ஓடிவிடவில்லை அறிவித்தலுடனேயே சென்றேன்

## *சபையில் பைசர் முஸ்தபா தெரிவிப்பு*



கொழும்பு, நவ. 29
நான் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவன். எனது கட்சியின் தலைவர் மைத்திரிபாலவுக்கு அறிவித்து அவரது அனுமதியுடனேயே மோல்ட்டாவுக்குச் சென்றேன். நான் ஓடி மறையவில்லை. உள்ளூராட்சித் தேர்தல் தாமதத்துக்கும் எனக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. வர்த்தமானியில் எந்தப் பிழையும் கிடையாது.

இவ்வாறு உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில், மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்க, பைசர் முஸ்தபா அறிவித்துவிட்டா வெளிநாடு சென்றார் என்று எழுப்பிய கேள்விக்கு, சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல, இல்லை என்று பதிலளித்திருந்தார். அத்துடன் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, வரவு - செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் காலத்தில் அமைச்சர்களை வெளிநாடு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தியிருந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, வெளிநாடு சென்று நாடு திரும்பிய அமைச்சர் பைசர் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும் போது,

நான் எந்தக் காரணத்துக்காகவும் பிரத்தியேக பயணத்தை மேற்கொண்டு வெளிநாடு செல்லவில்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே மோல்ட்டாவுக்குச் சென்றிருந்தேன்.

தலைமை அமைச்சரிடம் அனுமதி கோரவில்லை என்று கூறுகின்றனர். நான் சுதந்திரக் கட்சிப் பிரதிநிதியாவேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையிலும் அரச தலைவர் என்ற வகையிலும் மைத்திரிபால சிறிசேனவின் அனுமதியுடனே மோல்ட்டாவுக்குச்சென்றேன். அதற்கு மாறாக நான் எங்கும் தப்பித்து ஓடவும் இல்லை. ஓடி மறையவும் இல்லை.

நான் 20 வருடமாகச் சட்டத்தரணியாகச் செயற்பட்டு வருகின்றேன். நான் அரச தலைவர் சட்டத்தரணியாகவும்இருக்கிறேன். தற்போது எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரை விடவும் அரச தலைவர் சட்டத்தரணியாக இருப்பது எனக்கு மேலானது.

வர்த்தமானி அறிவித்தல் நீதிமன்றத் தீர்ப்பினாலேயே தாமதமாகியுள்ளது. இந்தத் தீர்ப்புக்கும் எனக்கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது. வர்த்தமானியில் ஏதும் குறைப்பாடு உள்ளதா என்பதனைப் பார்க்கச் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றேன். சட்டமா அதிபர் எல்லை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானியில் எந்தவொரு குறைபாடும் இல்லை என்றே ஆலோசனை வழங்கினார்.

இடைக்காலத் தடை மாத்திரமே உள்ளது. நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு அனைவருக்கும் உரிமை உள்ளது. எனக்கு எதிராக இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புதிய தேர்தல் முறைமைத் தயாரிப்பின் போது நான் சிறுபான்மையினருக்கும்சிறிய கட்சிகளுக்கும் மதிப்பளித்தேன் - என்றார். (5,31)

## கைது

சொகுசு வாகனமொன்றில் சென்று தங்கச் சங்கிலி திருடிய மருத் துவர், அவரது மனைவி மற்றும் முன்னாள்இராணுவ அதிகாரி ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அத்தனகல்ல பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் அணிந்திருந்த தங்கச்சங்கிலியைத் திருடிக் கொண்டு தப்பிச் சென்றபோது மூவரையும் பொலிஸார் மடக்கிப் பிடித்துக் கைது செய்துள்ளனர். (5)

## மைத்திரி மீதான விமர்சனத்தின் எதிரொலி:

# கட்சிச் செயலர், தவிசாளர் அனுமதியின்றி கருத்துச் சொல்லத் தடை

## *ஐ.தே. கட்சிக் கூட்டத்தில் முடிவு*

கொழும்பு, நவ. 29
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைப் பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க விமர்சித்தமையால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து, ஐக்கிய தேசியக் கட்சியினர் கட்சியின் செயலர் அல்லது தவிசாளரின் அனுமதியின்றி செய்தியாளர் சந்திப்பு நடத்தக்கூடாது என்று அந்தக் கட்சியின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கட்சியின் தலைவரும், தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குச் சென்றிருந்தபோது, கட்சியின் தலைமைப் பீடத்தின் அனுமதியில்லாமல் செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பால் பல சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இனிமேல் செய்தியாளர் சந்திப்பு நடத்தப்படுவதானால் கட்சியின் செயலரின் அல்லது தவிசாளரின் அனுமதியோடுதான் நடத்தப்பட முடியும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தலைமை அமைச்சர் ரணில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும், இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா மாதாந்தம் என்னை ஊடகங்களின் ஊடாகத் திட்டித் தீர்க்கின்றார். நான் அவருக்குப் பதிலளிப்பது கிடையாது. அது போன்று நீங்களும் பொறுமையாக இருக்க வேண்டும் - என்றார்.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒரே நாளிலேயே தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கட்சியின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (5,31)

# ஐ.தே.கவின் விரோதிகளுடன் நாங்கள் கூட்டுக்குத் தயார்

## *வாசுதேவ எம்.பி. அறிவிப்பு*

ஐக்கிய தேசியக் கட்சிக்கு விரோதமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இணைத்துக்கொள்ள நாங்கள் தயார். ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிப்பதே எமது நோக்கமாகும். இவ்வாறு ஜனநாயக இடதுசாரி முன்னணியின்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசின் ஒரு பிரிவினர் எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படும் சாத்தியம் இருப்பதாக மக்கள் மத்தியில் பேசப்பட்டு வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி அச்சமடைந்துள்ளது.



ஐக்கிய தேசிய கட்சிக்கு விரோதமானவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இணைத்துக் கொள்வதற்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். தேர்தல் பிற்போடமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்துகின்றது. குற்றத்திலிருந்து தப்புவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி காரணம்கூறிவருகின்றது.

எது எப்படியிருப்பினும், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையிலான பனிப்போர் மூண்டுள்ளது என்பதே உண்மை. இது கூட்டு அரசின் இறுதிக் காலமாகும் - என்றார். (5,31)

# நாட்டைக் குட்டிச்சுவராக்கிய நிலையையே பார்க்கவேண்டும்

போர்க் கதை முக்கியமில்லை
என்கிறார் முன்னாள் ஆட்சியாளர் சந்திரிகா

கொழும்பு, நவ. 29

போரை வெற்றிகொண்ட கதை முக்கியமல்ல. நாட்டைச் சீரழித்த நிலையைப் பார்க்கவேண்டும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

வெயன்கொட பத்தலகெதர போதி மங்களராமய விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு நல்ல குறிக்கோள்கள் இருக்கவேண்டும். இந்த எண்ணம் என்னை மட்டும் வளர்ப்பதற்கானதாகவோ அல்லது எனது பையையோ, சகோதரர்களது பையையோ நிரப்புவதற்கானதாகவோ இருக்கக் கூடாது. அது நாட்டின் எதிர்காலம் கருதியதாக இருக்கவேண்டும்.

இந்தச் சமூகத்தில் நல்ல குறிக்கோள்களையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த நல்ல தலைவர்கள் இருக்கவேண்டும். எல்லா மட்டங்களில் வாழும் மக்களின் நலன்களைக் கருத்தில்கொள்ளும் தலைவர்கள் இருக்கவேண்டும். சிலர் போரை வெற்றி கொண்டதால் நாட்டைக் கேட்கின்றார்கள். ஆனால் போரின் மூன்றில் இரண்டு பங்கை வெற்றி கொண்டவன் நான்.

போரை வெற்றிகொண்ட கதை முக்கியமல்ல. நாட்டைச் சீரழித்த நிலையைப் பார்க்கவேண்டும். இன்னும் எமது நாடு முன்னேறாமல் இருக்க என்ன காரணம். பிரச்சினை இருப்பதற்கு என்ன காரணம். ஆராய வேண்டும். எமது திறைசேரியை முற்றாக இல்லாமல் செய்துவிட்டனர். நாட்டைப் படுபாதாள கஷ்ட நிலைக்குத் தள்ளிவிட்டனர் - என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பெற்றோலிய வளங்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, நாட்டின் இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளன. இந்த ஒன்றிணைவுக் கட்சிகளின் நலனுக்கானதாக இல்லாமல் நாட்டின் நலனுக்கானதாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார். (5)

## வித்தியா வழக்கு விவகாரத்தில்:

# பெண் அமைச்சருக்காக வக்காலத்து வாங்கிய நீதி அமைச்சர் தலதா

கொழும்பு, நவ. 29

வித்தியா கொலை வழக்கின் சந்தேக நபர்களைக் காப்பாற்ற முனைந்த பெண் அமைச்சரின் செயற்பாட்டை, நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள நியாயப்படுத்தும் வகையில் நாடாளுமன்றத்தில் செயற்பட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் மகளிர் மற்றும் சிறுவர் விவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு, சமூக வலுவூட்டல் அமைச்சுக்களான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதம் நடைபெற்றது. மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க உரையாற்றினார்.

வித்தியா என்ற பாடசாலை மாணவி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். இந்தக் கொலை வழக்குக்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்த வழக்கில் தீர்ப்பை வழங்கிய நீதிபதி ஆட்சியில் உள்ள அரசின் பெண் அமைச்சர் ஒருவரின் பெயரையும் குறிப்பிட்டிருந்தார். வழக்கின் முக்கிய சந்தேக நபரைக் காப்பற்ற முனைந்த விடயம் சம்பந்தமாகவே அவர் அதனைத் தெரிவித்திருந்தார். இது நல்லாட்சிக்கு வெட்கமான விடயமாகும். அந்தப் பெண் அமைச்சரின் பெயரை நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனாலும், அவ்வாறு சந்தேக நபருக்கு உதவி செய்ய முனைந்தமையைக் கடுமையாகக் கண்டிக்கின்றேன் - என்று குறிப்பிட்டார்.

நீதி அமைச்சர் தலதா இதன்போது குறுக்கீடு செய்தார். உறுப்பினரே நீங்கள் தவறான அர்த்தப்படுத்தலைச் செய்யவேண்டாம். இது தொடர்பில் நாம் அவதானத்தைச் செலுத்தியிருந்தோம். அமைச்சர் அவ்வாறு காப்பாற்றும் வகையில் செயற்படவில்லை. சந்தேக நபரைச் சட்டத் துறையிடத்தில் ஒப்படைக்காமல் விட்டிருந்தால் அந்த இடத்தில் தாக்க முனைந்தவர்களிடத்தில் அப்படியே விட்டிருந்தால், வழக்கு அன்றே நிறைவடைந்திருக்கும். தற்போது நீதித்துறையூடாகத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் குற்றச் சாட்டுக்களை முன்வைக்காதீர்கள். அதனைத் திருத்திக்கொள்ளுங்கள் என்று கோரினார்.

'நீதிபதி தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது நான் அங்கு சென்றிருந்தேன். அவர் இதனைத் தேடி ஆராயாது பெயர் குறிப்பிட்டிருக்கமாட்டார் அல்லவா?' என்று பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பினார். இந்தச் சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், உறுப்பினரே சற்றுப் பொறுத்துக்கொள்ளுங்கள். எதிர்வரும் 5ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வருகின்றது. அன்று நீதிபதி தீர்ப்பு அறிவிக்கும் வரையில் பொறுங்கள் - என்றார். (5.31)

# சுகாதார சேவைகள் பணிப்பாளராக ஜாசிங்க நியமனம்

கொழும்பு, நவ. 29

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அவரது நியமனத்தை உறுதி செய்துள்ளதாகச் சுகாதார அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன.

தற்போது பதில் சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றும் மருத்துவர் ஜயசுந்தர பண்டார, நேற்றுடன் ஓய்வு பெற்றார். (5.31)

# சு.கவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்ததே ஐ.தே.கட்சிதான்

முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, நவ. 29

மகிந்த ராஜபக்சவின் பின்னர் அவரது சகோதரர்கள்தான் சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கியிருப்பார்கள். அதிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது ஐக்கிய தேசியக் கட்சிதான்.

இவ்வாறு ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொலன்னாவ அரசியல் தொகுதிக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சி கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக எதிர்க்கட்சியிலே இருந்தது. 2015ஆம்ஆண்டு நாங்கள்மேற்கொண்ட பெரிய முயற்சியால் அதிகாரத்துக்கு வர முடிந்தது. அன்று நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டு மட்டத்தில் நாங்கள் ஒதுக்கப்பட்டிருந்தோம். நாங்கள் தனித்து ஆட்சிசெய்ய அதிகாரம் இருந்தாலும் அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு ஆட்சியமைப்பதன் மூலமே நாட்டைப் பாதுகாக்கலாம் என்று கூட்டு அரசை அமைத்தோம். கூட்டு அரசு அமைக்கப்பட்டதால் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கு எங்களால் போதுமானளவு உதவிகளைச் செய்ய முடியவில்லை என்ற குறை இருக்கின்றது. இருப்பினும் பன்னாட்டு மட்டத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நாட்டை, அனைத்து நாடுகளாலும் அங்கீகரிக்கும் நிலைக்குக் கொண்டுவர முடியுமாகியுள்ளது. அதே போன்று பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்வதற்குத் தேவையான அடித்தளத்தை அமைக்க முடியுமாகி இருக்கின்றது.

அன்று நாங்கள் ராஜபக்ச அரசைத் தோற்கடித்ததன் மூலம் மைத்திரிபால சிறிசேனவுக்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முடிந்தது.

இல்லாவிட்டால் மகிந்த ராஜபக்சவுக்குப் பின்னர் பசில் ராஜபக்ச, கோத்தபாய ராஜபக்ச, நாமல் ராஜபக்ச என்று குடும்பத்தினரே தலைவராக வந்திருப்பார்கள்.

மகிந்த ராஜபக்சவின் தலைமையில் பதுங்கிக் கொண்டிருந்த டிலான் பெரேரா போன்றவர்கள் அரச தலைவர் மைத்திரிக்குப் பின்னால் இருந்து கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சிப்பதற்கும் நாங்கள்தான் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

அன்று மைத்திரிபால சிறிசேன அரசிலிருந்து வெளியில்வரும்போது துமிந்த திசாநாயக்க மாத்திரமே வந்தார். தற்போது மைத்திரிபால சிறிசேனவுடன் இருப்பவர்கள் மகிந்த ராஜபக்சவின் காலடியில் இருந்தவர்கள்.

இந்த அரசை நாங்கள் மிகவும் அர்ப்பணிப்புடனேயே பெற்றுக்கொண்டோம். அரசில் இருந்து போறவர்கள் போகலாம். நாங்கள் போகமாட்டோம் - என்றார். (5.31)

# சுதந்திரக் கட்சியின் பிளவினால் மகிந்த ஆட்சிக்கு வரக்கூடும்

*அச்சம் வெளியிடுகிறார் பொன்சேகா*

கொழும்பு, நவ. 29

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபடுவதனால் மகிழ்ச்சியடைய முடியாது. எதிரணியில் பலவீனமாக உள்ள நபர்கள் அடுத்த பத்து ஆண்டுகளில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்க வாய்ப்புள்ளது.

இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

குருநாகல் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீண்டும் ராஜபக்சாக்களின் ஆட்சியை உருவாக்க இடமளிக்க முடியாது. சிறிலங்கா சுதந்திர கட்சி இரண்டாகப் பிளவுபட்டால் எம்மால் தேர்தலில் இலகுவாக வெற்றிகொள்ள முடியும் என்று ஒருபோதும் நினைக்கக்கூடாது. சில சந்தர்ப்பங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அவ்வாறான கருத்துக்களைக் கூறுகின்றனர். நான் அதை விரும்பவில்லை. நாம் தனித்துக் களமிறங்குவதில் குழப்பங்கள் இல்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மகிந்த அணியும் தனித்துப் போட்டியிட்டு, மகிந்த அணி சில சபைகளில் எதிர்க்கட்சியைக் கைப்பற்றினால் அவர்கள் குழப்பங்களை ஏற்படுத்தி மீளவும் ஆட்சியைக் கைப்பற்ற முடியும்.

> “மீண்டும் ராஜபக்சாக்களின் ஆட்சியை உருவாக்க இடமளிக்க முடியாது. சிறிலங்கா சுதந்திர கட்சி இரண்டாகப் பிளவுபட்டால் எம்மால் தேர்தலில் இலகுவாக வெற்றிகொள்ள முடியும் என்று ஒருபோதும் நினைக்கக்கூடாது.

இன்று எதிர்க்கட்சியில் உள்ள நபர்கள் வீழ்ச்சி கண்டிருந்த போதிலும் அடுத்த பத்து ஆண்டுகளில் அல்லது இருபது ஆண்டுகளில் அவர்கள் மீண்டும் பலத்தைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்ற முடியும். எனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபடுவதை நினைத்து எம்மால் மகிழ்ச்சியடைய முடியாது.

ஐக்கிய தேசிய முன்னணியாக நாம் தனித்துப் பலத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளையும் கையாள வேண்டும். நாம் தொடர்ந்தும் கூட்டணி அமைத்துச் செயற்பட வேண்டும் என்ற தேவையும் இல்லை.

அடுத்த தேர்தலில் நாம் தனித்துச் செல்ல முடியுமாயின் அதற்கான வியூகங்களை வகுக்க வேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் நாம் இணைந்து செயற்பட்டதன் காரணத்தால் மக்களாட்சி வெற்றி கொள்ளப்பட்டது. அதனை மறுக்கவும் மறக்கவும் கூடாது - என்றார். (5.31)

## *சாவுத் தண்டனையை சவாலுக்கு உட்படுத்திய*

# துமிந்தவின் மனுமீது மார்ச் 29இல் விசாரணை

கொழும்பு, நவ. 29

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் படுகொலை வழக்கின் குற்றவாளிகளாகக் காணப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட ஐந்து பேரில் நால்வர் தமது சாவுத் தண்டனையை இல்லாமல் செய்யக் கோரி தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை மார்ச் மாதம் 29ஆம் திகதி 5 நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர்நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்மானித்துள்ளது.

அன்றையதினம் மேன்முறையீட்டு மனுதாரர்களான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வா, துசார டிமெல், தெமட்டகொட சமிந்த அல்லது சமிந்த ரவி ஜெயநாத் மற்றும் சரத் பண்டார ஆகியோரை உயர் நீதிமன்றில் முன்னிலையாக அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டது.

**பின்னணி**

2011ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரையின்போது கொழும்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரு குழுக்கள் இடையில் ஏற்பட்ட மோதலில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவைச் சுட்டுக் கொலை செய்ததாகக் குற்றஞ்சுமத்தி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட 12 நபர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்தார். ட்ரயல் அட்பார் முறையில் வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஏழு சந்தேக நபர்களை விடுதலை செய்ய முதலில் தீர்மானித்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, துசார டிமெல், தெமட்டகொட சமிந்த அல்லது சமிந்த ரவி ஜெயநாத், சரத் பண்டார, பிரியந்த ஜனக பண்டார ஆகிய ஐந்து பேரும் குற்றவாளிகளென்று இரண்டு நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். தலைமை நீதிபதி அனைவரையும் நிரபராதி என்று தீர்ப்பு வழங்கினார்.

பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்மானத்துக்கு அமையச் சந்தேக நபர்கள் ஐந்து பேருக்கும் சாவுத் தண்டனை வழங்கப்பட்டது. சாவுத் தண்டனை வழங்கப்பட்ட ஐவரில் ஐந்தாவது குற்றவாளியான பிரியந்த ஜனக பண்டார வழக்கு விசாரணைகளில் முன்னிலையாகாது தொடர்ந்து தலைமறைவாக உள்ள நிலையில், ஏனைய நான்கு பேரும் சாவுத் தண்டனைக் கைதியாக இருந்துகொண்டே தமது தண்டனைக்கு எதிராக உயர் நீதிமன்றில் தமது சட்டத்தரணிகள் ஊடாக மேன்முறையீடு செய்தனர். (5.31)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# காலணிக்கு அளவாக காலைவெட்டும் பழக்கம்

பாடசாலைகளில்வருகைப்பதிவேட்டில்கையெழுத்து வைப்பதற்குப்பதில்விரல்அடையாளத்தைப்பதிவு செய்யும் இயந்திரங்கள் அண்மையில் அறிமுகப்படுத்தப் பட்டன. கொழும்பு அரசின்சுற்றறிக்கையின்அடிப்படையில் இந்த முறைமை செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதை யடுத்து வடக்கு மாகாணத்தில் ஒரு பிரச்சினை எழுந்துள் ளது. பாடசாலை தொடங்கும் நேரமான 7.30 மணிக்கு சரி யாகஅங்குநிற்கமுடியாதநிலைபலபாடசாலைகளில்நிலவு கின்றது என்பதே அந்தப் பிரச்சினை. அதிலும் குறிப்பாகப் போதியளவு போக்குவரத்து வசதிகள் இல்லாத பாடசாலை களின் ஆசிரியர்கள் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்கிறார் கள் என்றும் முறையிடப்படுகின்றது.

இந்தப்பிரச்சினைக்குத்தீர்வுகாணும்முகமாகயோசனைஒன்று ஆராயப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர் வேஸ்வரன்தெரிவித்திருக்கின்றார். அதாவது, போதியபோக்கு வரத்து வசதிகள் இல்லாத இடங்களில் உள்ள பாடசாலைகள் ஆரம்பமாகும் நேரத்தை 8 மணியாக்குவது அந்த யோசனை. தூர இடங்களில் இருந்து வரும் ஆசிரியர்கள் தமது வருகை நேரத்தில் பாதிப்பில்லாமல் முழுச் சம்பளத்தையும் பெறுவ தற்காக இந்த ஏற்பாடு.

இவ்வாறு துன்பத்தை எதிர்கொள்ளும் ஆசிரியர்களின் எண் ணிக்கை என்னவென்பது இதுவரையில் யாராலும் வெளிப் படுத்தப்படவில்லை. எப்படியிருந்தாலும் அவர்கள் கற்பிக் கும் பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் மற்றும் ஏனைய ஆசிரியர்களின்எண்ணிக்கையுடன்ஒப்பிடும்போது இவர்கள் சொற்ப தொகையினராகவே இருப்பர் என்பது திண்ணம். ஆகமொத்தத்தில்சிலரதுதுன்பம்நீங்கவேண்டிப்பலர்தமது வழக்கத்தை, நடைமுறையை மாற்றிக்கொள்ளவேண்டும். இது என்ன வகையில் நியாயம்.

காலுக்களவானகாலணியைத்தெரிவுசெய்வதைவிடுத்துக்கால ணிக்குஅளவாகக்காலைவெட்டுவோம்என்றுநினைப்பதற்கு ஒப்பானது இப்போது ஆராயப்பட்டு வரும் யோசனை. இத் தகையஎண்ணம்முளையிலேயேகிள்ளிஎறியப்படவேண்டும்.


பலமைல்தூரத்தைதுவிச்சக்கரவண்டிமிதித்துவந்தேகற்பித்த ஆசான்கள் 10 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மண் இது. சுமார் 22 மைல் தூரத்தை துவிச்சக்கர வண்டியில் கடந்து வந்தே பணியாற்றிய ஒரு துணைவேந்தர் பணியாற்றிய மண் இது. அந்த மண்ணில் இருந்துகொண்டுதான் நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்லப் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லை என்று சொல்வதையும் கேட்கவேண்டியிருக்கிறது.

ஒரு அரசஊழியர் நேரத்துக்கு வருவதற்கானவழிவகையைத் தேடிக்கொள்வதுஅவரதுபணி. அப்படித்தேடமுடியாதபோது அந்தப்பணியிலிருந்து அவர்விலகிவிடுவதே நேர்மை. அரச வேலையும் வேண்டும், அதுவும் தனக்கு வசதிப்பட்ட வகை யிலும் அது இருக்கவேண்டும் என்று நினைப்பதுதான் வடக் கில் இன்று அரசநிர்வாக வினைத்திறன் இன்மைக்கு முக்கிய காரணம். ஒப்பீட்டளவில் மற்றைய மாகாணங்களில் இந்த நிலை மிகக் குறைவே. காலை 4 மணிக்கே புறப்பட்டு நீண்ட தூரம் பயணித்து சரியான நேரத்தில் தமது பணியிடத்தை அடையும் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்கள் மற்றைய மாகாணங்களில் திறம்படப் பணியாற்றுகிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

எனவே, சில ஆசிரியர்களின் வசதிக்காக அவர்களைப் போல் பலமடங்குஅதிகமானமாணவர்களையும் ஏனைய ஆசிரியர் களையும் துன்பப்படுத்தும் யோசனைகளைக் கல்வி அமைச் சுக் கைவிடவேண்டும். இரண்டு வெவ்வேறு பாடசாலைக ளில் கல்வி கற்கும் பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோ ரின் நிலையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒரு பாட சாலை 7.30 மணிக்கும் மற்றைய பாடசாலை 8 மணிக்கும் ஆரம்பமானால்பெற்றோரின்நிலைஎப்படிப்பட்ட திண்டாட் டமாக இருக்கும், ஒன்றுக்கு இரண்டு மடங்காகப் போக்குவ ரத்துக்குத் தமது சக்தியைச் செலவிட வேண்டி இருக்கும் என்பதைநினைத்துப்பார்க்கவேண்டும். முதன்மைப்பாதை களில் இருந்து பாடசாலைகளுக்கு குறித்த நேரத்தில் பயணிக் கக்கூடிய இணைப்பு வாகனங்களை (உதாரணத்துக்கு முச்சக் கர வண்டிகள்) ஏற்பாடு செய்வது உள்ளிட்ட மாற்று வழிகள் மூலம் ஆசிரியர்கள் நேரத்துக்குப் பாடசாலைக்குச்செல்வதற் கான வழிகளைப் பற்றியே சிந்திக்கவேண்டும். இந்தப் பிரச் சினைகளைக் கருத்திற் கொண்டு நியமனங்கள், இடமாற்றங் களை வடிவமைக்கவேண்டும்.

எப்போதும் அரச ஊழியர்களின் சொகுசை மட்டும் சிந்திக் காதீர்கள் உங்களுக்கு வாக்களித்த பாவப்பட்ட மக்களையும் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.





சிங்கள மூலம்- ஆதிபாத
தமிழில் - வீ.எஸ்.ரீ.

அதிகாரத்தில் இருக்கும் அரசொன்று, பொறுமை காக்க இயலாத அளவுக்கு ஒழுங்கு முறையற்ற ஊழல், அடக்கு முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுமானால், நாட்டுமக்கள் தமதுவாழ்க்கையையேபண யம் வைத்தாவது, குறித்த அந்த அரசைப்பதவியினின் றும் அகற்றிவிடுகிறார்கள். அதன்பின்னர்தம்மால்தேர்ந் தெடுக்கப்படும் புதிய ஆட்சித் தரப்பினரூடாக முன்னைய அரசின் அமைச்சர்கள் மற் றும் அதிகாரிகளால் மேற் கொள்ளப்பட்ட ஊழல்கள் மற்றும் மோசடிகள் தொடர் பான செயற்பாடுகளுக்காக அவர்களை உரிய வகையில் தண்டிக்கும் வரை நாட்டு மக் கள் பொறுமை காத்து புதிய அரசின் செயற்பாடுகளை எதிர்பார்த்துக்காத்திருக்கின்ற னர். ஆனால் முன்னைய ஆட்சியாளர்களது நியாய மற்ற செயற்பாடுகளுக்கான தண்டனைபுதியஆட்சியாளர் களால் பெற்றுக் கொடுக்கப்ப டுவதில்லை என்பது கசப்பா னதொரு உண்மையாகும். தாமதித்த செயற்பாடுகளால் அத்தகைய எதிர்பார்ப்புக்கள் காலப்போக்கில் இழுத்தடிக் கப்படுகின்றன.

இத்தகைய அணுகுமுறை நியாயமானதுதானா? நியாய மற்ற விதத்தில் தம்மிடம் இருந்து வலோற்காரமாகக் கைப்பற்றப்பட்டதமதுசொந்த நிலபுலன்கள் மீண்டும் தமது கைகளுக்குஏதோஒருவகை யில்வந்துசேரும்-கிடைக்கும் என அந்த மக்கள் தரப்பு எதிர் பார்த்துக் காத்திருக்கின்றது. ஆனால் அவர்களது அத்த கையஎதிர்பார்ப்புநிறைவேறு வதற்கான அறிகுறி எதனை யும் அவதானிக்க முடிய வில்லை. இது நியாயமான தொன்றுதானா? தேசியத்து வம், கட்சித்தரப்புக்கள், சாதக பாதகமான விமர்சனங்கள் என்ற இவையெல்லாவற்றுக் கும் மேலாக, அங்கு இனத் துவ அடிப்படை முன்னிலை வகிப்பதால் மேற்கூடியவை யெல்லாம்அடிபட்டுப்போகின் றன.

மேற்குறிப்பிட்ட கருத்து வெளிப்பாடு 'தாரியோ போ' என்பவரது (Accidental DeathofanAnarchist) அக்சி டென்ரல் டெத் ஒவ் அன் அனாசிஸ்ட் என்ற நூலில் குறிப்பிட்டுள்ள ஒன்றாகும்.

### மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தொடர்பாக ரணில் தாமாக முன்வந்து சாட்சியமளிப்பு

கடைசியில் தலைமை அமைச் சர் ரணில் விக்கிரமசிங்க, மத் திய வங்கியின் பிணைமுறை ஊழல் தொடர்பாக விசா ரணை மேற்கொள்வதற் கென அரச தலைவர் நிய மித்த ஆணைக்குழு முன்னி லையில் முன்னிலையாகிச் சாட்சிமளித்துள்ளார். அவர் ஆணைக்குழு முன்னிலை யில்முன்னிலையாகமுன்ன ரும், முன்னிலையாகிய வேளையிலும் சாட்சியம ளித்து முடிந்து வெளியேறிய வேளையிலும், பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. சமூக இணையத்தளங்கள் தற் போது ரணிலை கடுமையாக விமர்சித்து முடித்துள்ளன. ஆயினும் இத்தகைய விமர்ச னங்கள் எவற்றையும் சிறி தேனும் பொருட்படுத்தாமல் ஆணைக்குழு முன் சென்று ரணில் சாட்சியம் அளித்துள் ளார். அதன் மூலம் அரசியல் அரங்கில் அவரொரு துணிச் சலும் மனச்சாட்சியும்மிக்க மனிதராகஆகியுள்ளார். அது மட்டுமன்றி, புதியதொரு அர சியல்கலாசாரத்தையும் அறி முகப்படுத்தி வைத்துள்ளார். அவர் மத்திய வங்கி பிணை முறி ஊழல் தொடர்பில் விசா ரணை ஆணைக்குழுவின் சந்தேகநபராகவோ, பொறுப் புக்கூறத்தக்க ஒருவராகவோ இல்லாமலிருந்த போதிலும், தமது சுயவிருப்பின்படி சாட்சி யமளிக்க முன்வந்திருந்தார். தாம் அரசின் தலைமை அமைச்சராக இருந்தபோதி லும், அவர் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம ளிக்க முன்னிலையானார். விரும்பியிருப்பின் அவர் அத னைத் தவிர்த்தும் இருந்தி ருக்கமுடியும். ஆனால் அவர் அவ்விதம்செயற்படவில்லை. இருந்தபோதிலும் பிணை முறி ஊழல் தொடர்பான விட யம் இத்துடன் முடிவடையப் போவதில்லை.

லஞ்ச ஊழல் ஆணைக்குழு வால் விசாரணைக்கென அழைக்கப்பட்ட அமைச்சர்க ளில் சிலர் ஆணைக்குழு முன்னிலையில்முன்னிலை யாகாது நொண்டிச் சாட்டுக் களை முன்வைத்து விசார ணைக்கு முகம் கொடுப்ப தைத் தவிர்த்துக் கொண்ட னர். தாம் விசாரணைக்கு அழைக்கப்பட்டதால் கோப முற்ற சிலர் கூட்டு எதிரணி பக்கம் சாய்வதாகக் காட்டிக் கொண்டனர். வெற்றிலை வியாபாரியிடம் கூட லஞ்சம் பெற்ற அமைச்சர்கள்கூட இவர்களில் அடங்கியிருந்த னர். உயர் மட்டத்திலிருந்து கீழ்மட்டம்வரைலஞ்சம்தலை விரித்தாடியது.

மிகச்சுத்தமானநாள்களென எண்ணிக் கொண்டு அந்த நாள்கள் குறித்தே தற்போது பேசப்படுகிறது.

### தான் மக்களது பாதுகாவலன் மட்டுமே எனத் தெரிவித்த மகிந்த

"நான் இந்த நாட்டின் அரச னல்ல; வெறும் பாதுகாவ லனே" என்று கூறிக் கொண் டுதான்மகிந்தநாட்டின்நிர்வா கத்தைக் கையேற்றார். தமது முதலாவதுபதவிக்காலத்தின் பெரும் பகுதியை அவர் போரைமுடிவுக்குக்கொண்டு வருவதற்காகவே செலவிட் டார். துண்டு துண்டாகச் சிதற விருந்த நாட்டையே தாம் கையேற்கநேர்ந்ததென அவ் வேளையில்மகிந்ததரப்பினர் கள் மேடைகள் தோறும் பரப் புரை செய்து வந்தனர்.

போரை வெற்றிகொண்டதை யடுத்து துண்டு துண்டாகப் பிளவுபடவிருந்த நாட்டை நாம்ஒன்றிணைத்துள்ளோம் என்றும் அவர்களே கூறிக் கொண்டார்கள். ஆனால் அர சியல் அறிவுமிக்க தரப்பி னரோ, நாட்டைத்தாம் மகிந்த விடம் கையளித்தபோது இருந்த நிலப்பரப்பை அவர் பதவியைவிட்டுவெளியேறிய போதுநாட்டுமக்களானதம்மி டம்முழுமையாகக்கையளித் தாரா? எனக் கேள்வி எழுப்பு கின்றனர். ஆனால் மகிந்த தரப்பினரோ "மகிந்த நாட்டின்

# யார்தான் அந்த திருடர்?

நாட்டின் ஒரு துண்டை எடுத்துச் சென்று விட்டாரா?" என்று குதர்க்கமான விதத்தில் எழுப்பிய கேள்விக்கும் எதிர்த்தரப்பு பதில் வைத்திருந்தது. அவர் அவ்விதம் செய்யாதிருப்பினும், சீனாவுக்குக் கையளித்துச் சென்றுள்ளாரல்லவா? என்ற பதில் மகிந்த தரப்பினர்களது வாயை அடைக்கப்போதுமானதல்லவா? துறைமுகத்தை விற்றது இன்றைய அரசல்லவா? மகிந்த அந்தத் துறைமுகத்தை உருவாக்கியவரல்லவா? என்று வாயடிக்கும் ம்கிந்த தரப்பினர்களுக்குஉண்மையில்இடம்பெற்றது என்னவென்றுதெரியவேதெரியாது.

**சீனாவுக்கோ வேறு நாடொன்றுக்கோ முதலீட்டுக்காக காணி வழங்க முயன்ற மகிந்த அரசு**

2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி கொழும்பு அரச தலைவரது அலுவலக இலச்சினைபொறிக்கப்பட்ட சொத்து உறுதிப் பத்திரத்தில் அரச தலைவரான மகிந்த ராஜபக்சவின் கையொப்பம் இடப்பட்டுள்ளது. அதன்படி 'ஹங்கிரிலா ஹோட்டல்ஸ் லங்கா பிறைவேற் லிமிட்டெட்' என்ற நிறுவனத்துக்கு குறித்ததொரு நிலப்பகுதிஅறுதியாகக்கையளிக்கப்படுவதாகஅந்தஉறுதியில்குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்று மகிந்தவால் சொத்து உறுதிப் பத்திரத்தின் மூலம் அறுதியாக வழங்கப்படவிருந்த குறித்த அந்த நிலத்தொகுதி தற்போது அதே நிறுவ னத்துக்குகுத்தகைக்குமட்டுமேவழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் அன்றைய கையளிப்புக்கும் இன்றைய கையளிப்புக்கும் இடையே மிகப் பெரும் வேறுபாடு உள்ளது. அம்பாந்தோட்டை துறைமுக நிர்மாணப் பணி முடிவடைந்ததுமே குறித்த துறைமுகத்துக்குக் கப்பல்கள் வந்துள்ளனவா?வருகின்றனவா?என்று பலர்கேள்விஎழுப்பினர். அதற்கெல்லாம் மகிந்த தரப்பினர் முன்வைத்த நொண்டிச்சாட்டுக்கள் யாவும் முற்றுமுழுக்கப் பொய்யானவையே. கொழும்புதுறைமுகநகரத்திட்டத்தையும் சீனாவே கையாண்டது. அதற்காகமகிந்தஅரசால்பெருமெடுப்பில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது: விளம்பரப்படுத்தப்பட்டது.

அது குறித்த விவரங்களை நாடாளுமன்றில் முன்வைக்குமாறு அவ்வேளைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிமரசிங்கவால்கோரப்பட்டபோது, மிக விரைவில் விவரங்கள் நாடாளுமன்றில் முன்வைக்கப்படுமென அவ்வேளைய அரசின் தலைமை அமைச்சர் தி.மு.ஜயரத்ன உறுதியளித்த போதிலும், குறித்த தகவல்கள் நாடாளுமன்றத்தில்முன்வைக்கப்படவில்லை. ஆயினும் அரச தலைவர் மகிந்தகுறித்தகொழும்புநகரஅபிவிருத்தித் திட்டம் குறித்து அமைச்சரவைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்திருந்தார். குறித்த அபிவிருத்தித் திட்டத்துக்காக 'சீன கொமினியுகேசன் கொன்ஸ்ரன்சன்' நிறுவனத்தால் ஆயிரத்து 337மில்லியன் அமெரிக்க றொலர் முதலீடு செய்யப்படுமெனவும், அதனைச் செலுத்தி முடிப்பதற்காக சீனாவுக்கு108ஹெக்டயர்அளவான நிலம் வழங்கப்படுமெனவும், தெரிவிக்கப்பட்டிருந்தது. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல் தொடர்புகள் யாவும் தற்போதுமறக்கப்பட்டுவிட்டுள்ளன.

> “நான் இந்த நாட்டின் அரசனல்ல; வெறும் பாதுகாவலனே'' என்று கூறிக் கொண்டுதான் மகிந்த நாட்டின் நிர்வாகத்தைக் கையேற்றார். தமது முதலாவது பதவிக்காலத்தின் பெரும் பகுதியை அவர் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவே செலவிட்டார். துண்டு துண்டாகச் சிதறவிருந்த நாட்டையே நாம் கையேற்க நேர்ந்ததென அவ்வேளையில் மகிந்த தரப்பினர்கள் மேடைகள் தோறும் பரப்புரை செய்து வந்தனர்.




**ஹங்கிரிலா ஹோட்டல் மகிந்த அரசால் சீனாவுக்கு விற்பனை**

அதன் பின்னர் மகிந்த அரசு 'ஷங்கிரிலாஹோட்டல்'வேலைத்திட்டத்தில் தலைப்போட்டது. 44ஆயிரத்து 880 மில்லியன் ரூபா பெறுமதி கொண்டதாக அந்தத் திட்டம் வகுக்கப்பட்டதுடன், அதில்30வெளிநாட்டுப்பணியாளர்களும்432உள்நாட்டுப் பணியாளர்களும் பணியில் அமர்த்தப்படுவரெனவும் திட்டமிடப்பட்டிருந்தது. குறித்ததிட்டத்தில்அரசே நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தது. வழமையில் இத்தகைய திட்டம் முதலீட்டுச்சபையினாலேயேகையாளப்படுவது சட்டப்படியான நடைமுறையாக இருந்து வந்தது. ஆனால் குறித்த நிலப்பகுதியின் உரிமையை முற்றுமுழுதாக ஒரு தரப்புக்கு அறுதியாக வழங்கவோ, குத்தகைக்கு வழங்கவோவான உரிமை முதலீட்டுச் சபைக்கு இல்லாமையால், 'ஹங்கிரிலா ஹோட்டலை' அரசே நேரடியாக விற்பனை செய்தது. காணிகள் ஆணையாளரது 4/10/33433 என்ற இலக்கம் கொண்ட காணி உறுதி மூலம் இந்த உரிமை கைமாற்று உறுதியில் 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28ஆம் திகதி அரச தலைவர் அலுவலக முத்திரை இடப்பட்டு அரச தலைவரால் கையெழுத்திடப்பட்டிருந்தது. அதற்காக75மில்லியன்அமெரிக்க டொலர்(ரூபா8ஆயிரத்து250ரூபா மில்லியன்) அந்தக் கைமாற்று உறுதிக்காகஅரசுக்குவழங்கப்பட்டிருந்தது. தற்போது இலங்கை மத்திய வங்கி பிணைமுறிஊழல்தொடர்பில்ஐ.தே.கட்சியின் தலையே உருள்கிறது.

**அர்ஜுன அலோசியஸ்ஸுடன் தொடர்பு வைத்திருந்தோர் குறித்த சந்தேகம் தொடர்கிறது**

அர்ஜுன அலோசியஸ்ஸுடன் தொலைபேசித்தொடர்புமேற்கொண்டோர்ஐ.தே.கட்சியைச்சேர்ந்தவர்கள் மட்டும்தானா எனத் தேடித் துருவுவதும் ஒரு வழிக்கு நல்லதே. தற்போது அதிகாரம் இழந்துள்ள தரப்பைச்சேர்ந்தபலர்அர்ஜுனஅலோசியஸ்ஸுக்கு வேண்டப்பட்டவர்களே. அவர்களில் பலர் மிக நீண்டகாலமாகவேஅலோசியஸ்ஸுடன்தொடர்பு பேணி வருபவர்கள். காலத்துக்குக் காலம் அவர்கள் மேற்கொண்ட ஊழல்கள் யாவும் தற்போதுகூட வெளிக்கொணரப்படாமலேயேஉள்ளன.

அந்தவகையில்இன்றுதிருடர்என்ற முத்திரை, உண்மையானதிருடருக்கு குத்தப்பட்டிருக்காதிருக்கக் கூடும். சிலவேளை உண்மையான திருடர், மற்றவர்களுக்குத் திருட்டுப்பட்டம் கட்டி குற்றம்சாட்டிக் கொண்டிருக்கவும் கூடும். உண்மை என்னவென்பதனை காலம்தான் வெளிக்கொணர வேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### இது நியாயம் தானா?

யாழ்ப்பாணம் –வசாவிளான் இடையேயான (வழித்தட இல:764) இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்சேவைகள் அதற்கெனக் குறித்தொதுக்கப்பட்ட நேர சூசிகைகளுக்கமைய இடம் பெற்று வருகின்றன. இவற்றில் தனியார் பஸ் சேவை ,யாழ்ப்பாணத்திலிருந்து மாலை 7.00 மணிக்குப் புறப்படும் பஸ் சேவையுடன் நிறுத்தப்படுகிறது.

மாலை 7.00 மணிக்குப் பின்னர் இ.போ.ச வினால் முறையே 7.20,8.00,8.40 மணிக்கென தினமும் மூன்று சேவைகள் நடத்தப்படுகின்றன. இயந்திரக் கோளாறு காரணமாக குறித்ததொரு பஸ் சேவை தடைப்பட்டாலன்றி, ஏனைய சந்தர்ப்பங்களில் இம் மூன்று சேவைகளும் குறித்த நேரத்துக்கு முந்தாமலும் பிந்தாமலும் இடம் பெறுவது வழமையானதொன்று. அலுவலக ஊழியர்கள்,வர்த்தக நிலையங்களில் வேலை செய்வோரென இருபாலாரும் இந்த மூன்று சேவைகளையும் நம்பிச்செயற்படுவதால் அவை உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியது அத்தியாவசியமானதும் கூட.

கடந்த 22-11-2017 புதன்கிழமை இரவு 8.00 மணிக்கு யாழ். பஸ்நிலையத்திலிருந்து புறப்பட்டுச்செல்லும் பஸ்சில் பயணம்செய்யவென 7.45 மணிக்கு யாழ் பஸ் நிலையம் சென்ற எனக்கு, 8.00 மணிக்கு புறப்பட வேண்டிய பஸ்புறப்பட்டுச்சென்றது விட்டதாகத்தெரிவிக்கப்பட்டது.வீட்டில்காய்ச்சலால்பீடிக்கப்பட்டிருந்தமனைவியை தனியார் வைத்திய நிலையத்துக்குக் கூட்டிச் செல்லும் அவசரத்தில் இருந்த நான் ,நேரத்துக்கு முன்பாக பஸ் சேவையை அனுமதித்த நேரக்கணிப்பாளரிடம் எனது ஆட்சேபனையைத் தெரிவித்தேன். பஸ்நிலைய செயற்படுத்தல் அலுவலக உத்தியோகத்தர்களும் அப்போதைய நேரம் 7.50 என்பதை உறுதிப்படுத்தினர். ஆனால் குறித்த நேரக்கணிப்பாளரோ தனது தவறை ஏற்றுக் கொள்ளாது, குறித்த பஸ்ஸின் சாரதி காய்ச்சலால் அவதிப்பட்டதாலேயேதான் பஸ்ஸை குறித்த நேரத்திற்கு முன்பாக புறப்பட்டுச்செல்ல அனுமதித்ததாக பொறுப்பற்றவிதத்தில் பதிலளித்தார். குறித்த பஸ்ஸின் இலக்கம்.NA 7021என எனக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும் குறித்த நேரக்கணிப்பாளரது நடவடிக்கையை அவதானித்த எனக்கு அதுவும் வெறும் சுத்துமாத்தாகத் தான் இருக்குமென எண்ணத்தோன்றியது.

குறித்த நேரக்கணிப்பாளர் இ.போ.ச. ஊழியர்களது சிரமங்கள், கஷ்டங்கள் குறித்து அக்கறைஎடுத்து செயற்படுவது குறித்துப் பாராட்டப்பட வேண்டியிருப்பினும், பொது மக்களது அவசியமான போக்குவரத்து சேவையின் விதிமுறைகளைமீறி, தான்தோன்றித்தனமாக தன்னிச்சைப்போக்கில் செயற்பட்ட அவரது நடைமுறை கண்டிக்கத்தக்கது :மேலிடத்தின் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியது. ஆனால், இப்போதெல்லாம் எவர் தான் பொது மக்களது சிரமங்கள் குறித்து கவலைப்படுகிறார்கள்? ஒரு வேளை வீட்டுக்குப்போய் ஓய்வெடுக்க வேண்டிய வயதிலிருக்கும் அவரது இரக்ககுணம் , இ.போ.ச. ஊழியர்கள் மீதான அக்கறை குறித்து கணக்கில் எடுத்துத்தான் இ.போ.ச. அதிகாரத்தரப்பு அவரைத் தொடர்ந்தும் சேவையில் வைத்துள்ளதோ நானறியேன்? இத்தனைக்கும் வயதான போதிலும் அவர் குறிப்பிட்ட அன்றைய தினம் வலு 'உசாராக'த்தான் எனது முறைப்பாடு தொடர்பாகதனது விளக்கத்தை முன்வைத்ததை அவதானித்தேன். அவர்தொடர்ந்தும்அதேஉசாருடன்சேவையை முன்னெடுக்க வேண்டும்.

இப்படியானவர்களை தத்தமது தரப்புக்கள் சார்பாக எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் அரசியல் கட்சிகளோ,சுயேட்சைக் குழுக்களோ களமிறக்கினால் இத்தகையோரூடாக தரப்புக்களுக்கு வெற்றிநிச்சயம் .நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை கிட்டும்

எஸ்.ரீ.ராஜா, உரும்பிராய்.

# வாகன வரி செலுத்தும் சலுகைக்காலம் 30ஆம் திகதி நிறைவு

## மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தகவல்

சொகுசு வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிப் பணத்தை செலுத்தத் தவறிய வாகன உரிமையாளர்களுக்கு அதனை செலுத்துவதற்கு வழங்கப்பட்டிருந்த சலுகைக் காலம் நாளை 30 ஆம் திகதியுடன் நிறைவுறுவதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிரி,

"அறவிடப்படும் வரியில் 50 வீதம் அபராதத் தொகையாக கொள்ளப்படும். எனினும், கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்பட்ட கால அவகாசத்தினுள் விதிக்கப்படும் அபராதத்தொகையை 5 வீதத்தால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், '2000 சிசி' இயந்திர வலுக் கொண்ட பெற்றோல் வாகனங்கள் மற்றும் '2500 சிசி' இயந்திர வலுவுக்கு மேற்பட்ட டீசல் வாகனங்கள் சொகுசு வாகன வகைப்பாட்டினுள் உள்ளடக்கப்படும்.




'1800 சிசி' இயந்திர வலுவுக்கு மேற்பட்ட பெற்றோல் வாகனங்கள் மற்றும் '2200 சிசி' இயந்திர வலுவுக்கு மேற்பட்ட டீசல் வாகனங்கள் அரை சொகுசு வாகன வகைப்பாட்டினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன." - என்றார்.

இதேவேளை வாகனப் பதிவுகள்கடந்தஆண்டை விட நடப்பாண்டில் 7.3 வீதத்தால் அதிகரித்துள்ளது. வன்கள், 135.6 வீதமாகவும், லொறிகள் 833.9 வீதமாகவும், பஸ் வண்டிகள் 10.8 வீதமா கவும் பதிவாகியுள்ளன. இலங்கை போக்குவரத்து சபை யின் வருமானம் 2.8 வீதத்தால் அதிகரித்துள்ளது போன்ற தகவல்களை தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் வெளிப்படுத்தியுள்ளது. (ஓ)

# ஏசியன் பெயின்ட்ஸ் 'கலர் ஐடியா' காட்சியகம் யாழில் திறந்து வைப்பு

*இலங்கையில் ஐந்தாவது காட்சியகமாக அமைவு*




வர்ணத்தை ஒரு உற்பத்தியாக அன்றி அதை ஒரு கருப்பொருளாக கொண்டு ஏசியன் பெயின்ட்ஸ் தமது 'கலர் ஐடியா' காட்சியகத்தை யாழில் திறந்து வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் உள்ள ஜவ்னா ஹாட்வெயார் நிறுவனத்தில் அமைந்துள்ள இந்தக் காட்சியகம், பெயின்ட் உலகில் வாடிக்கையாளர்கள் தமது விரிவான எண்ணங்களை சரியான முறையில் கலப்பதற்கு உதவும் வகையில் அமைவு பெற்றுள்ளது. குறிப்பாக, ஏஷியன் பெயின்ட்ஸின் உள்ளக மற்றும் வெளியக எமல்ஸன் வகைகளின் கலப்பை காட்சிப்படுத்தும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. 'றோயால் லக்ஷரி இன்டீரியர் எமல்ஸன்' மற்றும் 'ஏபெக்ஷ அல்டிமா எக்ஸ்டிரியர் எமல்ஸன்' வகைகளையும் உள்ளடக்கியதாக இது அமைந்துள்ளது.

மேலும் இந்தப் புதிய 'கலர் ஐடியா' காட்சியகம், ஏஷியன் பெயின்ட்ஸின் உள்ளக சுவர்களுக்கான 'றோயால் பிளே முடிவு' வடிவமைப்புகள், இத்தாலியின் 'றென்னர் வுட் பினிஷெஸ்', 'ஸ்மார்ட் கெயார் நீர் பாதுகாப்பு' வகைகள் என்பவற்றையும் உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமையப்பெற்றுள்ள 'கலர் ஐடியா' காட்சியகத்தின் ஆரம்பம் பற்றி கருத்து வெளியிட்ட ஏஷியன் பெயின்ட்ஸின் தேசிய விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஏ.கே.பரந்தாமன்,

"எம் எல்லோரையும் பொறுத்தவரையில் வர்ணத் தெரிவானது மிகவும் தனிப்பட்ட ஒரு விடயமாகும். இந்தப் புதிய கலர் ஐடியா காட்சியகத்தின் ஆரம்பம் மூலம் யாழ்ப்பாணத்திலும், அதனை அண்மித்த பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு தமது விருப்புக்குரிய வர்ணங்களைத் தெரிவு செய்யும் அனுபவத்தை நாம் அளிக்கவுள்ளோம். நவீன வர்ணப்பூச்சு முடிவுகள் மற்றும் மாற்றங்களுக்கு ஏற்ற வர்ணக் கலப்புக்கள், தமது தனிப்பட்ட விருப்பு, முன்னுரிமை, சுவை என்பனவற்றுக்கு ஏற்றவிதமான தெரிவுகளுக்கும் நாம் இடமளிக்கிறோம்." - என்றார். (ஓ)

> பாரம்பரியமான பெயின்ட் விற்பனை முறையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட விதமாக இலங்கையில் ஏஷியன் பெயின்ட்ஸ் அமைத்துக்கொண்டுள்ள ஐந்தாவது கலர் ஐடியா காட்சியகமாக இது அமைந்துள்ளது. இங்கு வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு வர்ணம் பூசப்பட்ட கூடம், சமையல் பகுதி, படுக்கை அறை எனப் பல நுண் மாதரிகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. வித்தியாசமான வர்ணச் சேர்க்கைகள், சரி செய்யக் கூடிய ஒளியமைப்பு முறைகள் என்பன இவற்றில் உள்ளடங்கியுள்ளன.

BOI
SRI LANKA

# பன்னாடுகளின் நேரடி முதலீடுகள் 1.5 பில்லியனாகப் பதிவு

*முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் தலைவர் கருத்து*

இலங்கையில் நடப்பு வருடத்தில் பன்னாடுகள் மேற்கொண்ட நேரடித்தன்மைவாய்ந்த முதலீடுகளின் தொகை மதிப்பீடு 1.5 பில்லியன் டொலர்களாக அமைந்துள்ளது.

இந்தத் தகவலை முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் தலைவர் துமிந்திர ரத்நாயக்க வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர்,

"கடந்த ஆண்டு பன்னாடுகளின் நேரடித் தன்மை வாய்ந்த முதலீடுகளின் தொகை மதிப்பீடு 80 பில்லியன் டொலர்களாக அமைந்திருந்தது. இவ்வாண்டு முதலீட்டில் வீழ்ச்சிநிலை ஏற்பட்டுள்ளது. பன்னாடுகளின் நேரடித் தன்மை வாய்ந்த முதலீடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு முதலீடுகளின் தொகையை 5 பில்லியன் டொலர்களால் அதிகரிக்க எதிர்பார்த்துள்ளோம்." - என்றார். (ஓ)

# சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவும் 'பிஸ் கிளப்' அறிமுகம்

*கொமர்சல் வங்கி ஆரம்பித்தது*

COMMERCIAL BANK

இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு உதவும் விதமாக 'பிஸ் கிளப்' (Biz Club) செயற்றிட்டத்தினை கொமர்சல் வங்கி அறிமுகம் செய்துள்ளது.

தொழில்முயற்சியாளர்களுக்கு விரிவான வலையமைப்பு வசதிகளும், ஏனைய பல நன்மைகளும் இதனூடே வழங்கப்படவுள்ளன.

புதிய வர்த்தக வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மை வாடிக்கையாளர்களை ஒருங்கிணைப்பதில் இந்தப் புதிய 'வர்த்தக கழகம்' கவனம் செலுத்தவுள்ளது. கடன் வழங்கலுக்கு அப்பாலான ஆதரவுகளை வழங்குவதிலும் கவனம் செலுத்தப்படும் எனவும் வங்கி அறிவித்துள்ளது.

கொமர்சல் வங்கி ஆரம்பித்துள்ள இந்தப் புதிய செயற்றிட்டம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள வங்கியின் முதன்மைச் செயற்பாட்டு அதிகாரி எஸ்.ரெங்கநாதன்,

"வளர்ந்து வரும் எமது வர்த்தக அமைப்புக்கள் பொருளாதாரத்துக்குச் செலுத்தி வரும் அளப்பரிய பங்களிப்பை வங்கி நன்கு உணர்ந்துகொண்டுள்ளது. வருங்காலத்தில் இந்தச் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளே நாட்டின் மிகப்பெரிய நிறுவனங்களாக வளர்ச்சி அடையவுள்ளன. வளர்ச்சி அடைந்து வரும் வர்த்தக நிறுவன்ங்களை ஒன்றோடு ஒன்று ஒருங்கிணைப்பதும், அவற்றை உலகின் பெரிய வர்த்தக நிறுவனங்களோடு தொடர்புபடுத்துவதுமான ஒரு முயற்சியே இந்த 'பிஸ் கிளப்'. அத்தோடு ஒரே விதமான சிந்தனை கொண்ட சமூகத்தோடு தொடர்புபடுவதன் மூலம் அவர்களுக்கு கிடைக்கும் நன்மைகளை அனுபவிக்கவும் இது வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தேசிய பொருளாதாரத்துக்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் வழங்கும் அளப்பரிய பங்களிப்பை அங்கிகரித்து மதிப்புறுத்துவதே எமது நோக்கம்." என்றார்.

மேலும், இந்த 'பிஸ் கிளப்' இல் நான்கு வகையான அங்கத்துவங்கள் வழங்கப்படவுள்ளன. பிரீமியர், பிளாட்டினம், தங்கம் மற்றும் வெள்ளி என அவை அமையவுள்ளன. வெவ்வேறு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி வாடிக்கையாளர்களின் தேவைகளை இனம் கண்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கும் நோக்கில் இந்த அங்கத்துவ வகைப்படுத்தல்கள் அமையவுள்ளன. ஒவ்வொரு வாடிக்கையாளர் பிரிவுக்கும் தேவையான உதவிகளை முறைப்படி வழங்க இது உதவி புரியும். அத்தோடு இந்த வர்த்தக முயற்சிகளை வலுவூட்டி அவற்றை மேம்படுத்தவும் இந்த வகைப்படுத்தல் சிறந்த ஏற்பாடாக முதன்மை பெறுகிறது. (ஓ)

# நுகர்வோர் விலை மாதிரிகளின் மதிப்பீடு அதிகரித்துள்ளது

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மேற்கொண்டதான அளவீடுகளின் பிரகாரம் இலங்கையில் நுகர்வோர் விலை மாதிரிகள் கடந்த ஆறு மாத காலப்பகுதியில் துரித அதிகரிப்பினை வெளிக்காட்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்திலே நுகர்வோர் விலை மாதிரிகள் 5.5 வீத அதிகரிப்பாக பதிவாகியுள்ளது. குறிப்பாக கடந்த டிசெம்பர் மாதத்திலே மேற்படி மாதிரியானது 4.5 வீதமாகப் பதிவாகியிருந்தது. அத்துடன் மீள் பார்வைக்குட்படுத்தப்பட்ட ஆண்டிறுதி அறிக்கை மற்றும் சந்தைப் பரம்பல் என்பவற்றின் கீழ் இந்த மாற்றங்கள் கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரியப்படுத்தியுள்ளது.

உணவுப்பொருள்கள், எரிபொருள், போக்குவரத்து, அரிசி மற்றும் தேங்காய் தவிர்ந்த அடிப்படைப் பணவீக்கம் என்பது கடந்த ஜனவரி மாதத்தில் 7 வீதமான அதிகரிப்பினை பதிவு செய்துள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் காணப்பட்ட 5.8 வீத பணவீக்க மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையிலேயே இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது. (ஓ)

# தீபகற்பப் பதற்றத்துக்கு அமெரிக்காவே காரணம்

## ரஷ்யா குற்றச்சாட்டு





சியோல், நவ. 29
கொரிய தீபகற்ப பதற்றத்துக்கு அமெரிக்காவே காரணம் என்று ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.
வடகொரியா கடந்த செப்ரெம்பர் மாதம் மூன்றாம் திகதி ஐதரசன் குண்டுச் சோதனையை நடத்தியது. இதைத் தொடர்ந்து கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும் சோதனை செய்தது. இதற்குப் பதிலடியாக அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை ஐ.நா. சபை விதித்துள்ளது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் இணைந்து போர் ஒத்திகையிலும் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் பின்னணியில் தென்கொரியத் தலைநகர் சியோலில் நேற்றுமுன்தினம் நடந்த கருத்தரங்கில் ரஷ்ய அயலுறவுத்துறை அமைச்சர் இகோர் மோர்குலோவ் பங்கேற்றுப் பேசினார்.
"வடகொரியா அணு ஆயுதச் சோதனைகளை நடத்தக்கூடாது என்று ரஷ்யா கண்டித்துள்ளது. கடந்த 2 மாதங்களாக வடகொரியா எவ்வித அசாதாரண நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. அதேநேரம் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பதற்றத்தை அதிகரிக்கும் வகையில் போர் ஒத்திகைகளில் ஈடுபட்டு வருகின்றன.
வடகொரியாவுடனான அமைதிப் பேச்சுக்கு தென்கொரியா தயாராக உள்ளது. ஆனால் அமெரிக்காவின் பிடிவாதத்தால் பேச்சை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.
கொரியத் தீபகற்பத்தில் பதற்றம் நீடிப்பதற்கு அமெரிக்காவே காரணம். இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண ரஷ்யத் தரப்பில் அமைதித் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. இதற்கும் அமெரிக்கா இன்னமும் பதில் அளிக்கவில்லை. இந்த விவகாரத்தில் ரஷ்யா கண்ணை மூடிக் கொண்டிருக்காது" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)



## தான் இறந்த பின்பும் மகளுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் தந்தை

வொஷிங்டன், நவ. 29
தான் இறந்த பின்பும் தனது மகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து வருகிறார் தந்தையொருவர். இந்த உருக்கமான சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்று வருகிறது.
அமெரிக்காவின் டென்னிசி மாகாணத்தைச் சேர்ந்தவர் மைக்கல். இவர் தனது மகளான பெய்லி செல்லருக்கு 21 வயது ஆகும் வரை அவரது ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் மலர்ச் செண்டு வழங்குவதாக வாக்குறுதி வழங்கியிருந்தார்.

**அவர் இறப்பதற்கு முன்பு, ஒவ்வொரு ஆண்டும் எனது பிறந்த நாளன்று மலர்ச்செண்டும், அவரது வாழ்த்தும் கிடைக்கும் வகையில் பணம் செலுத்திவிட்டு உயிரிழந்தார்.**

ஆனால் பெய்லிக்கு 16 வயது இருக்கும்போது மைக்கல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். தனது மகளுக்குத் தான் அளித்த வழங்கிய வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாமல் ஆகிவிடுமா? என்று நினைத்த மைக்கல் தனது இறப்புக்குப் பிறகு தனது மகளுக்கு மலர்ச் செண்டுகள் மற்றும் தனது வாழ்த்து செய்தி கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டு உயிரிழந்தார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தனது 21ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய பெய்லி தனது தந்தை தனக்கு அனுப்பியுள்ள கடைசி மலர்ச்செண்டு, வாழ்த்து செய்தியை தனது கீச்சகப் பக்கத்தில் பதிவேற்றியிருந்தார். இந்தப் பதிவு சமூக வலைத்தளங்களில் தற்போது வைரலாகியுள்ளது.
அந்தப் பதிவில் பெய்லி, 'என்னுடைய தந்தை எனக்கு 16 வயதாக இருக்கும்போது புற்று நோயால் இறந்து விட்டார். அவர் இறப்பதற்கு முன்பு, ஒவ்வொரு ஆண்டும் எனது பிறந்த நாளன்று மலர்ச்செண்டும், அவரது வாழ்த்தும் கிடைக்கும் வகையில் பணம் செலுத்தி விட்டு உயிரிழந்தார். இது என்னுடைய 21ஆவது பிறந்தநாள். எனது அப்பாவிடம் இருந்துவரும் கடைசி வாழ்த்து. உங்களது இழப்பை உணர்கிறேன் அப்பா என்று பதிவிட்டுள்ளார். (ம)



## பப்புவாவில் நிலநடுக்கம்

பப்புவா நியூ கினியா தீவில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 4.8 அளவுகளாகப் பதிவானது.
இயாலிபு நகருக்கு தெற்கே சுமார் 59 கிலோ மீற்றர் தொலைவிலும், கடலுக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.
இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து உடனடியாக எந்த தகவலும் வெளியாகவில்லை. பப்புவாவில் கடந்த 1998ஆம் ஆண்டு 7 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து சுமார் 2 ஆயிரத்து 100 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரஷ்யாவின் தாக்குதலில் உயிரிழப்பு 54 ஆனது

டமஸ்கஸ், நவ. 29
சிரியாவில் ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை 54ஆக அதிகரித்தது.
சிரியாவில் செயற்பட்டுவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழுவுக்கு எதிராகவும், சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவுக்கு எதிராகவும் ரஷ்யா போரிட்டு வருகிறது. சிரியாவின் வடகிழக்கில் உள்ள டெர் எஸர் பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது. இந்தத் தாக்குதலில் 34 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்ட நிலையில் இரண்டாம் கட்டத் தகவல் உயிரிழப்பு 54 என்று குறிப்பிட்டது. (ம)





அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகையில் கிறிஸ்மஸ் தினக் கொண்டாட்டங்கள் தற்போதே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க அதிபர் ட்ரம்பின் மனைவி மெலனியா ட்ரம்ப், கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும் ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (ம)

## எகிப்தில் தாக்குதல் உயிரிழப்பு 309 ஆனது

கெய்ரோ, நவ. 29
எகிப்து நாட்டின் வடக்கு சினாய் பகுதியில் உள்ள மசூதியொன்றில் ஆயுததாரிகளால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 309 ஆக அதிகரித்துள்ளது.
தொழுகை நேரத்தில் நூற்றுக் கணக்கானவர்கள் திரண்டிருந்த போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. 305 பேர் உயிரிழந்தனர் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் மேலும் நான்கு பேர் உயிரிழந்ததை அடுத்து உயிரிழப்பு 309 ஆக அதிகரித்தது. (ம)





பாகிஸ்தானின் அமைச்சர் ஹமீட் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி அந்த நாட்டின் தலைநகர் இஸ்லாமபாத் நகரில், நடத்தப்பட்ட போராட்டங்களின் ஒளிப்படத்தை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது. (ம)

## தென்னாபிரிக்கப் பெண் பிரபஞ்ச அழகியானார்

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நெல் பீற்றர்ஸ் பிரபஞ்ச அழகியாக (மிஸ் யுனிவர்ஸ்) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அமெரிக்காவின் லொஸ் வெகாஸில் நடைபெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டியில் 22 வயதான பிற்றர்ஸ் மகுடத்தைத் தனதாக்கினார். பல்வேறு நாடுகளிலிருந்து 92 பெண்கள் கலந்துகொண்ட இந்தப் போட்டியில் இரண்டாவது இடம் கொலம்பியாவின் லாரா கோன்செலஸ்க்கும், மூன்றாவது இடம் ஜமைக்காவின் டாவினா பென்னட்டுக்கும் கிடைத்தது. (ம)





## போராட்டத்தை அடுத்து பாகிஸ்தான் அமைச்சர் விலகல்

**கலவரத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். நிலமை மேலும் மோசமடையலாம் என்று எச்சரிக்கப்பட்டது. இதையடுத்து பதவி விலகுவதாக அறிவித்தார் ஹமீட்**

இஸ்லாமபாத், நவ. 29
பாகிஸ்தான் அமைச்சர் ஜாகித் ஹமீட், பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு நடத்தப்பட்ட போராட்டம் கலவரமாக மாறியதை அடுத்து, அவர் நேற்றுமுன்தினம் பதவி விலகினார்.
பாகிஸ்தானில் தேர்தலின் போது வேட்பாளர்கள் மத அடிப்படையில் தெரிவு செய்து கொள்ள வேண்டிய திருத்த பிரமாணத்தை சட்டத்துறை அமைச்சர் ஜாகித் ஹமீட் மேற்கொள்ளவில்லை. இதனால் அவர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி தலைநகர் இஸ்லாமாபாத்தில் கடந்த ஒரு வாரமாக தெக்ரிக் இ லபாயிக் ரா ரசூல் அல்லா அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இஸ்லாமபாத்தின் இயல்பு நிலை முடங்கியது. இந்தக் கலவரத்தில் சிக்கி 10 பேர் உயிரிழந்தனர். நிலமை மேலும் மோசமடையலாம் என்று எச்சரிக்கப்பட்டது. இதையடுத்து பதவி விலகுவதாக அறிவித்தார் ஹமீட். (ம)

### ரொஹிங்யர்கள் விவகாரம் தொடர்பில்

# பாப்பரசர் - சூகி முக்கியசந்திப்பு



யாங்கூன், நவ. 29
ரொஹிங்யர்கள் விவகாரம் தொடர்பில் பாப்பரசர் பிரான்சிஸ், மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகி ஆகியோருக்கு இடையில் இன்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
பாப்பரசர் பிரான்சிஸ் 3 நாள்கள் பயணமாக மியன்மாருக்குச் சென்றுள்ளார். தனது பயணத்தின் மூன்றாம் நாளான இன்று அவர் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகியைச் சந்திக்கிறார். இந்தச் சந்திப்பின் போது ரொஹிங்யர்கள் விவகாரம் தொடர்பில் பாப்பரசர் ஆலோசனை நடத்துவார் என்று அறியவருகிறது. சூகியுடன் மட்டுமல்லாது தலைமை இராணுவத் தளபதியுடனும் பாப்பரசர் சந்திப்பு நடத்தவுள்ளார். மியன்மார் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு பாப்பரசர் பங்களாதேஷுக்குச் செல்லவுள்ளார். அங்கும் ரொஹிங்யர்கள் விவகாரம் தொடர்பிலேயே அவர் கூடுதல் கரிசணை காட்டுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பௌத்த நாடான மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். இவர்கள் ரக்கினே மாகாணத்தில் வாழ்கின்றனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது.
கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதையடுத்து மியன்மாரில் அப்பாவி ரொஹிங்ய இஸ்லாமியர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர்.
சுமார் 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர். தற்போதும் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான ரொஹிங்யர்கள் மியன்மார் நோக்கிச் சென்றவண்ணம் உள்ளனர்.
இது தொடர்பாக சூகிக்கும் பங்களாதேஷ் பிரதிநிதிகளுக்கும் இடையில் சந்திப்பொன்று அண்மையில் இடம் பெற்றது.
இந்தச் சந்திப்பில் ரொஹிங்யர்களை திரும்பி அழைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சூகி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வெடிக்க ஆரம்பித்தது அகுங்



இந்தோனேசியாவின் பாலித் தீவிலுள்ள அகுங் எரிமலை, வெடிக்க ஆரம்பித்துள்ளது. இதையடுத்து எரிமலையிலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவுக்குள் இருப்பவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.
இந்தோனேசியாவின் பாலித் தீவிலுள்ளது அகுங் எரிமலை. கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து சீற்றமடைந்து வந்த இந்த எரிமலை தற்போது வெடிக்க ஆரம்பித்துள்ளது. சுமார் 4 ஆயிரம் மீற்றர் உயரத்துக்கு கரும் புகை ஏழுந்துள்ளதால் பாலியினூடாக வானூர்திப் போக்குவரத்துக்கள் கைவிடப்பட்டுள்ளன. பாலியின் கிழக்கு பகுதியில் உள்ள லோம்போக் தீவில் இருக்கும் பன்னாட்டு வானூர்தி நிலையம் முழுமையாக மூடப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில் தீவிர நிலையில் சுமார் 130 எரிமலைகள் உள்ளன. 1963ஆம் ஆண்டு, கடைசியாக அகுங் மலை வெடித்துச் சிதறியது. இதன்போது ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாறு பெரிய வெடிப்பு நிகழ்ந்தால் அசம்பாவிதம் எதுவும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே முன்னெச்சரிக்கையாக மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவ்வாறு வெளியேற மறுத்தவர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



நீ நண்பனாக இரு. உனக்கு நண்பன் இருக்க வேண்டும் என ஆசைகொள்ளாதே!

- ஹிட்லர்



# சிவபக்தியின் பயன் பே(கா)ணும் காளமேகனார்

## தமிழ் இன்பச் சுவை கொ(க)ண்ட தனித்துவக் கவியாளன்

வளவை வளவன்

சைவசமயிகள் தமது முழு முதற்கடவுளாக சிவப்பரம் பொருளையே மேன்மையுற அருவுருவ வடிமாக எழுந்தருளல் செய்து வழிபாடு இயற்றுகின்றனர். காலங்காலமாக இந்தப் பக்தி இயல் நடைமுறை பின்பற்றப்பட்டும்,மகத்துவம் செய்யப்பட்டும் வருகிறது.

**சிவ பக்தியும் நவக்கிரக மகிமையும்**

அடியவர்கள்மனதில்முழுநம்பிக்கையைஏற்படுத்தும் வகையில் கோயில்களும், சோதிடமும் ஒட்டி உறவாடி நெருக்கமாகப் பணி செய்கின்றன.சிவன் கோயில்களிலேயே நவக்கிரக நாயகர்கள்தனித்துவஅமைவிடத்தைபெற்றுவிளங்கு கின்றனர். அங்கு கிரகங்களுக்கான பரிகார பூசைகள் மற்றும் நவக்கிரக தோத்திர பாராணயம் என்பன சிறப்புற இடம்பெற்றுவருகின்றன. சிவன்கோயில்களில் ஒன்பது கிரகங்களின் அமைவு முதன்மை பெறுவதும், உமை அம்மையாரிடம்ஞானப்பாலுண்டதிருஞானசம்பந்தர் கோளறுபதிகம் பாடிய தன்மையும் ஒன்பது கிரகங்களை முன்னிறுத்தியே என்பது சமயங்கூறும் யதார்த்தமான கதையாடல்.

இந்தநிலையிலே மேற்போந்த யதார்த்தங்களுக்கு அப்பால்கிரகங்கள்பன்னிரண்டுக்கும்மேலானதாக, அறிவியல்கண்டுபிடிப்புக்கள்இடையிட்டுச்செல்கின்றன. அவை மறுதலிக்கமுடியாதஉண்மைகள்என்பதையும்நிகழ்காலம் எடுத்தியம்புகிறது.

**காளமேகனார் கொள்ளும் வெண்பாக்களின் கதையாடல்**

இத்தகு கூற்றுக்களின் அறைகூவல் வெளியிடை, அருள் உருவம் கொள்ளச் செய்யப்படுகின்ற முழுமுதற் பொருளானகடவுள்சிவபெருமானைமையப்படுத்திபலவெண்பாக்கள்தோற்றங்கொண்டுள்ளன. இவற்றைதன் தனித்துவ கவித்திறன் கொண்டுபாடிப் பணிந்துள்ள பெரும்புலவராக காளமேகனார் விளங்குகிறார். இவர் ஒரு வெண்பாவில் இந்தக்கதைகள் மற்றும் சம்பவங்களான புராணங்கள் என எல்லாவற்றையுமே மிகச்சுருக்கமாகக் கூறியுள்ளார். காளமேகனார் அந்தவெண்பாவைப்பாடும் போது,

**தாண்டியொருத்தி தலையின் மேலேறாளோ**
**பூண்ட செருப்பா லொருவன் போடானோ –**
**மீண்டொருவன்**
**வையானோ வன்முறியமாட்டானோ தென்புலியூர்**
**அய்யா நீ யேழையானால்...!**

என்றுசொற்சுவையும்,கற்பனைவளமும்சுரந்துபெருகப் பாச்சூடியுள்ளார். இந்தப் பெருமை பெரும்புலவர்கள் வரிசையிலே காளமேகனாரையே சாரும்.

**காள மேகனார் பாடும் பகீரதனின் சிவபக்தி**

"தாண்டியொருத்திதலையின்மேல்ஏறாளோ" என்றவரிகளில், "பகீரதன் என்ற சிவபக்தன் தன் தந்தை மற்றும் முன்னோர்க்குஅந்தியக்கிரியைகள் செய்வதற்கு முயன்றான். ஏற்பட்டிருந்த நீர் வறட்சியை நீக்கிவிடும்படி சிவப்பரம்பொருளைவேண்டினான்.முன்னோர்க்குரிய கடமையை சரிவரச் செய்திடநீர்மூலத்தைவேண்டி, ஒற்றைக்காலில் நின்று கடுந்தவஞ்செய்தான்." என்பதை வெளிப்படுத்தியுள்ளார். பகீரதனின் தவ மகத்துவம் கண்டு இரங்கியசிவன், பகீரதனின்பெற்றோருக்கும்முன்னோருக்குமானசடங்குகளைச் சரிவரச் செய்திட ஆகாய கங்கையை பூமியின் மீது பாய்ந்தோடச் செய்தார். ஆகாய கங்கையின் வேகத்தை பூமி தாங்கிக் கொள்ளாது என்பதை எண்ணி, சிவபெருமான் தனது சடாமுடியைக்கலைத்து ஆகாயகங்கையின்வேகத்தை தணித்தார். தேவையானளவு நீரை பூமி மீது பாய்ந்திடச் செய்தார் என்பது புராணக்கதை. இக்கதையின் சுருக்க விளக்கத் தையே காளமேகப் புலவர்தனதுகவிப்புலமைகொண்டு, ஆகாயகங்கையாகபிரவாகிக்கும் கங்காதேவி பிரபஞ்ச வெளியைத் தாண்டி உன்தலைமீது ஏறினாளே...? என'விழிவேற்றுமை' கொண்டு விழித்துப் பாடி பொருள் விளங்கச்செய்துள்ளார்.




**காள மேகனார் பாடும் திண்ணனார் சிவபக்தி**

திண்ணன் என்ற சிவபக்தன் விலங்குகளை வேட்டையாடி அவற்றின் புலாலை சிவலிங்கத்துக்கு படைப்பது வழக்கம். அதிலும் சுட்ட இறைச்சியை பற்களால் கடித்துப் பதமான இறைச்சியையே படைப்பான். இந்த நிலையிலேசிவவாக்கியார் என்ற அந்தணப் பூசாரியார், தனது சிவ பூசைக்கு இந்த வேடன் எப்போதுமே இடையூறு செய்கிறானே என்று மனம் வருந்தினார். அது குறித்து சிவனிடம் முறையிட்டார். சிவன் ஓர்நாள் அந்தணரின்கனவில்தோன்றினார். "உன்னைவிடமேலான பக்தன் ஒருவனே என்மீது கொண்ட பேரன்பால் இப்படிச் செய்கிறான். அவன் பக்தியை நாளை வந்து மறைந்து நின்றுபார் காட்டுகிறேன்." எனக் கூறி மறைந்தார்.

> தன் கண்ணில் ஒன்றையே அம்பினால் எடுத்து குருதி வழிந்துகொண்டிருந்த சிவ லிங்கத்தின் கண் மீது அப்பினான். என்ன ஆச்சரியம் குருதிப் பெருக்கு நின்றது. இத்தன்மை கண்டு திண்ணன் தீராத ஆனந்தம் கொண்டான். மகிழ்ந்து ஆடிப்பாடிக் குதூகலித்தான்.

மறுநாள் திண்ணன் தான் வாயிலே கொண்டுவந்தநீர்கொண்டுலிங்கத்தை நீராட்டினான். இறைச்சியைப்பற்களாய் கடித்துப்பார்த்துபதமானஇறைச்சியைப் படைத்தான். அத்தருணம் சிவலிங்கத்தின் ஒரு கண்ணிலிருந்து குருதி வடிந்தோடுவதை கண்டான். குருதியைக் கட்டுப்படுத்த பச்சிலைகளைப் பிடுங்கி அவற்றைப் பிழிந்து சாற்றினை கண்களில் தெளித்தான். குருதிப் பெருக்கு கட்டுப்படவில்லை. செய்வதறியாது தடுமாறினான். தனக்குள் பக்தியின்வழிதீர்மானம் கொண்டு,தன்கண்ணில் ஒன்றையே அம்பினால் எடுத்து குருதி வழிந்து கொண்டிருந்த சிவ லிங்கத்தின் கண் மீது அப்பினான். என்னஆச்சரியம்,குருதிப்பெருக்கு நின்றது. இத்தன்மை கண்டு திண்ணன் தீராத ஆனந்தம் கொண்டான்.மகிழ்ந்துஆடிப்பாடிக்குதூகலித்தான்.

இந்தச் சந்தர்ப்பத்திலே சிவ லிங்கத்தின்மறுகண்ணிலிருந்தும்குருதிகசிந்ததைதிண்ணன் கண்ணுற்றான். எதற்கும் அஞ்சாதவனாய் சிவ பக்தியின்மீளாதமேன்மைகொண்டுதனதுமறு கண்ணையும் பிய்த்தெடுத்து சிவனுக்கு உபகாரம் செய்ய முற்பட்டான். தன்செருப்புக்காலைத் தூக்கிசிவலிங்கத்தின்மீதுவைத்து, அம்பினால்



மற்றைய கண்ணையும் குத்த ஆயத்தமானான். இந்த சந்தர்ப்பத்திலேசிவபெருமான், "நில்லு கண்ணைப்ப...! நில்லு கண்ணப்ப...!" என்ற குரல் மொழிவின் அசரீரியாய் திண்ணனின் செயற்கரிய செயலை தடுத்துநிறுத்தினார். அவன்பக்திகண்டுஅருள் புரிந்தார். இதனையே காளமேகனார் கூறும் போது, "பூண்ட செருப்பாலொருவன் போடானோ" என்று கவி புனைந்துள்ளார்.

**தேவலோக மங்கையரோடு சுந்தரர் பிறப்பின் கதைபாடும் காளமேகனார்**

இதேபோன்று தேவலோகத்திலே இருந்த ஆரூரன், ஊர்வசி மற்றும் திலோத்தமை என்ற அழகிய தேவ நங்கைகள் மீது மோகம் கொண்டான். இந்தச்செயல்கண்ட சிவப்பரம் பொருளானவர்மூவரையும்பூமியில்மனிதர்களாகப் பிறப்பெடுப்பீர்கள் எனச் சாபமிட்டார். அதன்படியே பரவையார், சங்கிலியார், ஆரூரன் என்ற நாமகரணம் கொண்டு மூவரும் பூமியில் பிறப்பெடுத்தனர். ஆரூரன் மாணவப்பருவம் எய்தினான்.

அவனுக்குப் பரவையாரை மணம் பேசிச் சென்றனர். இதன்போது ஆரூரன் தன் அடிமை எனக்கூறி சிவபெருமான் அடிமை முறியைக்காட்டிதிருமணத்தைதடுத்துநிறுத்தும் செயற்பாட்டைச் செய்தார். ஆரூரரை ஆட்கொண்டார். சிவன் வன்மையாகப் பேசியதால் வன்றொண்டன்என்பெயர்பெற்றதாகவும்புராணம் கூறுகிறது. இதையே "மீண்டொருவன் வையானோ..?" எனச்சுருக்கமாகக் கூறி பொருளுற கவியுறுத்துகிறார் காளமேகனார். இங்கு, தென்புலியூர் என்ற ஊரிலே கோயில் கொண்டு எழுந்தருளிய அய்யனேசிவனே...!நீஏழையானாய்இப்படியெல்லாம் வைதும்அடித்தும்தாவித்தலைமீதுஏறியும்கொடுமை செய்ய மாட்டார்களா....? எனக்கேள்வி கேட்டுநிற்கின்றார்.

**சிவனைப் புகழ்ந்துபாடும் காளமேகனார்**

இன்னொருபாடலில்காளமேகனார்சிவனைவியந்து பாடியும் இருக்கிறார். அக் கவிநயம்,

**நாட்டுக்கு நாட்டுக்கு நாலுகா லையாநின்
ஆட்டுக் கிரண்டு காலானாலும்– நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனே இவ் வாட்டைவிட்டுப்
போமோ கொய் ஆயப்புலி..!**

என்றவிதமாக அமைந்துள்ளது. தில்லையில்நடனம் புரியும் சிவனே, நாட்டுக்குள்ளே உள்ள ஆட்டுக்கு இரண்டு கால்கள்தான் உண்டு.

இரண்டுகாலில் ஆடுவதில் திறனுடைய சிதம்பர நடராஜன் சிவனின் இரு கால்கள் புரியும் நர்த்தனத்தைக் காணாது தவிர்த்துப் போகுமோ இந்த ஆயப்புலி" என்றுபுலிக்கால் முனிவன் சிவனைக் கேட்பது போலக் கேட்டு எல்லோரையும் பிரமிக்க வைத்துள்ளார். சிலேடைத்தமிழில் பொருளுணர்த்தி மகிழ வைத்துள்ளார்.

> தேவலோகத்திலே இருந்த ஆரூரன், ஊர்வசி மற் றும் திலோத்தமை என்ற அழகிய தேவ நங்கைகள் மீது மோகம் கொண்டான். இச் செயல் கண்டு கோபமடைந்த சிவபெருமான் மூவரையும் பூமியில் மனிதர்களாகப் பிற்ப்பெடுப்பீர் கள் எனச் சாபமிட்டார். அதன்படியே பரவையார், சங்கிலியார், ஆரூரன் என்ற நாமகரணம் கொண்டு மூவரும் பூமியில் பிறப்பெடுத்தனர்.

**தமிழ் இன்பம் சுவைப்போம்**

ஆக, இவ்வண்ணம் தமிழ் மொழியின் தனித்துவச் செறிவு காளமேகனாரிடம் மேன்மையுற்று விளங்கியது. படிப்பவர் மனதிலும், அவர் கொண்ட சிந்தனை வெளியிலும் தமிழ்ச் சுவையி:ன் நனி சொட்ட தேன் இன்பம் பாய்ச்சுகிறது. இன்புற்றிருப்போம்.











# தென்மராட்சி கல்வி வலய தமிழ்த் தினப் போட்டிகளின் சாதனையாளர்கள் மற்றும் ஓய்வுநிலை தமிழ் ஆசிரியர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு – 2017

தென்னவன்

உலகில் உள்ள மொழிகளில்தமிழ்மொழியும் ஒன்றாகும். உலக ஆய்வுகளின் பிரகாரம் தற்போதைய நடைமுறையில் உள்ள சில மொழிகள் மாற்று மொழிகளின் ஆக்கிரமிப்பினால், அதனைப் பயன்படுத்தாத காரணத்தினால் அழிவடையும் அபாயம் உள்ளன என அறிக்கையிடப்பட்டுள்ளது. எமது தமிழ் மொழியைக் காப்பாற்ற தமிழ் இனத்தின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கக்கூடிய நிகழ்வுகளை நாம் நடத்தி எமது கலாசாரத்திற்கு அதன் செழுமை குன்றாமல் புத்துயிர் அளிக்க வேண்டும். எமது மொழியை நாமே பாதுகாக்காது விடில் உலகில் அழிவடைந்து போகுமென எதிர்பார்க்கப்படும் மொழிகளில் தமிழ்மொழியும் அடங்கலாம்.

அவ்வாறான நிலை தமிழுக்கு ஏற்படாமல் இருக்க, பல்வேறு செயற்பாடுகளை நாம் பாடசாலையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். மாணவர்களிடையே நடத்தப்படும் மொழி தொடர்பான போட்டிகளால் மொழியின் தரம் உயர்வடையும் பாடசாலை, வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் ஆகிய நிலைகளில் போட்டிகளை நடத்துவதால் மொழியின் ஆழம் அனைவராலும் அறிந்து கொள்ள முடியும்

**தென்மராட்சி வலய தமிழ்மொழி விழா**

அந்த வகையில் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட தமிழ் மொழிதினப் போட்டிகளில் வலய மற்றும் தேசிய நிலைப் போட்டிகளில் சாதனை படைத்த தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு சான்றிதழ்கள், விருதுகள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி முதல்வர் ச. லலீசன் கலந்து கொண்டார். நிகழ்வில் தேசிய நிலைப் போட்டிகளில் பதக்கங்களை வென்ற மாணவர்களின் நிகழ்வுகள் இடம்பெற்றன. மிருசுவில் அ.த.க பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனம் விழாவுக்கு மெருகூட்டலுக்கு உதவுவதாக அமைந்திருந்தது.

மாகாண நிலைத் தமிழ்த்தினப் போட்டியில் மூன்றாம் இடம்பெற்ற இராமநாதன் மகா வித்தியாலய மாணவி வைஷ்ணவி யோகராசாவின் தனி நடனமும் அரங்கேறியது ஆசிரியர் சங்கீதாவின் இனிய இசையில் ஒலித்த கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா என்னும் பாடலில் நடனம் ஆரம்பித்தது. அடுத்து மாகாண நிலைப் பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவி பிரதீபா, சூழல் மாசடைதல் என்னும் சமூகவியல் பார்வையுடன் ஆற்றிய உரை அபாரமாக இருந்தது. தொடர்ந்து மாகாண நிலை குழு இசையில் இரண்டாம் இடம்பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகள் 9 பேரின் குழு இசை இடம்பெற்றது. திக்குத்தெரியாத காட்டில் என்னும் பாடல் அனைத்து மாணவியரின் ஒருமித்த குரலில் மனதிற்கு இசையின் வடிவத்தைக் கோடிட்டு நின்றது. மாகாண நிலை போட்டியில் வெற்றி பெற்ற சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களின் கிராமிய நடனமாக ஆற்றப்பட்ட கரகாட்டம் சிறப்பாக அமைந்திருந்தது.

ஆற்றப்பட்ட அனைத்து நிகழ்வுகளும் தமிழின் உச்ச நிலையில் காணப்பட்ட கலைகளாகக் காணப்பட்டன. தொடர்ந்து தேசிய நிலையில் பதக்கங்களை வென்ற மாணவர்கள் கற்பித்த ஆசிரியர்களுடன் இணைந்து மதிப்பளிக்கப்பட்டனர்.

தேசிய நிலைத் தமிழ்த்தினப் போட்டிகளில் சிறுகதையாக்கம் பிரிவில் தங்கம் வென்ற கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவி காயத்திரி, இலக்கணப் போட்டியில் தங்கம் வென்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி கவினா, குறுநாடகப் பிரதியாக்கம் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி கயமதுரா ஆகியோர் முதன்மை விருந்தினரால் விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர்.

**ஓய்வுநிலை ஆசிரியர்களும் மதிப்புறுத்தப்பட்டனர்**

தமிழ்ப் பாட ஆசிரியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள ம.மகேசன், திருமதி க.சுரேந்திரா திருமதி இ.ஜீவேந்திரா, ச.மார்க்கண்டு, ந.திருஞானசம்பந்தமூர்த்தி ஆகியோர் நிகழ்வின் தலைவரான வலயக் கலவிப் பணிப்பாளரால் பொன்னாடை வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர்.



90ஆம் நாள் நினைவேந்தல்



அமரர்
இராமு அருள்நேசன்

மழலையாய்
25.08.1953

மகிமையாய்
31.08.2017

கரம்பிடித்த நாளிலிருந்து கண் கலங்காது
கண்ணிமை போல் காத்த என் அன்புத் தெய்வமே!
கணப்பொழுதில் என்னைப் பிரிந்து - கண்ணீர்
கடலில் மூழ்கித் தத்தளிக்க விட்டீங்களோ?


என் வாழ்வில் எல்லாமே எனக்கு அப்பாதான்
என்னை எந்த அப்பாவும் பராமரிக்காத வகையில்
பக்குவமாய் பாதுகாத்தீர்கள் -
யாருமற்று தத்தளிக்கும்
எங்களை மகிழ வைக்க எங்களிடம்
ஓடி வாருங்கள் அப்பா.

குடும்பத்தினர்.
200,சென்ற் பெனடிற்றோட்,
அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

# அழிஞ்சில்

## அத்தனையும் பயன்கள்

தங்கராஜா கமலதீபன்



அழிஞ்சில் (Alangium salvifolium)

அழிஞ்சில் தாவரமானது இலங்கையில் பொதுவாக அணிஞ்சில் என அழைக்கப்படுகிறது. இந்தத் தாவரமானது கடும் வறட்சியை தாங்கி உலர் வலயத்தில் சிறப்பாக வளரக்கூடியது. நன்கு உயர்ந்து வளரக்கூடியது. இலைகள் எதிரொழுங்கில் காணப்படும். இலைகளின் நீளம் 5.14 செ.மீ ஆகவும் அகலம் 2.25 செ.மீ ஆகவும் காணப்படுகிறது. இலையானது நீள்வட்ட வடிவமானது. கிளைகளில் சில இடங்களில் சிறுமுட்கள் காணப்படும். பூக்கள் 2செ.மீ நீளம் 1.5செ.மீ அகலம் உடையதாக காணப்படும். இவை தனித்தனியாக இலைகளின் கணுக்களில் இருந்து உருவாகும். இந்தப்பூக்கள் வெளிறிய மஞ்சள் நிறமுடையவை. சிறிது நறுமணமுடையவை. இதன் பழங்கள் 2.1செ.மீ அளவான சிவப்புநிறமுடைய கோள வடிவானவை. இக்கனியினுள் ஒரு விதை மட்டும் காணப்படும்.

**பயிரிடும் முறை**

ஆழமான மண்ணில்லாப் பாறைப்பகுதிகளிலும் தரிசு நிலங்களிலும் வறட்சியை தாங்கி செழிப்பாக வளரக் கூடியது. இதனை சாலையோரங்களிலும் நடலாம். விதையைச்சேகரித்து நாற்றுநட்டு வளர்ந்ததும் 5மீற்றர் இடைவெளியில் மரங்களை நடலாம்.

**நடுகைக்குழி**

அரைப்பங்கு மேல்மண்ணும்
அரைப்பங்கு கூட்டெருவும் இட்டு
நடுகைக்குழியினை நிரப்பவும்
அளவு - 60cmX 60cm X 60cm



**பயன்கள்**

இலை - கால்நடைத்தீவனமாக பயன்படுத்தப்படும், கூட்டெரு தயாரிக்கப் பயன்படும்

கனி - இதனை உண்ணலாம், விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்தது.

விதை விதைப்பருப்பிலிருந்து பெடுலீனிக்கமிலம், பெடுலீன் அல்டிகைட்டு பெடுலீன் மற்றும் லூபியால் ஆகியவை தனித்துப் பிரித்தெடுக்கப்படுகின்றன.

பூ - தேனீக்களுக்கு தேவையாகும் தேனும், மகரந்தமும் இந்தப் பூக்களில் உள்ளது மார்ச் மாதத்தில் தேனீக்களை இந்த மரத்தில் அதிகம் காணலாம்.

வேர்ப்பட்டை - நாட்டு வைத்தியத்திலே பல நஞ்சுகளுக்குப் பரிகாரமாக உபயோகிக்கப்படுகின்றது. அழிஞ்சில் வேர்ப்பட்டையை வெள்ளாட்டு நீரில் ஊறவைத்து உலர்த்திப் பொடியாக்கிக் கொடுத்தால் பூரான்கடி முதலிய நஞ்சுக்கள் நீங்கும்.

நாட்பட்ட கடி, பாம்புக்கடி, நஞ்சாலுண்டான தாமதம் ஆகியவற்றை நீக்கும் பண்பு வேர்ப்பட்டைக்கு உள்ளது. பாம்புக்கடிக்கு வேர்ப்பொடி மிகவும் பிரசித்தி பெற்ற மருந்து என சென்ற நுற்றாண்டில் எழுதிய நூலில் ட்ருரி குறிப்பிட்டுள்ளார்.

பெருங்குடலில் உள்ள பூச்சிகள் கூட வேர்ப்பட்டை மருந்தால் வெளியேறிடும். கழு நீரில் வேர்ப்பட்டையை அரைத்து தேனுடன் உட்கொண்டால் வயிற்றுப்போக்கும் நீங்கும். மற்றும் கடுமையான கீழ் வாதத்திற்கு வேர்ப்பட்டைக் குழித் தைலத்தை மேலுக்குத் தடவலாம்.


பட்டைப் பொடியை மேகப்புண், சீழ் வடியும் பெருநோய், சொறி சிரங்கு ஆகியவற்றின் மேல் தூவி குணப்படுத்தலாம். இவற்றைத் தவிர மேகப்பிடிப்பு, மேகப்புடைகள், மேகவெடிப்பு ஆகியவற்றைக் குணப்படுத்தும் திறனும் பட்டைக்கு உள்ளது.

**இயற்கையைக் காப்போம் மரம் வளர்ப்போம்**

# மரண அறிவித்தல்

## திருமதி தவமணி மாசிலாமணி

**(ஓய்வுபெற்ற ஆசிரியை - வ/ சைவப்பிரகாச வித்தியாலயம்)**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.12.1928 | 26.11.2017 |

வவுனியா இராசேந்திரம் குளத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா முதலாம் ஒழுங்கை, குருமன்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி மாசிலாமணி 26.11.2017 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை எட்வேட் மாசிலாமணி (முன்னைநாள் அதிபர் வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், சாள்ஸ் தவக்குமார் (ஜேர்மனி), மா.றோய் ஜெயக்குமார் (ஓய்வுநிலை இலங்கை வங்கி முகாமையாளர், வவுனியா), ஜோஜ் பிரேம்குமார் (ஜேர்மனி), திருமதி விஜயசெல்வி பரமேஸ்வரன் (ஆசிரியை - வ/நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்), பிலிப் தயாளகுமார் (லண்டன்), கிறிஸ்டி ராஜ்குமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயும், திருமதி நளாயினி தவக்குமார் (ஜேர்மனி), திருமதி ஜெயராணி றோய் ஜெயக்குமார் (ஆசிரியை - வ/ தாண்டிக்குளம் மிரமண்டு வித்தியாலயம்), திருமதி ஜோய் பிறேம்குமார், ஜோசுவா பரமேஸ்வரன், திருமதி ராஜி தயாளகுமார் (லண்டன்), திருமதி சுபா ராஜ்குமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியும், அன்றொயின் கிசான் (வைத்திய கலாநிதி வவுனியா பொது வைத்தியசாலை) இன் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (30.11.2017) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வவுனியா தூய ஆவியானவர் ஆலயத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்கு வவுனியா இறம்பைக்குளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்**

**மாசிலாமணி குடும்பத்தினர்.**

**முதலாம் ஒழுங்கை, குருமன்காடு,**

**வவுனியா.**

**071 444 0993**

# ஆறுமுக நாவலர் எனும் சமூகப் போராளி

## பணியாளுமை உடைய விடுதலையின் விழிப்புணர்த்தும் பேரொளி



சீதாலஷ்மி செல்வரட்ணம்

மதயானையாக எம் தேச நிலமெங்கும் அந்நியனாய் குடிபுகுந்து ஆட்சி அதிகாரம் புரிந்தான் போர்த்துக்கேயன். மத அடக்குமுறை கொண்டு இந்துக்கோயில்களை இடித்து அழித்தான். தொன்மையின் சான்றுடைய இந்துகலாசாரத்தை நலிவுறச்செய்தான். இந்த நிலையிலே இவர்களைப் பின்தொடர்ந்து வந்த ஆங்கிலேயர்களும் அடாவடித்தனம் புரிந்தனர். மதமிதவாதிகளாக தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர்.

பணம் மற்றும் பதவி ஆசைகளை உருவாக்கி இந்துக்களை மதமாற்றம் செய்தனர். தங்களுடைய மதம் சார்ந்த நம்பிக்கையின் வழி கட்டியிழுத்துச் சென்றனர். ஆக, எப்பொழுது இந்து மதத்துக்கு சோதனையும், வேதனையும் ஏற்படுகின்றதோ, அப்பொழுது ஆன்மிக ஈடுபாடுடைய சான்றோர் தோற்றம் கொண்டனர். அதுவே மரபாக இருந்து வந்தது. இதன்வழியேதான் அன்றும் இன்றும் என்றும் என்ற கால வெளிப் பரிணாம சங்கடங்களிடையே இந்து மதம் குடை சாய்ந்துவிடாது தனிச்சிறப்போடு முன்னிலை பெற்றிருக்கிறது.

### நாவலர் எனும் போசகன் வருகை

இத்தகு செயல்நிலைகளின் போக்கில் இந்துமதத்தின் போசகராக, தமிழ் மொழியின் பற்றுறுதியுடைய காவலாரக வந்தவர்களுள் முதன்மையானவராக ஆறுமுகநாவலர் திகழ்கிறார். 1822ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரிலே பிறந்தார். அவருடைய ஆற்றலையும், அறிவுத் திறனையும் கண்ட, அவருடைய மூத்த சகோதரர் கல்விச் செல்வத்தை நிறைவாக வழங்கினார். வேலாயுத முதலியாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை திறம்படக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அதேபோன்று 'பீற்றர்பார்விலல்' பாதிரியாரிடம் ஆங்கிலமொழியைக்கற்று தேர்ச்சி பெற்று நல் அறிவோடு திகழ்ந்தார்.

### மொழியாளுமை

நாவலருடைய திறமையை அறிந்துகொண்ட 'பார்சிலல் பாதிரியார்' கிறிஸ்தவ நூலான பைபிளை மொழிபெயர்த்து தரும்படி கேட்டார். அதற்கு நாவலரும் சம்மதம் தெரிவித்ததுடன், ஆங்கில மொழியில் எழுதப்பட்டிருந்த பைபிளை தமிழ்மொழியில் மொழிபெயர்த்தும் கொடுத்தார். அதனை அச்சில் பதிப்பதற்கு நாவலரையும் அழைத்துக் கொண்டு பாதிரியார் இந்தியாவுக்கு பயணமானார். ஆனாலும் இந்தியாவில் இருந்த 'மிசியோனிமார்' அதை அச்சில் பதிப்பதற்கு தயக்கத்தை வெளிப்படுத்தி நின்றனர். "யாழ்ப்பாணத்தில் செந்தமிழ் பேசுவோர் அரிதாகவே உள்ளனர். தமிழ்கல்வியறிவு குறைவாகவே உள்ளது. பைபிளின் தமிழ்மொழிபெயர்ப்பை இந்தியாவிலுள்ள பண்டிதர்கள் பரிசீலிக்க வேண்டும்." என்று கூறினார்கள். சென்னையிலே மிகச் சிறந்த வித்துவானாக அக்காலத்தில் திகழ்நத மகாலிங்க ஐயரை நியமித்து நாவலர் மொழியெர்ப்பை பரிசீலனைக்கு உட்படுத்தினர்.

என்ன ஆச்சரியம், மகாலிங்கஐயர் பைபிளின் தமிழ்மொழிபெயர்ப்பைப் படித்து விட்டு, அதில் உள்ள நுட்பத்தையும் யாழ்ப்பாணத் தமிழையும் வியந்து பாராட்டினார். தமிழ் மொழிபெயர்ப்பிலான நூலுருவை அச்சில் பதிப்பித்துக் கொண்டு யாழ்ப்பாணத்துக்கே மீண்டும் திரும்பி வந்தார்கள். பின்பு நாவலர் பீற்றர் பார்சிலலின் கீழேயே பணி புரிந்தார்.

### இந்து மதத்தின் காவல் கடமை

இந்தசந்தர்ப்பத்திலே நாவலருடன் படித்த இருமாணவர்கள் கிறிஸ்தவ மதத்துக்குரிய திருமுழுக்கினை மேற்கொள்வதற்கு உகந்த திகதியை நிச்சயப்படுத்திக் கொண்டு வருவதைக் கண்டுகொண்டார். மத மாற்றம் குறித்து கவலையுற்றார். பொறுமையிழந்தவராய், இருவரையுடம் தன்னிடம் அழைப்பித்து இந்து மதச்சிறப்புக்களையும், மகிமைகளையும் எடுத்துக்கூறினார். கிறிஸ்தவமதத்தின் போதனைபற்றி அவர்களுக்கு எடுத்தியம்பி திருமுழுக்குச் செய்வதைத் தடுத்து நிறுத்தினார்.

இந்தச் செயற்பாடுகளை அறிந்துகொண்ட பார்சிலல் பாதிரியார் அவர்களை அழைப்பித்து, ""ஏன் குறித்த திகதியில் திரு முழுக்குப் பெறவரவில்லை..?" என வினவினார். அதற்கு நாவலரின் நண்பர்கள் இருவரும் பதிலுரைத்தனர். "உங்கள் மதம் குறித்து எங்களுக்கு சந்தேகங்கள் இருக்கின்றன. அதைத்தெளிவாகப்புரிந்துகொண்டதும் வருகிறோம்." என்று கூறினர். அவ்விடமிருந்து விலகி விடைபெற்றுச் சென்றனர். கோபம் கொண்ட பாதிரியார் அவர்கள் இருவரையும் வேலையில் இருந்து பணிநீக்கம் செய்தார். பின்பு நாவலரை நாடிய பீற்றர் பார்சிலல், "நீங்கள் தானே அவர்களைத்தடுத்தது..?" என்றுவினவினார். அதற்குநாவலர் தயக்கமின்றி பயபக்தியோடு, "எங்கள் சமய உண்மைகளை அவர்களுக்குக் கூறினேன். அது என் கடமையும் தானே." என்று பதில்கூறினார்.

அனைத்தையும்செவிமடுத்தபாதிரியார், "நீர்எனக்குக்கீழே வேலைபார்த்துக்கொண்டு இப்படிச் செய்வது சரியா...?" என வினவினார். அதற்கும் நாவலர் தன்னிலையில் இந்து மத பக்தியுடையவராய் யதார்த்தத்தை எடுத்துக்கூறினார். "நான் இந்தத்தொழிலில் இருப்பது தொடர்பில் உங்களுக்குச்சம்மதமில்லையெனில்நான்விலகிவிடுகிறேன்." என்று வீராப்போடு பதில் கொடுத்தார். இந்த சந்தர்ப்பத்திலே பாதிரியார் சிந்தனையுள் தன்வயப்பட்டார். பின்பு, "இவரைக் கடமையில் இருந்து அனுப்பிவிட்டால் இவரைப்போன்று திறமையான தமிழ் பாண்டித்தியம் உடைய பண்டிதர் ஒருவரை என்னால் கண்டுகொள்ள முடியாது போய்விடும்" என்பதை உணர்ந்துகொண்டார். நாவலரைவிழித்து, "அவசரப்பட்டு அப்படியொரு முடிவை எடுத்துவிடாதீர்கள். உண்மையை அறியக் கேட்டேன்." என்று கூறி தன் பணிவை வெளிப்படுத்திக்கொண்டார்.

### நாவலர் கொண்ட சமூகப் பணியாளுமை

நாவலர் பணியில் இருந்தபடியே இந்து மதத்தினர் மதமாற்றம்பெறுவதைதடுத்தார். ஆலயங்களில்பூசைகள் ஆகம விதிப்படி நடைபெறவேண்டும் என்று ஆன்மிக அறிவுரை வழங்கினார். ஆலயங்கள் தோறும் நற் சிந்தனை உடைய சமயப்பிரசங்கங்கள் செய்தார். கந்தபுராணம், பாலபாடம், பாலபோதினி சைவவினாவிடை போன்ற இன்னோரன்ன நூல்களையும் அச்சில் பதிப்பித்துவெளியிட்டார். அவருடைய பிரசங்கங்களினால் பலரும் நல்வழிப்பட்டனர். ஆலய வழிபாட்டை ஒழுங்காக சீரான நெறிமுறையின் வழி செய்தனர். மாமிசம் உண்பதை நிறுத்தினார்கள். மதுசாரம் அருந்துவதை நிறுத்தினார்கள். முக்கிய தினங்களிலும், திருவிழாக்காலங்களிலும் பலர் ஆலய தரிசனம் கண்டனர்.

நாவலர்தன்னுடையமுயற்சிகளில் இருந்து சிறிதும் பின்வாங்காது செயற்பட ஆரம்பித்தார். பாடசாலைகளை ஆரம்பித்து, மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்கினார். முயற்சியின் பயனாக இந்துமதத்தவர்கள் வேறு மதத்துக்குச் செல்வது மிகவும் குறைந்திருந்தது. அரசபணியில் இருந்து கொண்டு சமயத்துக்கும், தமிழுக்கும் தொண்டு செய்வது கடினம் என்பதை உணர்ந்து பணியிலிருந்து இடைவிலகினார். இதை அறிந்து கொண்ட நாவலரின் சகோதரன், "நீ என்ன அறிவின்றிய காரியம் செய்து கொண்டாய், இந்தச் சம்பளத்தை இனி யார்தரப்போவது...? உலகத்திலே உனக்கு என்ன மதிப்பு..? என்று கடிந்தார்.

### நாவலர் ஆளுமை தந்த புரிந்துணர்வு

இத்தகு மாற்றங்களைக் கண்ட ஏனைய பாதிரியார்கள் பீற்றர் பார்சிலல் பாதிரியாரை அணுகினர். அவரை அச்சறுக்கைப்படுத்தி, "நாங்கள் எங்களுடைய மதத்தைப் பரப்பவே இங்கு வந்தோம். ஆனால் தமிழ் பண்டிதரான நாவலரோ அதைத்தடுத்து நிறுத்துகிறார். மக்கள் மனதை திசைதிருப்புகிறார்." என்று மாற்றுக் கருத்துரை வழங்கி மாற்றத்தை வேண்டி நின்றனர். இதற்குப் பதிலுரைத்த பார்சிலல் பாதிரியார், "இவரைப்போன்ற பண்டிதரை விலைகொடுத்தாலும் வாங்கிவிட முடியாது." என்றுகூறி அவர்களை வழியனுப்பி வைத்தார். நாவலர் தன்னுடைய முயற்சிகளிலிருந்து சிறிதும்பின்வாங்காதுசெயற்பட ஆரம்பித்தார். பாடசாலைகளை ஆரம்பித்து, மாணவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்கினார். முயற்சியின் பயனாக இந்துமதத்தவர்கள் வேறு மதத்துக்குச் செல்வது மிகவும் குறைந்திருந்தது.







அரச பணியில் இருந்து கொண்டு சமயத்துக்கும், தமிழுக்கும் தொண்டு செய்வது கடினம் என்பதை உணர்ந்து பணியிலிருந்து இடைவிலகினார். இதை அறிந்து கொண்ட நாவலரின்சகோதரன், "நீ என்ன அறிவின்றிய காரியம் செய்துகொண்டாய், இந்தச் சம்பளத்தை இனி யார் தரப்போவது...? உலகத்திலே உனக்கு என்ன மதிப்பு..? என்று கடிந்தார்.

### மதப் பிரசங்கி

அதற்கு நாவலர், "நான் உங்களிடம் வந்து பொருளுதவிசெய்யும்படிகேளாதிருக்கக்கண்டுகொள்ளுங்கள்." என்று கூறி குடும்ப உறவுகளை விடுத்து தூரமாக விலகியிருந்தார்.

அதன்பிற்பாடு முழுநேரமாக இந்து சமய உண்மைகளையும், அவை கூறும் சிறப்புக்களையும் பற்றி பிரசங்கம் செய்தார். நாவலரின் இந்தப்போக்குக்குறித்து கோபம்கொண்டு வெகுண்டெழுந்தனர் ஆங்கிலேயர்கள். பாதிரியாரிடம் உபதேசியாக இருந்த ஒருவர் கிறிஸ்து மதப்பிரசாரத்தைக் குறைத்துக்கொண்டு இந்து மதத்தை இழிவாகப்பேசி வந்தார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்றில் இன்றைய தினம்
## 29.11.2017



1830 - போலந்தில் ரஷ்ய ஆட்சிக்கு எதிரான கலகம் தொடங்கப்பட்டது.
1945 - யுகோஸ்லேவியா சுதந்திரம் பெற்றது.
1963 - அமெரிக்க அதிபர் கெனடியின் கொலை தொடர்பில் விசாரணை நடத்த தனி ஆணைக்குழு அமைக்கப்பட்டது.
1963 - கனடாவின் வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி - 631 விபத்துக்குள்ளானது. அதிலிருந்த 118பேரும் உயிரிழந்தனர்.
1988- ஈரான் தலைமை அமைச்சர் முசாபிர் சிறையிடப்பட்டார்.
1988 - பிக்காஸோவின் ஓவியம் 101 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் சென்றது.
1996 - கிருசாந்தி கொலை வழக்கு கொழும்பில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிமன்று முன்பாக பெண்கள் ஆர்ப்பாட்டம்.
1999 - புலிகளுடன் பேசத் தயார் என ஜெயரத்ன அறிவிப்பு.
2006 - 40 லொறிகளில் வாகரைக்கு உணவு அனுப்பப்பட்டது.
2006 - வடக்குக் கிழக்கை இணைப்பதற்கு உயிருள்ளவரை விடமாட்டோம் என நாடாளுமன்றில் ஜே.வி.பி அணியினர் போர்க்கொடி.

1987 - கொரிய வானூர்தி தாய்லாந்து எல்லைக்கருகே விபத்துக்குக்கு உள்ளாகியதில் 115 பேர் உயிரிழந்தனர்.

# ஆறுமுக நாவலர்...

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதைச் கேண்மையுற்ற நாவலர் பெருமான் அவர்களுக்கு எதிராக 'வச்சிரதண்டம்' எனும் துண்டுப் புத்தகத்தை வெளியிட்டார். தொடர்ந்து முருகக் கடவுளைப் பற்றியும், வள்ளிதெய்வயானையைப் பற்றியும் இழிவாகப் பேசினார்கள். அதற்கும் நாவலர் பெருமான் பதிலடி வழங்கினார். முழுமுதற் கடவுளாக, தமிழ்கடவுளாக விளங்கும் வேல்ப் பெருமான் மற்றும் வள்ளி, தெய்வயானை ஆகியோர் இச்சா, ஞானா மற்றும் கிரியா சக்தியாக அருளாட்சி புரியும் விளக்க குறிப்பை 'சுப்பிரபேதம்' எனும் நூலுரு மூலம் வெளிப்படுத்தினார். இதன்வழியே இந்து மதத்தவர்கள் ஆழ்த்த கருத்துக்களை உடைய இந்துமதத்தை வியந்து போற்றினர். இந்துமதமே சிறந்தது என்ற உறுதியான நம்பிக்கையைப் பற்றிக்கொண்டனர். இந்துமதத்தின் மீது அளவுக்கு அதிகமான பற்றுதலைக் கொண்டிருந்தனர்.

**நாவலரின் வாழ்க்கைத் தத்துவம் தரும் பாடம்**

ஆக, நாவலரின் வாழ்க்கைத் தத்துவத்திலிருந்து பலவற்றை விளக்கிகொள்ள முடிகிறது. தாய் மதத்தையும், தாய்மொழியையும், தாய் நாட்டினையும் மதிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். எந்த மதக் கொள்கையும் தம் மதத்தையே எல்லோரும் பின்பற்ற வேண்டும் என்று வரையறுத்துக் கூறவில்லை. குறுகிய வட்டத்துக்குள், குறுகிய மனப்பான்மையுடன் நடந்து கொள்வதனாலேயே மதம் சார்ந்த, மொழி சார்ந்த சிறப்புக்கள் மழுங்கடிக்கப்படுகின்றன. இந்தியாவிலே தோற்றம் கொண்டதாக கூறப்படும் பௌத்த சமண மதங்கள் இப்பொழுது எங்கே..? என்ற கேள்வி எழுவது இங்கு நோக்குதற்குரியது. மதவாதிகளாகவும் ஆன்மிக வாதிகளாகவும் இருந்து மதத்தின் சிறப்பை எடுத்துக்கூறலாம். நாவலர் செய்த பணிகளைப் போல எம் மதத்தினரும் செய்யவில்லை. மத உண்மைகளை அறிந்து அந்த நெறிமுறையுடன் சிறப்பாக ஒழுக வேண்டும் என்ற பெருநோக்குடன் 'சைவ வினாவிடை' நூலை அச்சிட்டு வெளியிட்டார். இங்கு, எல்லா மதமும் ஒற்றுமையை, அன்பை, நெறிமுறையை பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்துகின்றதே தவிர, எல்லோரும் ஒரே மதத்தைத்தான் பின்பற்ற வேண்டும் என்று வரையறைகளை வகுக்கவில்லை.

**அழிவின் படுகுழியில் இருந்து நாவலனாய் எழுவோம்**

இன்று இலங்கையிலுள்ள சிறுபான்மை, பெரும்பான்மை இன அரசியல்வாதிகள் மதச் சண்டை மற்றும் இனச்சண்டையை ஏற்படுத்தி மனித நேயமற்ற சித்திரவதைகளுக்கு இடமளித்தனர். போராயுதத்தை குவித்து மிருகங்கள் இடையே உள்ள ஒற்றுமை கூட ஆறறிவு படைத்த மனிதர்களிடையே வெளிப்படுத்தாது தமிழர்களை வேட்டையாடினார்கள். இயற்கையெழில் செழித்து நிறைந்த எமது தாய்நாட்டில் குருதி ஆறு ஓடியது. ஆயுததாரிகளும் ஆயுததாரிகளுமா போராடுகிறார்கள்...?? இல்லையே...! பச்சிளங்குழந்தைகளும், அப்பாவி மக்களும்தான் சாவடைகின்றனர்.

இலங்கையிலுள்ள சிறுபான்மையினரின் ஆட்சியிலாவது புரிந்துணர்வு உண்டா...? என்ற கேள்விக்கு பதிலை நோக்கின் இல்லை என்றே விடை அங்கலாய்ப்போடு தொக்கி நிற்கும். இதுவரை எம் இனத்தவர்கள் பட்ட கஷ்டங்கள், இழப்புக்கள் ஈடு செய்ய முடியாத துயரச் சுமை தருவிகள். இது குறித்து எவரும் சிந்தித்துப் பார்க்கவில்லை. மீண்டுமொரு போர்ச்சூழல் ஏற்படக் கூடாது என்ற உறுதிப்பாட்டை எடுத்து, அதன்படி ஒழுகி நடப்பதை விடுத்து, தமக்குள்ளேயே பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டு பதவிமோகமும், ஆடம்பர வாழ்க்கையையும் நாடி நிற்கின்றனர். எம்முள் எத்தனை பேர் வீடிழந்து, ஊரிழந்து, உறவு இழந்து வாழவழியில்லாமல் இடர்பாடுகளை அனுபவிக்கிறோம். ஆனால் எமை வாக்குப் போடும் கருவிகளாகத்தான் பார்க்கிறார்கள். ஆரம்ப காலங்களில் நாவலர், தமிழின் காவலராக பணிபுரிந்தார். பாவலராக நற் கருத்துகளை சமூகத்திடை வெளிப்படுத்தினார். மக்களை நல்வழிப்படுத்தினார். இந்து மதத்தையும், தமிழ்மொழியையும் விட்டு அகலக்கூடாது என்ற பாதையில் பயணம் செய்து பல தியாகங்களைச் செய்தார். அரச பணியை முடிவுறுத்தினார். பிரம்மச்சாரியத்தை கடைப்பிடித்தார். பணம் மற்றும் பதவி ஆசையைக் காட்டி மத மாற்றம் செய்த ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். அஞ்சி நடுக்கும் மனத்தினரை, இனத்தினரை வேற்று மத பிரவேசத்திலிருந்து காப்பாற்றினார்.

**புதிய நடைபயில்வோம்**

இவ்வாறு நாவலரின் தனிச் சிறப்பான சமூகப் பணியாளுமைகள் தனித்துவம் பெறுகின்றன. போற்றுதற்குரியதாய் நோக்கப்படுகின்றன. எனவே, நாவலரின் கொள்கைகளை நாமும் பின்பற்றி, எதிர்காலப் பயணங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தி முன்நகர்வோம். அதை விடுத்து மற்றவர்களின் குற்றங்குறைகளை தேடி அலைவதை விடுத்து, எமது குற்றங்களை கண்டுபிடித்து களைந்திடுவோம். அமைதியான மகிழ்ச்சிகரமான வாழ்க்கைப் பயணத்தை பேணுவோம். நாவலரின் பாத அடியொற்றி புதிய நடைபயில்வோம். ஒவ்வொருவர் துன்பத்தையும் எமது துன்பமாகக் கருதி துயர் துடைப்போம்.

# கார்த்திகை மாத ராசிபலன்

## நவம்பர் 17 முதல்
## டிசெம்பர் 15 வரை

### மகரம்:



மகர ராசி அன்பர்களே!

மாதம் முழுவதும் சூரியன், புதன், சனி, ஆகியோருடன் மாதப் பிற்பகுதியில் சுக்கிர னும் நற்பலன்களைத் தரவிருக்கிறார்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். அரச வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். பண வரவு கணிசமாக உயரும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிலவும். கணவன் மனைவி இடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்கள் வருகையும், அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும். உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். எதிரிகளின் தொல்லை இல்லாமல் போகும். அவர்களால் மறைமுக ஆதாயமும் கிடைக்கக்கூடும்.

உங்கள் முயற்சிகளுக்கு மனைவி, மகள் உள்ளிட்ட குடும்பப் பெண்கள் பக்கபலமாக இருப்பார்கள். ஆனால், மாதப் பிற்பகுதியில் விலை உயர்ந்த நகை மற்றும் பொருள்களை இரவல் வழங்கவும் வாங்கவும் வேண்டாம். வீட்டில் பொருள்கள் களவு போகக்கூடும் என்பதால், எச்சரிக்கையாக இருக்கவும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** அலுவலகத்தில் ஓரளவுக்கு முன்னேற்றமான சூழ்நிலையே காணப்படுகிறது. எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் ஒத்துழைப்புத் தருவார்கள். உங்கள் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதில் இருந்த தடைகள் விலகும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்த படியே இருக்கும். அரசாங்கத்திடம் எதிர்பார்த்த லைசென்ஸ் போன்ற விஷயங்கள் எளிதாக முடியும். வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் இருந்தால், அதற்கான முயற்சிகளில் இந்த வாரம் ஈடுபடலாம்.

**கலைத்துறையினருக்கு:** மறைமுக எதிர்ப்புகள் ஏற்படக்கூடும். மற்ற கலைஞர்களிடம் அனுசரனையாக நடந்துகொள்வது நல்லது. உங்களைப் பற்றிய வதந்திகள் பரவினாலும், பொருட்படுத்தாமல் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மாணவர்களுக்கு:** படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெறுவீர்கள். ஆசிரியர்களின் பாராட்டுகள் மனதுக்கு மகிழ்ச்சி.தரும். போட்டி, பந்தயங்களில் வெற்றி பெறுவீர்கள்.

**குடும்பப் பெண்களுக்கு:** மாதத்தின் பெரும்பகுதி மகிழ்ச்சி தருவதாக இருக்கும். கணவரிடம் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாகும். உறவினர்களிடையே மதிப்பு மரியாதை அதிகரிக்கும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

## நாளை
## 30.11.2017
வியாழக்கிழமை
## கார்த்திகை 14

திதி: துவாதசி பி.இ.04.09 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.ப. 1.11
சுபநேரம்: 07.44–09.14 வரை
ராகுகாலம்: 01.44–03.14 வரை

# மாரிகால மலர்கள்

கே.எஸ்.சிவஞானராஜா

கோடையின் அகோரத்தைத்தாங்கிக்கொள்ள முடியாத பூமியானது வானம் பார்த்தவாறு வரம் கேட்கின்ற நிலையில், நீலவானமோ இரங்கி தன் கருக்கட்டலைச் சுமந்து சோனாவாரியாகத்திக்கெட்டும்சிதறிடமழையாகப்பொழிகிறது.

தக்க தீம் தரிகிட தீம்.. தரிகிட தீம் தரிகிட தரிகிட … என்று தில்லானாச் சலங்கைகள் கதித்துஜொலித்துதுள்ளுவதுபோலவெள்ளம் கரை புரண்டோடுகிறது. பூமாதேவியின்மேனியெங்கும்சில்லெனப்புல்லரித்த வனப்பதினால் மொட்டுக்கள் எல்லாம் பூக்களாக விரிந்தன. விரிந்த பூக்களில் ஒன்று நல்லூரில் மணம் வீசி, பிரதேசச்செயலக மண்டபத்தில் சிங்கை ஆரமென பெயர் கொண்டது. அடுத்ததோ சாவகச்சேரியில் மணங்கொண்டு, பழநி சிக்கனக் கூட்டுறவுச்சங்கஐங்கரன்மண்டபத்தில்நளினங் கொண்டது வெள்ளியாக. மூன்றாவதோ கொக்குவில்இந்துக்கல்லூரிபஞ்சலிங்கம் மண்டபத்தில்கொடிவிட்டுஇதயங்களோடு பேசியது. நான்காவதோ, ஆன்மிகமழை பொழிந்தது மட்டு மல்ல தேனையும் வாயில் சொட்டியது. இது வானிலிருந்து தவழ்ந்திருந்தது, அளவையில் உள்ள அலுக்கை நாலடியில் பருகவும் பாடவும் வைத்தது.

## இதயம் பேசுகிறது

ஒருமாணவனின் இயத்திலிருந்துகவிதைகள் நதியாகப் பாய்கிறது. அதற்கு அணை கட்டி தேக்கி அதனுள் நீந்தி விளையாடி மேல்வரும் போது புத்தாடை புனைய வைக்கிறார். கொக்குவில்இந்துக்கல்லூரிச் சமூகம்செல்வன் ஞா.யூட்டொறிஷன்என்ற உயர்தர வகுப்பு மாணவனைத் தக்கபடி உயர வாய்ப்பளித்துள்ள ஒவ்வொருவருக்கும் பதக்கம் கொடுக்கலாம்.

## சிங்கை ஆரம்

132 இதழ்களைக் கொண்ட கனதியான காத்திரமான, நல்லூர் பிரதேசமலர் இதுவாகும். நூறு வருடங்கள் வரை வாடாமல் கொள்ளாமல் வாழ்ந்து மணம் பரப்புவதாக நாயன்மார்கட்டுத் திருக்களத்தில் அலர்ந்ததாமரைமலர்களும்மொட்டுக்களும்மலரினைத்தாங்கிட, வாசலை வரவேற்பதாக, அரசகேசரியின் மாடமாளிகையில் அரசகேசரி எழுத்தாணியுடன் இருந்து இரகுவம்சத்தை எழுதுகின்ற பாங்கும், நாயன்மார்கட்டில்அரசகேசரிப்பிள்ளையாரின்வனப்பும் வரமும் அமைப்பும் அற்புதம். நல்லூர் பிரதேச செயலகக் கலாசார உத்தியோகத்தரின் முழுமையான அர்ப்பணிப்பானது சிங்கை ஆரத்தில் ஒவ்வொரு இதழ் மடல்களிலும் தொனிக்கிறது.

வரலாறு

சங்கிலிய மன்னனின் எச்சங்களான அரண்மனை மந்திரி மனையானது எல்லோரையும் வந்து பார்க்கும் படியாகத் தன்னிலையை யுணர்த்தி வரவேற்கிறது. மேலும், வரலாற்றுச்சின்னங்கள், தொன்மங்கள், புராண இதிகாசங்கள், சமஸ்கிருத மொழி, கற்தோரண வாசல், மந்திரிமனை, யமுனாஏரி, எண்ணெய்க்காசாண்டி, தமிழ்க் கல்வெட்டு, பாரம்பரியநாற்சார்வீடுகள், ஆசிமடம், சமாதிக்கோயில், ஆவுரஞ்சிக்கல், சங்கடம்படலை, சைவப்பிரகாசஅச்சுயந்திரசாலை, கில்னர் மண்டபம், யாழ் இந்துக் கல்லூரி, சைவப்பிரகாச வித்தியாசாலை ஆகியன ஆவணத்திற்குரிய தரவுகளாகும்.

வாசிப்புமாதத்துக்கும், வாசிப்பின்மகத்துவத்துக்கும்கைகொடுக்கும் அற்புத நூலாக மட்டுமல்ல, மணநாளன்று தம்பதிகளுக்கு அன்புப் பரிசாகவும் மாலையோடு வழங்கி மகிழ முடியும். ஏனென்றால் நல்லூரின் வாசனையோடு வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது, உருவாகும் சந்ததியும் தமிழோடு நீடு வாழும்.



## கவிதைச் சரம்

மரபுக் கவிதைகளை வாசிக்குந்தோறும், இதயம்சீராகத்தனது கடமைகளைச்சமச் சீராக்குகின்றது. முதுபெரும் புலவரின் பாமாலை இதற்குச் சான்று பகர்கின்றது. அந்தாதியில் வரும் ஒரு இனிய பாடல்.

நன்றேபுரினுந் தீதே விளையினு
நாயகாவுன்
குன்றே யனைய திருக்கோயில்
சுற்றியே கும்பிடும்படி
என்றேனே! முன்னை மறந்திலம்
நீயும் மறவாதெமை
ஒன்றாயிருந்தெமை யின்று
போ லென்றுமே காத்திடாயே"

அளவெட்டிஅலுக்கைநாவலடிஞானவைரவர் ஆலயத்தில் வை.க. சிற்றம்பலப் புலவரின் உள்ளம் மகிழ்ந்து பூரித்த பாடல் இதுவாகும். 51 பாடல்கள் கொண்ட இந்த நூலானது மரபுடன் உறவானது. உறவுக்கு மலரானது விலை இருநூறு ரூபாவைப் பெறுமதியாக்கியுள்ளது. முகப்பு மூலத்தானப் பேறினை வழிபட வைக்கிறது. நாமும் வழிபடுவோமே!

தக்க தீம் தரிகிட தீம்.. தரிகிட தீம் தரிகிட தரிகிட… என்று தில்லானாச் சலங்கைகள் கதித்து ஜொலித்து துள்ளுவது போல வெள்ளம் கரை புரண்டோடுகிறது. பூமாதேவியின் மேனியெங்கும் சில்லெனப் புல்லரித்த வனப்பினால் மொட்டுக்கள் எல்லாம் பூக்களாக விரிந்தன. விரிந்த பூக்களில் ஒன்று நல்லூரில் மணம் வீசி, பிரதேசச் செயலக மண்டபத்தில் சிங்கை ஆரமென பெயர் கொண்டது.

## பழநி மலர்

சாவகச்சேரி பழநிசிக்கனக்கடனுதவிக்கூட்டுறவுச்சங்கமானதுதனதுவெள்ளிவிழா(1992-2017) மலராகஇரசனைமிக்கலாவண்யமானசிரஞ்சீவிமலரினை19.11.2017அன்றுவெளியிட்டுப்பெருமையும், பேருவகையும்அடைந்தது. மலர் ஆசிரியர் திருமதி ச. உருத்திராதேவியின் கடின உழைப்பால், பெறுமதியோடுதென்மராட்சியில் மட்டுமல்ல குடாநாட்டில் சகல இடங்களிலும் நிச்சயம் பாலிக்குமாறு இடம்பெறும். ஏனென்றால், ஒரு சங்கம் இருபத்தைந்து வருடகாலமாக நிலைத்துநின்று தொடர்ந்தும் சாதிப்பதென்றால் அது ஒரு இலகுவான காரியமல்ல.

நாற்பது பெரியார்களின் ஆசிகளோடும் வாழ்த்துக்களோடும் நிறைந்த பழனி சி.க.கூ. சங்க "மலர்" தன்னை ஒரு சரியான பாதையில் வகுத்து அடுத்து வரும் பொன்விழாவை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது.

பி.சுரேக்காவின் 'கூட்டுறவு' என்ற கட்டுரை, பதினாறு பேறுடைய அரிசிகளை சோறாக்கி உண்ண வைக்கிறது. கே.எஸ்.சிவஞானராஜாவின்இரண்டுகட்டுரைகள், பா.இராமணாகரனின்"மாறிவரும் காலநிலை" பற்றிய நீண்ட கட்டுரை ஒவ்வொருவருக்குள்ளும் நீண்டுநின்று பயன்தரக்கூடியவை. உருத்திராதேவிசண்முகநாதனின்"எமதுசமூகம்எங்கேபயணிக்கிறது"என்றபடைப்புயாவருக்கும் விருந்தாகிறது. பி.முத்துலிங்கத்தினது"கல்விபற்றியகண்ணோட்டம்" ஆறஅமர இருந்துவாசித்துப் பயன்பெறப் பகிரக்கூடியது. சிக்கனம் - சேமிப்பு' என்ற கட்டுரை க.வைகுந்தனால் சோபிக்கிறது. தி.மயூரனின் கட்டுரை "சிம்கார்ட்" பற்றிய செய்திகளைத் துளையிடவைத்து ஊற்றுக்களைக் காண வைக்கிறது.

# ஏற்றம் தரும் எலுமிச்சை



**கி.ஸ்கொட்பசீலன்**

**தாவரவியல் பெயர் :** சிட்ரஸ் அவ்றான்டிபோலியா (Citrus aurantifolia)
**தாவரக் குடும்பம் :-** ரூட்டேசியே (Rutaceae)

தமிழர்களாகிய எமது சமய கலாசார சுபகாரியங்களில்முதலிடம்வகிப்பதுஎலுமிச்சம்பழமாகும். எலுமிச்சையின்தாயகம்தென்கிழக்காசியநாடுகளாகும். பெரும்பாலும் வெப்ப மற்றும் மித வெப்ப மண்டலப் பகுதிகளில் இது வளர்கின்றது. இருப்பினும்வெப்பவலயங்களில்பயிர்ச்செய்கைமேற்கொள்கையில் நீர்ப்பாசனம் மேற்கொள்ளல் அவசியமாகும். குறுஞ்செடி வகைத் தாவரமாக எலுமிச்சை அறியப்படுகிறது. இந்தத் தாவ்ரத்தின் பழமானது பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

நீள்வட்டவடிவ,மஞ்சள்நிறமுடையபழமானதுபலசோணைகளைக் கொண்டதாகக் காணப்படும். இச் சோணைகளில் சேமிக்கப்பட்டுள்ள பழச்சாறானது பிரித்தெடுக்கப் பட்டு சமையல் மற்றும் சமையல் அல்லாத நோக்கங்களுக்காகப் பயன்படுகிறது. உணவு மற்றும் சுத்திகரிப்புக்காக எலுமிச்சம் சாறு பயன்படுத்தப் படுகின்றது. முதன்முதலாக 1784ஆம் ஆண்டில் கார்ஸ்வில் ஹெம்மீலி என்பவர் எலுமிச்சையில் சிட்ரிக் அமிலம் இருப்பதைக் கண்டுபிடித்தார். இதில்சுமார்5 முதல்6வீதம்சிட்ரிக்அமிலம்உள்ளது. இப் புளிப்புச்சுவை எலுமிச்சைப் பானம் போன்ற உணவுகளில்ஒருமுக்கியமூலப்பொருளாகஅமையகாரணமாக அமைகிறது. கண்களைப் பறிக்கும் மஞ்சள் நிறத்தில் மங்களகரமாய்காட்சிதரும்எலுமிச்சைபழத்தில்விட்டமின் 'சி' சத்து மற்றும் கல்சிய சத்து அதிகம் நிறைந்துள்ளது.

**100 கிராம் எலுமிச்சை பழத்தில்,**

| | |
|---|---|
| நீர் - | 50 கிராம் |
| கொழுப்பு - | 1.0 கிராம் |
| புரதம் - | 1.4 கிராம் |
| மாப்பொருள் - | 11.0 கிராம் |
| நார்ச்சத்து - | 1.2 கிராம் |
| கல்சியம் - | 0.80 மி.கி. |
| விட்டமின் சி - | 63.0 மி.கி |

போன்றவை காணப்படுகின்றன.

**செய்கையும் பராமரிப்பும்**

தேசிச்செய்கைக்குசிறந்தநீர்வடிப்புள்ளசேதனப் பொருள்கள்நிறைந்த இருவாட்டிமண் உகந்தது. கிடங்கின் ஆழம் 2 மீற்றர் ஆக இருத்தல் நன்று. தேசிப்பயிர்ச் செய்கையில் நடுகைப்பொருள்களாகவித்துமூலம்இனம்பெருக்கப்பட்டநாற்றுக்கள். ஒட்டுதலின் மூலம் இனம் பெருக்கப்பட்ட நாற்றுக்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. நாற்றுக்கள்தோட்டத்தில்4மீற்றர்×4மீற்றர் இடைவெளியில் நடுகை செய்யப்படும்.

60செ.மீநீள அகல ஆழமுள்ள குழிகள் வெட்டப்பட்டுநடுவதற்கு இரு கிழமைகளிற்கு முன்னதாக மேல்மண், கூட்டெரு என்பன 1:1என்ற விகிதத்தில் கலந்து நடுகைக்குழி நிரப்பப்படும். பின்பு நாற்றின் மண்மட்டமும் நிலத்தின் மண்மட்டமும் ஒன்றாக இருக்கக் கூடியவாறு நடுதல் வேண்டும்.

எலுமிச்சை பயிர்ச்செய்கையில் சிறப்பான முகாமைத்துவத்திற்கு கத்தரித்தல் மற்றும் பயிற்றுவித்தல் அவசியமானதாகும். ஆரம்பத்தில்நிலமட்டத்திலிருந்து60-75செ.மீ உயரம் வரை பக்கக்கிளைகள் எதுவும் அனுமதிக்காது தனிமரமாகவளர்க்கவேண்டும். அதன்பின்புமுதலாவது கிளையை வளர அனுமதிக்க வேண்டும். இரண்டாவது கிளையானது முதற்கிளையில் இருந்து 15 செ.மீ உயரத்தில்அதன் எதிர்த்திசையில் அனுமதிக்கப்படும். இவ்வாறே மூன்றாம், நான்காம்கிளைகளும்ஓர்சுற்றுவட்ட ஒழுங்கில் அமையுமாறு வளரவிடப்படும். இறுதியாக மரம் 2மீற்றர் உயரத்தைஅடைந்தவுடன்அதன்நுனிஅரும்பைஅகற்றி உயரம் மட்டுப்படுத்தப்படும். இடையிடையே தோன்றும் நீர்வாதுக்கள் கூரிய கத்திகள் மூலம் அகற்றப்படும். இவ்வாறு ஏற்பட்ட காயங்களிற்கு போடோ கலவை இடப்பட்டு தொற்றுதலிலிருந்து பாதுகாக்கப்படும். இவ்வாறு பராமரிப்புநடவடிக்கைகளை சரிவர மேற்கொண்டுவர மூன்றாவது வருடத்திலிருந்து அறுவடையினை பெற்றுக்கொள்ள முடியும்.

**மருத்துவக் குணங்கள்**


மருத்துவர் ப்ளென்னின் என்பவர் (1875) தனது ஆராய்ச்சியில்கெட்டகுருதியைதூய்மைப்படுத்தும் மருந்துகளில் எலுமிச்சையைச் விடச் சிறந்தது வேறு இல்லை எனக் கண்டறிந்தார். இரண்டாவது உலகப் போரின்போது ஜேர்மனிய வீரர்களின் காயத்தில் இருந்து ஒழுகும் குருதியை உடனடியாக நிறுத்த எலுமிச்சையை உபயோகப்படுத்தியதாகக் கூறப்படுகிறது. மேலும் எலுமிச்சைஉடலில்நோய்எதிர்ப்புசக்தியைஅதிகரிக்கின்றது. பசியைத்தூண்டுவதுடன்சமிபாடடைதலையும்இலகுவாக்கும். மலச்சிக்கலை நீக்க உதவும். சிறந்த தொற்றுநீக்கியாகதொழிற்படும். தடிமனைகுணப்படுத்தஉதவுகின்றது.

**எலுமிச்சைத் தோல்**

எலுமிச்சைபழத்தின்தோல், தோல்சம்பந்தப்பட்டநோய்களைப் போக்கி சருமத்திற்கு பளபளப்பைத் தருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். எலுமிச்சம் பழத்தோலில்அதிகசக்திகொண்டஎண்ணெய் இருப்பதை அறிந்தனர். இது பலவகையான நறுமணத் தைலங்கள் தயாரிப்பதற்குபயன்படுத்தப்படுகின்றது. மேலும்வாதம், எரிச்சல். தொண்டைப் புண் போன்றவற்றிற்கு அருமருந்தாகத் தொழிற்படுகின்றது. இவ்வாறான பல்வேறு மகத்துவம் நிறைந்த இலாபம் தரும் எலுமிச்சையை பயிர் செய்து வாழ்வில் நாமும் ஏற்றம் பெறுவோம்.

**மரம்மனிதனின்சுவாசம், மரம் பறவைகள் சரணாலயம், மரம் வழிப்போக்கனின் கூடாரம், மரம் பழங்கள் தரும், பயன்கள் தரும், நிழல் தரும், மழை தரும், மனிதன் காடுவரை செல்ல கூடவே வரும்**

மர நடுகை மாதம்
நவம்பர் 1- 30





> எலுமிச்சைப் பழத்தின் தோல், தோல் சம்பந்தப்பட்ட நோய்களைப் போக்கி சருமத்திற்கு பளபளப்பைத் தருவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். எலுமிச்சம் பழத் தோலில் அதிக சக்தி கொண்ட எண்ணெய் இருப்பதை அறிந்தனர். இது பலவகையான நறுமணத் தைலங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் வாதம், எரிச்சல், தொண்டைப்புண் போன்றவற்றிற்கு அருமருந்தாக தொழிற்படுகின்றது.

# ஒளி அலையும் துகளும்


## நிறப்பிரிகை குறித்த பிரபஞ்ச ஆய்வின் பயணப் பெறுதி

■ பூங்குழலி

கரும்பொருள் கதிர்வீச்சு நிறப்பிரிகையை விளக்கும் வகையில், 1900ஆம் ஆண்டு 'மக்ஸ் பிளாங்' (1858 1947) வடிவமைத்த சமன்பாடு இயற்பியலின் அடித்தளத்தையே தகர்ப்பதாக இருந்தது. அதில்தான் அவர் இன்று புகழ்பெற்று விளங்கும் 'பிளாங் கொன்ஸ்ரன்ற்' (Planck's constant) ஆகிய 'h' என்பதை அறிமுகப்படுத்துகிறார்.


1859ஆம் ஆண்டு, கிர்க்ஹாப் (1824-1887) துறை நிபுணர்களுக்கு மட்டுமே ஆர்வமிருக்கக்கூடிய ஒரு சோதனை முயற்சிக்கான பரிந்துரையாய் 'கரும்பொருள் கதிர்வீச்சு' என்ற சிந்தனையை முன்வைத்தார். பூரண கரும்பொருள் ஒன்று இருப்பின், அது எந்த நிறத்தையும் பிரதிபலிக்காமல், அனைத்து நிறங்களையும் ஏற்றுக் கொள்ளும். அப்படிப்பட்ட ஒரு பூரண கரும்பொருளும் கூட குறிப்பிட்ட ஒரு வெப்ப நிலையில், குறிப்பிட்ட சில வண்ணங்கள் கொண்ட நிறப்பிரிகையை வெளிப்படுத்தும் வகையில் ஒளிரும் என்றார் கிர்க்ஹாப். மேலும், நிலையில் அவற்றின் நிறப்பிரிகைகள் ஒன்றே போலிருக்கின்றன என்பதை இச்சோத்னைகள் வெளிப்படுத்தின. ஆனாலும் பூரண கரும்பொருளில் வெளிப்படும் நிறப்பிரிகையின் வடிவத்துக்கு எவராலும் விளக்கம் தர முடியவில்லை. கதிர்வீச்சுக்கும் வண்ணத்துக்கும் உள்ள தொடர்போ, கதிர்வீச்சு ஏன் தோன்றுகிறது என்பதோ எவருக்கும் பிடிபடவில்லை. இந்த நிறப்பிரிகையை விளக்க ப்ளாங்க் அளித்த சமன்பாடு முழுமையான விடையளித்தாலும், அதை ஏற்றுக்கொள்ள அறிவியல் உலகம், தன் அத்தனை முடிவுகளையும் கைவிட வேண்டியிருந்தது.

ஒளி அதற்கு சாத்தியப்படும் அத்தனை ஆற்றல் நிலைகளிலும் இருக்க முடியாது என்று கணித்திருந்தார் ப்ளாங்க். ஒளிக்கற்றையொன்றின் ஆற்றலை மேலும் மேலும் சிறிய துண்டங்களாய் பகுக்க முயற்சி செய்யும் போது மிகச் சிறிய, இதற்கு மேலும் பகுப்பது சாத்தியமில்லை என்ற அளவுள்ள, ஆற்றல் துண்டத்தை அடைகிறோம். இந்தத் துண்டம், 'போட்டோன்' என்று அழைக்கப்படுகிறது. அதன் ஆற்றலை அறிய உதவும் சமன்பாடு பின்வருமாறு அமைந்துள்ளது.'



© 1999 Encyclopædia Britannica, Inc.

பூரண கரும்பொருள் எப்பொருளாலானது எனினும் அது வெளிப்படுத்தக்கூடிய நிறப்பிரிகையின் தன்மை மாறாது என்றும் அவர் குறிப்பிட்டார். பூரண கரும்பொருள் வெப்பம் அதிகரித்திருந்தால், நட்சத்திரங்களைப் போல் நீல நிறம் மிகுந்து ஒளிரும் என்றும், வெப்பம் குறைவாக இருந்தால் செவ்வொளி பரப்பும் என்றும் கூறினார்.



இதன் பின் நிகழ்ந்த சோதனைகளில் வெவ்வேறு பொருள்களின் ஒளிர் நிறப்பிரிகை அளவிடப்பட்டது. கிர்க்ஹாப் கூறியதுபோல், பூரண கரும்பொருள் எப்பொருளால் செய்யப்பட்டிருப்பினும் குறிப்பிட்ட ஒரு வெப்ப

"போட்டோனின் ஆற்றல், $E = hc\lambda$" இங்கு, $\lambda$ என்ற குறி அலைநீளத்தைக் (wave length) குறிக்கிறது. மின்காந்த அலை மீண்டும் தன் முன்னைய வடிவத்துக்குத் திரும்பும் வரையிலான தொலைவு அது. நியூட்டனின் ஒளித்துகள் கோட்பாடு ஒளியை நிறை கொண்ட சிறு பில்லியர்ட்ஸ் பந்துகளாகக் கருதுகிறது. ஆனால் இங்கு போட்டோன்கள் நிறையற்றவையாகவும், இன்ன அளவு உடையவை என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாதவை யாகவும் கொள்ளப்படுகின்றன. மாறாக போட்டோன்கள் ஆற்றல் துண்டங்களாகக் கருதப்படுகின்றன.

(26ஆம் பக்கம் பார்க்க)

நெஞ்சம் நெகிழ்ந்த நினைவஞ்சலி

14 ஆம் ஆண்டு



தாயின் மடியில் 09 . 10 . 1971
தரனின் தாளில் 04 . 12 . 2003

அமரர் தம்பிரர்ஜா
சுதர்சன்
(முன்னாள் ஆசிரியர் - யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்)
திதி: ஏகாதசி (29.11.2017)

8 ஆம் ஆண்டு



தாயின் மடியில் 15 . 02 . 1975
தரனின் தாளில் 12 . 11 . 2009

அமரர் தம்பிராஜா
சயந்தன்
(முன்னாள் உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தி அதிகாரசபை)
திதி: ஏகாதசி (14.11.2017)



அன்புத் தெய்வங்களே! எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
வாழ்வுக்கு வழிகாட்டிய உங்களை
வாழ்வில் ஒரு நாளும் மறவோம்



உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

முதலாம் வட்டாரம்,
நெடுந்தீவு.

உங்கள் பிரிவால் நித்தம் துயருறும்
குடும்பத்தினர்.

## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

***வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்***

**விண்ணப்பதாரர் :- கணேசமூர்த்தி ஜீவகுமார்**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை, மல்லாகம் உப அலுவலகத்துக்கு உட்பட்ட வட்டாரம் 09, வாரிசீமா றோட் என்னும் முகவரியில் அமைந்துள்ள தெல்லிப்பளை கிழக்கு இறை நித்துருவன் என்ற ஆதனம் ஆதனப்பதிவேட்டில் பதிவில் இல்லை.

குறித்த ஆதனத்தை ஆறுமுகம் பொன்னம்பலம் என்பவரால் பிரசித்த நொத்தாரிஸ் வ.தம்பிப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 4905 / 17.02.1983 இலக்க நன்கொடை உறுதி மூலம் அவரின் புத்திரியான வேலுப்பிள்ளை நவரட்ணராஜா பெண் ஞானாம்பிகைக்கு நன்கொடையளித்தார். பிரசித்த நொத்தாரிஸ் வ.தம்பிப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 4906/ 17.02.1983 இலக்க பிரிவிடுதல் உறுதியின் மூலம் ஆறுமுகம் பொன்னம்பலமும் வேலுப்பிள்ளை நவரட்ணராஜா பெண் ஞானாம்பிகையும் பிரிவிட்டுக் கொண்டனர். பின் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி காயத்திரி அகிலன் முகதாவில் நிறைவேறிய இலக்கம் 516 / 20.05.2017 அறுதி உறுதியின்படி ஆறுமுகம் பொன்னம்பலத்தின் வாரிசுகளில் பொன்னம்பலம் கமலநாதனும் நவரட்ணராஜா பெண் ஞானாம்பிகையும் சேர்ந்து கணேசமூர்த்தி ஜீவகுமாரிற்கு அறுதியாக வழங்கியுள்ளார். ஆறுமுகம் பொன்னம்பலத்தின் மீதிப் பிள்ளைகளான சபாநாயகம்,மதியாபரணம், ஜெயராணி, செல்வராணி, சந்திரலேகா, லலிதா, கமலாதேவி ஆகியோரை நீக்கியே இவ்வறுதியுறுதி மூலம் ஆதனத்தை வழங்கியுள்ளார்.

**ஆதன விவரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை கிழக்கு இறை நித்துருவன் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.சண்முகநாதன் அவர்களின் வரைபட இலக்கம் 3146 / 13.07.2017 இன் துண்டு 01.03 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 08 குழி 15.20.

**கிழக்கு - பாதை**
**வடக்கு - ஒழுங்கை**
**மேற்கு - அ.கந்தையா, அ.செல்லத்துரையின் ஆதனம்**
**தெற்கு - அளவெட்டி ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்துக்குரிய ஆதனம்**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை கிழக்கு இறை நித்துருவன் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.சண்முகநாதன் அவர்களின் வரைபட இலக்கம் 3146/ 13.07.2017 இன் துண்டு 04 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 04 குளி 06.20

**கிழக்கு - திருமதி V.P.N. சிங்கத்தின் ஆதனம்**
**வடக்கு - பாதையும் சண்முகலிங்கம் மனைவி பரமேஸ்வரியின் ஆதனம்**
**மேற்கு - மிகுதி ஆதனம்**
**தெற்கு - கார்த்திகேசு மனைவி சோதிலட்சுமியின் ஆதனம்**

மேற்குறித்த ஆதனத்தை கணேசமூர்த்தி ஜீவகுமார் என்னும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்குப் பிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (மல்லாகம்)**
**29.11.2017**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 33ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 33ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 8ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.**

இப்பட்டமளிப்பு வைபவத்தில் சமுகமளித்துப் பட்டம் பெறுவோருக்குக் கீழ்க்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையில் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்துக்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்ளும்போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

பட்டமளிப்பு விழாவின்போது புகைப்படம் மற்றும் DVD யினை எடுப்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்ட புகைப்படப்பிடிப்பாளரிடம் பட்டமளிப்பு அங்கி பெற்றுக்கொள்ளும் தினமன்றே புகைப்படம் மற்றும் DVD பிரதிகளுக்காக பதிவுகளை மேற்கொள்ளுமாறு பட்டதாரி மாணவர்கள் வேண்டப்படுகின்றனர். குறித்த புகைப்படம் மற்றும் DVD பிரதிகளுக்கான கட்டண விவரங்களையும் தமக்காகக் குறித்தொதுக்கப்பட்ட பட்டமளிப்பு அமர்வு விவரங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்விக்கிளையின் விளம்பரப் பலகையில் பார்வையிடலாம். மேற்குறித்த விவரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி www.jfn.ac.lk.

| திகதி | நேரம் | பட்டம் |
|---|---|---|
| 04.12.2017 திங்கட்கிழமை | மு.ப. 09.00 - 12.00<br>பி.ப. 02.00 - 04.00 | விவசாய விஞ்ஞானமாணி<br>சித்தமருத்துவ சத்திரசிகிச்சைமாணி<br>தாதியியல் விஞ்ஞானமாணி<br>மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி<br>மருந்தகவியல்மாணி<br>சட்டமாணி |
| 05.12.2017 செவ்வாய்க்கிழமை | மு.ப. 09.00 - 12.00<br>பி.ப. 02.00 - 04.00 | தொழில் நிர்வாகமாணி (4/3 வருடங்கள்)<br>வணிகமாணி (4/3 வருடங்கள்)<br>பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் |

**குறிப்பு:-**

01) பட்டதாரி மாணவர்கள் கல்விக்கிளையினால் வழங்கப்படும் தொழில்பெறு இயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று முறையாகப் பூரணப்படுத்திப் பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

02) வவுனியா வளாக மாணவர்கள் 5ஆம், 6ஆம் மற்றும் 7ஆம் திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகளை வவுனியா வளாகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**- பதிவாளர் -**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நிர்வாகப் பிரிவில் கடமையாற்றும் கந்தையா பரராஜசிங்கம் அவர்களின் அன்புத் தந்தை

**சோமு கந்தையா**



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்**


# ஒளி அலையும் துகளும்

இங்கு, ஒளியின் வண்ணத்தை அதன் அதிர்வெண் (frequency =c/λ) தீர்மானிக்கிறது. அதாவது ஒரு நொடிக்கு எத்தனை அதிர்வுகள் என்ற காலக்கணக்கு. இதன் அலகு ஹெர்ட்ஸ் ஆகும். எனவே, ஒளியின் நிறத்தை நாம் அறிந்தோம் எனில், அதன் மிகச் சிறிய ஆற்றல் துண்டத்தை அதாவது, போட்டோனின் ஆற்றலை எம்மால் தீர்மானிக்க இயலும். இங்கு ப்ளாங்க் தன் சமன்பாட்டில் 'h=6.63×10-34 ஜூல்ஸ்-விநாடி' என்ற புதிய மாறிலி ஒன்றை அறிமுகப்படுத்துகிறார். அடுத்து வரவிருக்கும் குவாண்டம் விசையியலின் (Quantum Mechanics) முதல் நிழலாக இது கருதப்படுகிறது. இந்தச் சமன்பாட்டை முன்வைத்த போது ப்ளாங்க் தன் மாறிலியின் இருப்பு நிலை குறித்து அதிகம் கவலைப்படவில்லை. அதை ஒரு கணித உத்தியாகவே கருதினார். பின்னர், இந்திய விஞ்ஞானியாகிய எஸ். என். போஸ் (18941974), துகள்களின் புள்ளியியல் விசையியலை (statistical mechanics) பயன்படுத்தி நேரடியாகவே இந்தச் சமன்பாட்டைத் தோற்றுவித்தார். இவ்வாற்றல் துண்டங்கள் போட்டோன்களாக இருக்கும்போதே, போஸ் - ஐன்ஷ்டைன் புள்ளியியல் விதிகளுக்கு உட்படும் போஸான்களாகவும் இருக்கின்றன. ஆற்றல் துண்டம் என்ற கருத்துருவை அதனளவில் உண்மையான ஒன்றாய்த் துணிந்து, வெகுகாலமாய் விடையற்ற புதிராய் இருந்த வேறொரு கேள்விக்கும் ஐன்ஷ்டைன் விளக்கம் கண்டார். அதுதான் ஒளிமின் விளைவு (photoelectric effect). இந்தக் கண்டுபிடிப்பு மிலிகன் (1868 1953) மற்றும் ஐன்ஷ்டைன் இருவருக்குமே நோபல் பரிசைப் பெற்றுத் தந்தது.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**வீரசிங்கம் அரியரட்னம்**



அன்னைமடியில்
11.09.1957

ஆண்டவன் அடியில்
29.11.2016

அன்புக்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்த
பண்புடைமையுடன் பக்திவழிநடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பலசெய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்கள்
பண்புள்ளோரை பல காலம்
வாழ விடமாட்டானே இறைவன்
அன்பிற்கு இனிய அரியமே இன்று
நீ பிரிந்து ஓராண்டு ஆனதடா
தாங்க முடியவில்லையடா உந்தன் இழப்பை
பாரினில் இனி எப்போது வந்துதிப்பாய்....
உன் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கும்

மன்னார் வீதி,
நெளுக்குளம், வவுனியா

வீரசிங்கம்
குடும்பத்தினர்.

## 24 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சின்னத்தம்பி சந்திரசேகரம்**
(ஓய்வு பெற்ற P.W.D
ஓவசியர் R.M.C,R.D.A)

தோற்றம் 24.09.1929
ஒடுக்கம் 25.11.1993

வாழ்க்கை எனும் பாடத்தை
வகுத்துத்தந்து வம்சமது தழைத்
தோங்க வழியமைத்து வருகின்ற
இடர் தாங்க தாயை விட்டு
வருடங்கள் இருபத்து நான்கு
தன்னில் வருந்திய துணை
வியையும் அழைத்துக்
கொண்டீர் வருகின்ற வலிதாங்க
வாழ்த்துவீரே இருவரும் எமை.

'இன்பகம்'
இணுவில் மேற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### தங்கராசா ரம்மியன்



பிறப்பு 14.12.1981
இறப்பு 22.11.2017

வதிரியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா ரம்மியன் கடந்த 22.11.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் தங்கராசா காலஞ்சென்ற லோகசக்தி தம்பதிகளின் அன்பு நிறைந்த மகனும் மனோகரன் ஜெயகுமாரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் பிரவீணாவின் அன்பு நிறைந்த கணவரும் வாணி (ஜேர்மனி), சுரேந்திரா(பிரான்ஸ்), சுகிர்தா, காயத்திரி(லண்டன்), உஷாநத் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சிவாகரன்(ஜேர்மனி), ஜெயசீலன் (லண்டன்), யசோதா(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் அஜந்தன்(NCG Express), கஷாகரன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகலனும் லாவண்யா, லோஜினி(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கம்சவர்த்தனி(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), சாகித்யா(யா/புனிதஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கஜிஷா(சுவிஸ்), கஜீஸ்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு நிறைந்த சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2017) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் Impasse Du.Rondeau, 91080 Couronnes every France எனும் இடத்தில் ஈமக்கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: கி.மனோகரன் (மாமனார்)
தலைவர் - யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம்
தலைவர் - முன்னாள் பணியாளர் சங்கம், சிமெந்து தொழிற்சாலை
தலைவர் - காங்கேசன்துறை மீள்குடியேற்ற சங்கம்
தலைவர் - சர்வதேச நடேஸ்வரன் நம்பிக்கை நிதியம்.
இல.186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

077 6621255

## கலாநிதி அருட்கவி
## சீ.விநாசித்தம்பிப்புலவர் MA,PHD
## 12 ஆவது குருபூசைத்தினம்



கார்த்திகை : ரேவதி

அருளுருவாய் அளவைப்பதி அவதரித்த அருட்கவியே
திருவருளும் குருவருளும் ஒன்றாகி ஆசி தந்தீர்
கார்த்திகை ரேவதி காசிலிங்க ரூபமானீர்
காத்தருள்வீர் உம்மன்பர் கலங்காமல் எந்நாளும்

அருட்கவி விநாசித்தம்பிப் புலவரது குருபூசைத்தின நிகழ்வானது இன்று (29.11.2017) புதன்கிழமை, அன்னாரது சமாதியில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று தொடர்ந்து அன்னாரின் மண்ட பத்தில் அன்னதான நிகழ்வும் நடைபெறும் என் பதனை அன்பர் களுக்கு அறியத்தருவதுடன் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கு மாறும் கேட்டுக்கொள்கிறோம்.

நாகேஸ்வரம்,
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்.



மலர்வு 12 . 05 . 1933
உதிர்வு 28 . 11 . 2017

### D.G.M.யோசவ்

(முன்னாள் பொதுச்சுகாதார பரிசோதகரும் இந்நாள் ஆயுள்வேத வைத்தியரும்)

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பை சேர்ந்த ஞானப்பிரகாசம் மேரிஜோசவ் (முன்னாள் பொதுச்சுகாதார பரிசோதகரும் இந்நாள் ஆயுள்வேத வைத்தியரும்) நேற்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் ஜெபமணி(பேபி) இன் அன்புக் கணவரும் மியூறியல் அனுஷா(இத்தாலி), கிஷோர் யூட் அனுராஜ்(வைத்தியர் குருசோ வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராகுலன்(இத்தாலி), சுஜிதா(வைத்தியர், குருசோ வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் டேவின் ஷறொண், தனுஜா(இத்தாலி), பிரிந்துஷான்(யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் காலஞ்சென்ற றெஜீனா செல்லையா, வேதநாயகம், மரியநாயகம், அமிர்தநாயகம்(முன்னாள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லில்லியுஸ் ரீனா, எட்வேட் அருமைநாயகம், ஜஸ்ற்றீன் செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (29.11.2017) புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் இரங்கல் உரை நடைபெற்று 3.00 மணிக்கு புனித செபமாலை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித செபமாலை மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

# 2018ஆம் ஆண்டு பேரழிவு தரும் நிலநடுக்கங்கள் ஏற்படும்

## விஞ்ஞானிகள் கருத்து




2018 ஆம் ஆண்டில் பேரழிவை ஏற்படுத்தும் நிலநடுக்கங்கள் அதிகளவில் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமி சுழலும் வேகத்தில் மாறுதல்கள் காணப்படுவதாக ஆராய்ச்சி முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளதுடன், பூமி சுழல்வதில் காணப்படும் இந்த ஏற்றத்தாழ்வுகள் மிக மிகச் சிறிய அளவு பரிமாணத்திலேயே கண்டுகொள்ளப்பட்டுள்ளன.

பூமியின் சுழற்சிக்கும் நிலநடுக்கத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பூமியின் சுழற்சி வேகம் குறையும்போது, அது நாளின் நீளத்தில் ஒரு மில்லிசெக்கன் மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனை அணுக்கடிகாரத்தைக் கொண்டே மிகத் துல்லியமாக அளவிட முடியும். ஆனால், பூமியின் சுழற்சியில் ஏற்படும் இந்த மிகச் சிறிய மாறுதல்கள் நிலத்தடி ஆற்றல்கள் அதிகளவில் வெளிப்படுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்துவிடுகின்றன. இதனால் பூமியின் சுழற்சி வேகம் சிறிது குறைந்தாலும், அது அதிக எண்ணிக்கையில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தும்.

இது குறித்து அமெரிக்காவில் உள்ள கொலராடோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானி ரோஜர் பில்ஹம் தெரிவிக்கும்போது,

"கடந்த 1900 ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட சக்திவாய்ந்த நில நடுக்கங்களை ஆய்வு செய்தோம். பூமியின் சுழற்சியில் மாறுதல் ஏற்படும்போது சக்தி வாய்ந்த நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அந்தவகையிலே, வருகின்ற 2018 ஆம் ஆண்டில் அதிக சேதாரங்களை ஏற்படுத்தும் நிலநடுக்கங்கள் நிகழ்வதற்கு அதிக வாய்ப்புள்ளது." - என்றார்.



ஒரு எண்ணெய்! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!

- ✓ முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
- ✓ கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
- ✓ முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
- ✓ முகப்பருவா?
- ✓ தோல் சுருக்கமா?
- ✓ உதடு, குதிக்கால் வெடிப்பா?
- ✓ உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?

Royal

இன்றே பாவியுங்கள்!!!

"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"

- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching

Re- Packed By:
Royal Industry
Colombo - 13

சந்தைப்படுத்துவோர்
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 222 2567

Jaffna Casa
Ac, Non Ac Rooms
Hotel & Restaurant

உங்கள் விடுமுறை நாள்களை
இனிமையாகக் கழித்திட சண்டிலிப்பாயில்
புதியதோர் உதயம் Jaffna Casa
விருந்தினர் விடுதி உங்களை
வரவேற்கிறது.

Seerani Junction (front D.S. Office) Sandilipay,
T.P : 021 225 5140 , 077 160 4059 , 078 303 5408
Web:- www.jaffnacasa.com /
e-mail:- jaffnacasa@gmail.com

## வவுனியா வடக்கு பிரதேசசபை.
## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2018

சபையானது 2018 ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

விண்ணப்பத்திரம் வழங்கும் திகதி :- 2017.11.28 தொடக்கம் 2017.12.20 ஆம் திகதிவரை அலுவலக நாள்களில் மு.ப 9:00 தொடக்கம் பி.ப 3.00 வரை

விண்ணப்பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி : 2017.12.20 பிற்பகல் 03.00 மணி

**01. பொருள்கள்**

1) காகிதாதிகள் பொருள்கள் எழுதுபொருள்கள்
2) அலுவலகஉபகரணங்கள்
3) நூலகங்களுக்கான நூல்கள்
4) துணி வகைகள்
5) கட்டடப்பொருள்கள் ( சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள், கொங்கிறீட் தூண்கள், சீமெந்துக் கற்கள் )
6) கற்கள், மணல்,·கிரவல்
7) தீந்தைகள் வகைகள் (Paints) மற்றும் நிறம் தீட்டும்பொருள்கள்
8) நீர் வழங்கும் குழாய்கள், கியூம் பைப்புக்கள் (Hume Pipes) மற்றும் ஏனைய பொருள்கள்
9) வாகன உதிரிப்பாகங்கள், துணைபொருள்கள்
10) மின் வழங்கும் பொருள்கள், மின்பாவனைப் பொருள்கள்
11) எரிபொருள் உராய்வுநீக்கிகள்
12) இரும்புப் பொருள்கள்
13) தீராந்திகள், பலகைகள்
14) பனைமரங்கள்,சலாகைகள்
15) வாகனங்களுக்கான டயர் ரியூப் மற்றும் மின்கலன்கள்
16) கணனி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17) சுத்திகரிப்புப் பொருள்கள், கிருமிநாசினிகள்
18) பாதணிகள் தோற்பொருள்கள்
19) அலங்காரப் பொருள்கள்

**02.சேவைகள்**

1) அச்சிடுதல் புத்தகங்கள் கட்டுதல்
2) மோட்டார் வாகனங்களுக்கானஉதிரிப்பாகங்கள்
3) ஒட்டுவேலைகள்,உலோக வகைகள்
4) மின்சாதனங்கள் திருத்தம், மீளமின் வலுவூட்டல் (Battery Charge)
5) இலத்திரனியல் சாதனங்கள்
6) வாகனங்கள் ரியூப் ஒட்டுதல்
7) கோலவுடை, சீருடைதைத்தல்
8) கணனி பிரதியாக்கம் இயந்திரம் திருத்தல், சுத்திகரிப்பு (Service)
9) இறப்பர் முத்திரை தயாரித்தல்

**03. ஒப்பந்தவேலைகள் (ICTAD/ CIDA ) பதிவு உள்ளவர்கள் மட்டும்**

1) கட்டட நிர்மாண வேலைகள்
2) கிணறு அமைத்தல்
3) வீதி நிர்மாணம்,திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை-அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா1000.00 செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **வழங்கல் சேவைக்கான** விண்ணப்பம் 2018 எனக் குறிப்பிட்டுப் பதிவுத்தபால் மூலம் **செயலாளர், தலைமைக் காரியாலயம், வவுனியா வடக்கு பிரதேச சபை, நெடுங்கேணி, வவுனியா** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பபடிவங்கள் 20.12.2017ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் மேலதிக விவரங்களுக்கு 024-3248346 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**கந்தசாமிசத்தியசீலன்,**
**செயலாளர்,வவுனியாவடக்குபிரதேச சபை,**
**நெடுங்கேணி.**

## வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை
## வழங்குனர்களையும்,ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் -2018

சபையானது 2018ஆம் ஆண்டுக்கான கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்கள், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**1. பொருள்கள்**

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. கட்டடப் பொருள்கள்
05. கற்கள், மணல்,கிரவல்
06. தீந்தைவகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருள்கள்
07. நீர்வழங்கும் குழாய்கள், கியூம்பைப்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
08. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்
09. மின்வழங்கும் பொருள்கள், மின்பாவனைப் பொருள்கள்
10. எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள்
11. இரும்புப் பொருள்கள்
12. தீராந்திகள்,பலகைகள்,சட்டங்கள்
13. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
14. கணனி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
15. சுத்திகரிப்பு பொருள்கள், கிருமிநாசினிகள்
16. பாதணிகள், தோற்பொருள்கள்
17. இலத்திரனியல் பொருள்கள்.
18. வாகன சுத்திகரிப்பு பொருள்கள்
19. இறப்பர் முத்திரை தயாரித்தல்

**2. சேவைகள்**

01. அச்சிடுதல்
02. மோட்டார் வாகனம், உழவு இயந்திரம் திருத்தல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்
04. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
05. மீளமின் வலுவூட்டல்
06. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல்
07. வாகனங்கள் சுத்திகரிப்பு
08. கணனிப் பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு (Service)

**3. ஒப்பந்தவேலைகள்** (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கமுடியும்)

01. கட்டட நிர்மாணவேலை
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாண/ திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை அலுவலக நாள்களில் மு.ப.8.30-பி:ப 3.00 மணிவரையும் பிரதேசசபை வெங்கலச் செட்டிகுளம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் **விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000.00 உம் பதிவுக் கட்டணமாக ரூபா 1000.00** செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2018** எனக் குறிப்பிட்டுப் பதிவுத்தபால் மூலம் **செயலாளர், வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை, மன்னார் - மதவாச்சி வீதி வெங்கலச் செட்டிகுளம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் 20.12.2017 ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு **024-2260913** அல்லது **024-2260914** எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**செயலாளர், பிரதேச சபை**
**வெ.செட்டிகுளம்**
29.11.2017

வேலையாள் தேவை

நிறுவனம் ஒன்றிற்கு
O/L , A/L படித்த பெண்
வேலையாள் தேவை.

தொடர்பு நேரம் :- மாலை 4.30 - இரவு 09 மணி வரை
076 551 8863

விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பணியினால் ஏற்படும் சஞ்சலம் தவிர்க்க இஷ்ட தெய்வ வழிபாடு செய்யவும். சட்ட திட்டத்தை மதித்து நடக்க வேண்டும். தொழிலில் அளவான மூலதனம் போதும்.

**இடபம்:** பெருந்தன்மையுடன் செயல்படுவீர்கள். எதிரி களிடம் மதிப்பு உயரும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** அவசியமற்ற பணக்கடன் பெற வேண்டாம். தொழில், வியாபார நடைமுறையில் மாற்றம் செய்வது அவசியம். சேமிப்புப் பணம் உரிய செலவுக்குப் பயன்படும்.

**கடகம்:** நண்பருடன் வீண் விவாதம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். சிறு அளவில் பணக்கடன் பெறும் சூழல் உருவாகும்.

**சிங்கம்:** எதிர்மறை எண்ணம் உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழில் வியாபார இலக்கு கால தாமதமாக நிறைவேறும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** எதிர்காலத் திட்டம் குறித்துச் சிந்திப்பீர்கள். நண்பர் வழியில் உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**துலாம்:** நண்பரிடம் அன்பு அதிகரிக்கும். தொழில் வியா பாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு. தாராள பணவரவில் நிலுவை கடன் செலுத்துவீர்கள்.

**விருச்சிகம்:** மனதில் ஏற்படும் குழப்பம் தீர்க்க வழிபாடு அவசி யம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை தரும். தொழிலில் நிலுவைப் பணியை உடனே நிறைவேற்றுவது அவசியம்.

**தனுசு:** இடம், பொருள், ஏவல் கடைபிடிப்பது நல்லது. தொழில் வியாபாரம் வளர புதிய நுட்பங்கள் தேவைப்படும். கண்களின் பாதுகாப்பில் கவனம் வேண்டும்.

**மகரம்:** சிறிய முயற்சியும் அதிக நன்மையை தரும். தொழில் வியாபாரத்தில் நினைத்த காரியம் நிறைவேறும். குழந்தை களின் செயல் பெருமை தேடித்தரும்.

**கும்பம்:** தவறான விமர்சனங்களை கண்டுகொள்ளாமல் இருப்பது நல்லது. தொழிலில் உள்ள நிலுவைப் பணி படிப்படியாக நிறைவேறும். பணவரவு சுமாராக இருக்கும்.

**மீனம்:** மிகுந்த உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை செழிக்கும். பணவரவில் இலாப விகிதம் கூடும்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 9 | 2 | 5 | 7 | 8 | 4 |
| 4 | 5 | 9 | 7 | 8 | 6 | 1 | 2 | 3 |
| 8 | 2 | 7 | 1 | 4 | 3 | 9 | 6 | 5 |
| 5 | 8 | 4 | 3 | 1 | 9 | 2 | 7 | 6 |
| 7 | 6 | 1 | 2 | 5 | 8 | 3 | 4 | 9 |
| 3 | 9 | 2 | 6 | 7 | 4 | 8 | 5 | 1 |
| 2 | 4 | 5 | 8 | 3 | 1 | 6 | 9 | 7 |
| 6 | 1 | 8 | 5 | 9 | 7 | 4 | 3 | 2 |
| 9 | 7 | 3 | 4 | 6 | 2 | 5 | 1 | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 8 | 3 | 5 | 9 | 7 | 4 | 6 |
| 7 | 5 | 4 | 1 | 6 | 2 | 8 | 3 | 9 |
| 3 | 9 | 6 | 8 | 7 | 4 | 2 | 1 | 5 |
| 8 | 4 | 5 | 2 | 1 | 6 | 9 | 7 | 3 |
| 1 | 7 | 9 | 5 | 4 | 3 | 6 | 8 | 2 |
| 6 | 2 | 3 | 9 | 8 | 7 | 4 | 5 | 1 |
| 9 | 6 | 1 | 4 | 3 | 8 | 5 | 2 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 9 | 5 | 1 | 6 | 8 |
| 5 | 8 | 7 | 6 | 2 | 1 | 3 | 9 | 4 |

நேற்றைய சுடோக்கு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.




## ரஜினி - மம்முட்டி மீண்டும் இணைவு

மணிரத்னம் இயக்கத்தில் தளபதி படத்தில் இணைந்து நடித்த ரஜினியும், மம்முட்டியும் 26 வருடங்களுக்கு பிறகு மீண்டும் இணையவிருக்கின்றனர்.

1991ஆம் ஆண்டு ரஜினியும், மம்முட்டியும் நடித்த தளபதி' படம் மிகப்பெரிய வெற்றிபெற்றது. மணிரத்னம் இயக்கத்தில் நட்பை மையப்படுத்தி எடுக்கப்பட்ட இந்தத் திரைப்படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. ரஜினியும், மம்முட்டியும் இந்தப் படத்தில் இணைபிரியாத நண்பர்களாக வலுவான பாத்திரங்களில் நடித்திருந்தார்கள்.

தற்போது இவர்கள் இருவரும் மீண்டும் இணைந்து நடிக்க வுள்ள னர். மராத்தியப் படத்திலேயே இவர்கள் இருவரும் இணைந்து நடிக்கவுள்ளனர். அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் இந்தப் படத்தின் படப்பிடிப்புப்பணிகள்ஆரம்பமாகும்என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலகிலேயே மிகப் பெரிய அற்புதம்

உலகிலேயே மிகப் பெரிய அற்புதம் என்ன என்று ஒரு முனிவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் "நான் இங்கு என்னுடன் தனித்து அமர்ந்தவாறு இருக்கிறேன்" என்பதுதான் என்று பதிலளித்தார்

இந்த உலகில் யாருமே தனித்திருக்க விரும்புவதில்லை. தனித்திருத்தலே மிகப் பெரிய அற்புதம். தனித்திருத்தலில் நீங்கள் அப்படியே உங்களுடன் மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள்

தனித்திருத்தல் (alone)
தனித்துவிடப்படல் (lonely)

இரண்டுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் உண்டு. தனித்துவிடப்படலில் நீங்கள் மற்றவருக்காக ஏங்குகிறீர்கள். உங்களுடன் உங்கள் மனைவியோ, கணவரோ, நண்பரோ, அப்பாவோ, அம்மாவோ யாராவது கூடவே இருந்தால் நல்லது என்று ஏங்குகிறீர்கள். மற்றவர் உங்களுடன் இருந்தால் நன்றாக இருக்கும். ஆனால் மற்றவர் உங்களுடன் இல்லை. மற்றவர் இல்லாத நிலைதான் தனித்துவிடப்பட்ட நிலை. ஆனால் தனித்திருத்தல் உங்கள் பிரசன்னமாகும். இந்த அகிலம் முழுவதையுமே நிரப்பி விடுமளவுக்கு நீங்கள் உங்கள் பிரசன்னத்தால் நிரப்பப் பட்டுள்ளீர்கள். இதில் மற்றவர் யாரும் துணையிருக்கத் தேவையில்லை. இதை உணர முயற்சி செய்யுங்கள் சிலபோதேனும் சற்றே தனித்திருந்து பாருங்கள். வெறுமனே உட்கார்ந்தி ருங்கள். சும்மா இருத்தல் தனித்தி ருத்தல். தனித்து உட்கார்ந்து இருங்கள் இதுவே தியானம் எனப்படும்.



**வாழ்க்கை என்னென்ன கற்றுக் கொடுத்துச்செண்டு லிஸ்ட் போட்டால்..**




**அது கடைசி வரைக்கும் கற்றுக் கொடுக்கிறதை மட்டும்தான் வேலையா வைச்சிருக்கு... வாழவே விடுறதில்லை..**

**ஆசை.... பேராசை... இரண்டுக்கும் வித்தியாசம்....?**



**நீ... கல்யாணம் பண்ணிக்கனும்னு நினைக்கிறது ஆசை... ஆனா அதுக்குப் பிறகு சந்தோசமாக இருக்கனும்னு நினைச்சா அது பேராசை**

நேற்று செய்யவேண்டியதை இன்று செய்தால்... சோம்பேறி...
இன்று செய்ய வேண்டியதை இன்றே செய்தால்... சுறுசுறுப்பானவர்...
நாளை செய்ய வேண்டியதை இன்று செய்தால்... வெற்றியாளர்...

## மைத்திரி...

உதறித்தள்ளி அரசைவிட்டு வெளியேறவேண்டும் என்று முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனையே இந்த இழுபறிநிலைக்கு முக்கிய காரணமெனக் கூறப்படு கின்றது.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு முன்னர் மைத்திரி அணியையும், மகிந்த அணியையும் ஒன்றிணைப்பதற்காக இரு தரப்புகளிலிருந்தும் மூவரடங்கிய குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு குழுக்களும் கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தின. இணக்கப்பாடு எதுவும் எட்டப்படவில்லை. இரண்டாம்கட்டச் சந்திப்பு 28ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று இரு தரப்பினரும் பேச்சு நடத்தினர்.

மகிந்த அணியால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைப் பட்டியல் சம்பந்தமாகவும், மைத்திரி தரப்பால் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்தும் அங்கு விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கூட்டு அரசில் வகிக்கும் அமைச்சுப் பதவிகளைத் துறந்துவிட்டு வந்தால் மாத்திரமே இணைப்பு சாத்தியமாகும் என்று மகிந்த அணியின் பேச்சுக்குழு தெரிவித்தது. தமது அணியின் நாடாளுமன்றக்குழு இது விடயத்தில் உறுதியாகவே இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டியது.

தமது நேர்மைத்தன்மையை நிரூபிப்பதற்காக சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பட்ஜட்டுக்கு எதிராக வாக்களிக்கவேண்டும் என்ற நிபந்தனையும் வைக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு உடனடியாக சம்மதம் தெரிவிப்பதற்கு மைத்திரி தரப்பின் பேச்சுக்குழு மறுத்துவிட்டது. தமது கோரிக்கைகளுக்குப் பச்சைக் கொடி காட்டினால் மாத்திரமே இணைவு சாத்தியமாகும் என மகிந்த அணி திட்டவட்டமாகக் கூறிவருகின்றது. இருவாரங்களுக்குப் பின்னரே இரு தரப்புகளுக்கும் இடையே அடுத்த சந்திப்பு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-5)

## அஞ்சல்...

கள் திணைக்களம் தெரிவித்தது.

இலங்கையிலுள்ள் ஏழு மாநகர சபைகள், 18 நகர சபைகள், 68 பிரதேச சபைகள் உள்ளிட்ட 93 உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல்களை நடத்துவதற்கான வேட்புமனுக்கள் அடுத்த மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை கையேற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில், தேர்தல் நடக்கவுள்ள 93 உள்ளூராட்சி சபைகளிலும் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் நாளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## அரச...

தொழிற்சங்கம் நேற்று பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்தது. அது இன்றும் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தொழிற்சங்கத்தினுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத நிலையில் இன்றும் வடக்கு முழுவதும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபடாது" என வாமதேவன் தெரிவித்தார்.

"தொழிற்சங்கத்தினரால் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்தை டிசெம்பர் 13ஆம் திகதியே நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அந்தக் காலப்பகுதியில் ஜி.சி.ஈ. சாதாரண தரப்பரீட்சை இடம்பெறவுள்ளது. மாணவர்களின் நலன்கருதியே நேற்று பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது. அது இன்றும் தொடர்கிறது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (உ-21)

## சமஷ்டி...

மண்டபத்தில் உள்ளூர் நேரப்படி பிற்பகலில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நாடு பிளவுபடாத அரசியல் தீர்வுடன் நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்வதே தனது நோக்கம் எனவும் அங்கு தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகல மக்களும் அமைதி, ஒற்றுமை மற்றும் சகவாழ்வுடன் வாழ்வதை உறுதிப்படுத்துவேன். இராணுவத்தினரையோ அல்லது தேசிய பாதுகாப்பையோ பலவீனப்படுத்துவதற்காக நான் நாட்டைக் கையேற்கவில்லை, உலகை வெற்றிகொள்வதற்குக் காணப்பட்ட சவாலையே நான் முதலாவதாக நிறைவேற்றியுள்ளேன்.

உலகின் பலம் மிக்க தேசங்களின் உதாசீனத்துக்கு ஆளாகியிருந்த நம் தேசம் மீண்டும் நன்மதிப்பைக் கடந்த மூன்று வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள என்னால் முடிந்துள்ளது. எவர் எதனைக் கூறினாலும் தற்போது நாட்டுக்காக நான் முழு உலகையுமே வெற்றிகொண்டுள்ளேன்.

சிறந்த வெளிநாட்டுக் கொள்கையால் பன்னாட்டுப் போர்க் குற்ற விசாரணை, பன்னாட்டு நீதிபதிகள் பற்றிய சர்ச்சைகளை நிறைவு செய்துள்ளேன். அதனை ஏற்றுக்கொள்ள விரும்பாத சிலர் தொடர்ந்தும் அது பற்றிய உரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது நாட்டில் பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் இடம்பெற்று வருவதுடன் சகல மக்களும் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்காக அரசும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது-என்றார். (உ-21)

## பிரபாகரனின்...

நாள் தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பயங்கரவாதக் குழுவின் தலைவரான பிரபாகரனின் பிறந்தநாளைக் கொண்டாடும் வகையில் வடக்கில் கொண்டாட்டங்கள் நடைபெற்றுள்ளன. கேக் வெட்டி பிறந்த தினம் கொண்டாடப்பட்டுள்ளது. புலிக் கொடிகள் ஏற்றப்பட்ட சில சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இவை பயங்கரவாதச் செயற்பாடுகள் என்ற கோணத்திலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் சட்டத்துக்கு மாறானவை. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட இயக்கமாகும். பயங்கரவாதப் பட்டியலில் உள்ள இயக்கமாகும். இலங்கையில் புலிகள் சார்ந்த எந்தவொரு செயற்பாட்டையும் முன்னெடுக்க முடியாது என்பதே சட்டமாகும்.

அவ்வாறு இருக்கையில் வடக்கில் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக, குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் பொலிஸார் ஊடாகத் தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம்.

வடக்கில் சாதாரண மக்கள் மத்தியில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளாகவே இதனை நாம் கருதுகின்றோம். இன்று வடக்கு மக்கள் ஜனநாயகத்தின் பக்கம் திரும்பியுள்ள நிலையில் அவர்களை மீண்டும் ஆயுத கலாசாரத்தின் பக்கம் கொண்டுசெல்ல வடக்கின் தமிழ் அடிப்படைவாத அரசியல்வாதிகள் சிலரும் அமைப்புகள் சிலவும் முயற்சித்து வருகின்றன.

இதற்கு அரசாக நாம் ஒருபோதும் இடமளிக்க முடியாது. விரைவில் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் பக்கம் தமிழ் அரசியல் கட்சிகள் செயற்பட்டுவரும் நிலையில் ஒரு சிலரின் தேவைக்காக நிராகரிக்கப்பட்ட நபர்கள் இவ்வாறு பிரிவினைவாத செயற்பாடுகளை தோற்றுவிப்பது கண்டிக்கத்தக்கது - என்றார். (உ-5,31)

## துப்பாக்கி...

கவசங்களையும், 15 ரவைகளையும் களவாடி அவற்றைப் பயன்படுத்தி பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் அவர் இந்தக் குற்றங்களில் ஈடுபட்டார். 2010ஆம் ஆண்டு வவுனியா பொலிஸ் நிலையத்தில் இவர் தொடர்பில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இந்த நபரைக் கைது செய்தனர். விசாரணைகளின் அடிப்படையில் குற்றங்களுக்குப் பயன்படுத்திய துப்பாக்கி மற்றும் ரவைகள் 2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி வவுனியா, பட்டக்காடுகுளத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. அவருக்கு எதிராக இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தால் குற்றப் பகிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

ரி56 ரகத் தன்னியக்கத் துப்பாக்கியைத் தனது உடைமையில் வைத்திருந்தமை, 15 துப்பாக்கி ரவைகளை உடைமையில் வைத்திருந்தமை ஆகிய இரு குற்றச்சாட்டுக்கள் அவர் மீது சுமத்தப்பட்டன.

வழக்கு நேற்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சசிமகேந்தரன் முன்னிலையில் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது.

முதலாவது குற்றத்துக்காக ஆயுள்கால சிறைத் தண்டனையும், இரண்டாவது குற்றத்துக்காக ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இதேநபர் 2009ஆம் ஆண்டு வவுனியா, இலுப்பைக்குளத்தில் உள்ள வீடொன்றில் கொள்ளையிட்டமைக்காக 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 2 ஆண்டு கடூழியச் சிறையும், 2010ஆம் ஆண்டு கணேசபுரத்தில் உள்ள வீடொன்றில் கொள்ளையடித்த குற்றத்துக்காக 25 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இந்தக் குற்றங்களுக்கும் அவர் களவாடிய ஆயுதங்களை உபயோகப்படுத்தினார் என்று தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. (உ-ற-4)

## வழக்கு...

வகையில் நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கு மீளப்பெறப் படும் என்று உதயன் அறிந்தது.

உள்ளூராட்சி சபை எல்லைகள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்பாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு வெளியிட்ட வர்த்தமானி அறிக்கையைத் தடைசெய்யக் கோரி உயர் நீதிமன்றத்தில் 6 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவை விசாரணைக்கு ஏற்கப்பட்டு அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. வழக்கு டிசெம்பர் 4ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதனால் 203 உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த மனுக்கள் அனைத்தும் இன்று மீளப் பெறப்படும் என்று உதயன் அறிந்தான். இந்த மனுக்களை இன்று விசாரணைக்கு எடுக்குமாறு கேட்டு சட்ட மா அதிபர் நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்கிறார். அப்படி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும்போது தாம் தமது மனுக்களை மீளப்பெறுவதாக மனுதாரர்கள் அறிவிப்பார்கள் என்று தெரிகிறது.

அப்படி வழக்கு மீளப்பெறப்பட்டால் அனைத்துச் சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்தும் வாய்ப்பு ஏற்படும். ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள 93 சபைகளுக்குமான தேர்தலுடன் ஏனைய சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தல் நடத்தப்படும்.

முன்னதாக, மனுதாரர்களுடன் பேசி வழக்கை மீளப்பெறச் செய்வதற்கான முயற்சிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக மனுதாரர்களுடன் இணக்கப் பேச்சு நடத்த மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. தலைமை அமைச்சர் ரணில், சபாநாயகர் கரு, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இதன் அடிப்படையில் "மனுதாரரின் சட்டத்தரணியுடன் இன்று (நேற்று) பேசினேன். தனது கட்சிக்காரருடன் பேசியே பின்பே முடிவைத் தெரிவிக்க முடியும் என்று அவர் கூறினார்" என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

எனினும் வழக்கை மீளப் பெறும் முடிவுக்கு மனுதாரர்கள் வந்துள்ளனர் என்று உதயன் அறிந்தான். இன்று அந்த முடிவு நீதிமன்றத்தில் அறிவிக்கப்படும் என்றும் அறிந்தான்.

அப்படி நடந்தால் அனைத்துச் சபைகளுக்கும் திட்டமிட்டபடி ஜனவரி 29ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று தெரிகிறது. (உ-5)

## சாவகச்சேரி....

தேர்தல்கள் ஆணைக்குழு 93 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்த முடிவு செய்தது. வடக்கில் சாவகச்சேரி நகர சபை மாத்திரமே அதில் உள்ளடங்குகின்றது.

சாவகச்சேரி நகர சபைக்குள் 11 வட்டாரங்கள் உள்ளடங்குகின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலிருந்தும் ஒவ்வொருவர் தெரிவு செய்யப்படுவர். விகிதாசார அடிப்படையில் 7 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். மொத்தம் 18 பேர் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான வேட்புமனுவில் 21 பேர் உள்ளடங்கியிருக்க வேண்டும். முதலாவது வேட்புமனுவில் 11 பேரும், இரண்டாவது வேட்புமனுவில் 10 பேரும் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும். முதலாவது வேட்புமனுவில் கட்டாயம் ஒரு பெண்ணும், இரண்டாவது வேட்புமனுவில் 5 பெண்களும் உள்ளடக்கப்பட்டிருக்கவேண்டும். (உ-5)

## கடும்...

றராகக் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கையின் தென்கிழக்குத் திசையில் வளிமண்டலத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இதனால் கடும் மழை, காற்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையின் வடக்கு -கிழக்கு மாகாணங்கள் உள்பட 5 மாகாணங்களில் கடும் மழை எதிர்பார்க்கப்படுகின்றது. இடி, மின்னல் தாக்கமும் அதிகமாக இருக்கும் என்பதால் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்" என்று இது தொடர்பாகத் திணைக்களம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டு ஊடகங்கள் சில இலங்கையில் புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு அபாயங்கள் ஏற்படும் எனத் தொடர்ந்து செய்தி வெளியிட்டு வருகின்றன. அவ்வாறான எந்தவொரு தகவல்களும் தமக்கு கிடைக்கவில்லை என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுசா வர்ணசூரிய தெரிவித்தார்.

"உலகின் பல்வேறு நாடுகள் வேறுபட்ட தொழில்நுட்பங்களைக் கையாண்டு வானிலை குறித்த தகவலைச் சேகரித்து வருகின்றன. அவ்வாறான தொழில்நுட்பங்கள் இலங்கைக்குப் பொருத்தமானதாக இருக்காது. பெரும்பாலான வானிலை தொடர்பான வெளிநாட்டு அறிக்கைகள் நம்பகமானவை அல்ல. நாட்டில் ஏற்பட்டுள்ள காலநிலையால் தொடர்ந்து மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகளே இருக்கின்றன" என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-5)

## தமிழ் இனம்...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது:

கேள்வி: மாவீரர் நாள் மக்கள் எழுச்சி நிகழ்ச்சிகள் பற்றிய உங்கள் கருத்தென்ன?

பதில்: மக்கள் தங்களை உணரத் தொடங்கிவிட்டார்கள். தங்கள் சக்தியை உணரத் தொடங்கிவிட்டார் கள். தங்கள் உரித்துக்கள் என்ன என்பதையும் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்று கருதுகின்றேன்.

நல்லாட்சி கொண்டுவந்த அரசால் வல்லாட்சியின் வசம் திரும்ப முடியாததால் முன்னைய அரசு காலத்தில் இருந்த கெடுபிடிகள் குறைந்திருந்தன.

மாவீரர்களை மலினப்படுத்துவதே மக்களின் மனோநிலை என்றிருந்தால் இவ்வளவு எழுச்சியைக் காட்டியிருக்கமாட்டார்கள்.

முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க உணர்வலை இந்த ஆண்டு கூடியுள்ளது. உள்ளேயிருந்த உணர்ச்சிகளை இதுகாறும் எம் மக்கள் தடைபோட்டு வைத்திருந்தார்கள். அவ்வாறு தடை போடத் தேவையில்லை என்றவாறு அரசியல் நிலை மாற்றம் அடைந்ததும் தமது உணர்ச்சிகளை ஊர் அறிய உலகறிய மக்கள் வெளிக்காட்டியுள்ளார்கள்.

எமது மக்களிடையே ஒரு பயம் பிறந்து விட்டது என்று கருதுகின்றேன். விடுதலை வீரர்கள் வலம் வந்த காலத்தில் ஈழத்தைவிட எல்லாமுந் தருவோம் என்ற சிங்கள அரசியல்வாதிகள் இன்று சொற்களால் எமக்கு சுகம் தரலாம் என்று எண்ணுவதைப் பார்த்து இவ்வளவுதான் கிடைக்குமா, எமது வேணவாக்கள் அடிப்படை வேண்டுதல்கள் நிறைவேறாதோ என்ற பயம் பீடித்துள்ளது.

அன்று இருந்த நிலையை எண்ணி அப்போதைய அதிகாரங்களை எண்ணி அன்றைய விடுதலை வீரர்களை எண்ணித் தமது மரியாதைகளை, மாண்பை தன்னெழுச்சியாகத் தெரிவிக்கத் திரண்டனர் என்று கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. எங்கே எமது தலைவர்கள் விலைபோய் விடுவார்களோ மற்றும் அரைகுறைத் தீர்வைத் தம்மீது திணித்து விடுவார்களோ என்று எண்ணி அஞ்சி விடுதலை வீரர்களின் நினைவேந்தலில் மன நிறைவு காண எத்தனித்துள்ளார்கள். கொள்கைகளில் உறுதியாக இருந்தவர்களின் நினைவில் அமைதி காண எத்தனித்துள்ளார்கள்.

துயிலும் உள்ளங்கள் எமது மக்களுக்குத் துயர் வர விட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எழுந்துள்ளது போன்று தோன்றுகின்றது. அச்சுறுத்தல்கள் ஆங்காங்கே இருந்திருப்பினும் அச்சமின்றி மக்கள் ஒன்று சேர்ந்தமை அரசுக்குத் தலையடி கொடுத்திருக்கிறது. எமது இனம் விழித்துக் கொண்டிருக்கின்றது என்பதற்குத் துயிலும் இல்ல தொடர்பாடல்கள் கட்டியம் கூறி நிற்கின்றன என்றுள்ளது. (உ-5)

## ஈபிடிபி...

அந்தக் கட்சியின் சார்பில் ஐ.சிறிரங்கேஸ்வரன் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள தேர்தல் பணியகத்தில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கட்டுப்பணம் செலுத்தி, வேட்பாளர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றார்.

நேற்றுமாலை வரையில் அந்தக் கட்சி மாத்திரமே கட்டுப் பணம் செலுத்தியுள்ளது. (உ-5,8)



இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய தேசிய மட்ட கராத்தே தொடரில் மகாதேவா ஆச்சிரம மாணவி கேசாளினி வெண்கலப் பதக்கம் வென்றார். 21 வயதுப் பெண்களுக்கான காட்டாப் போட்டியிலேயே அவர் வெண்கலப் பதக்கத்தைத் தனதாக்கினார். (ம-23)

## வடமராட்சி வலயத்தின் வர்ண இரவு நாளை

யாழ்., நவ. 29
வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம் நடத்தத்திட்டமிட்ட விளையாட்டுத் துறை வெற்றியாளர்களை மதிப்புறுத்தும் வர்ண இரவுகள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல். இளங்கோவனும் சிறப்பு விருந்தினராக வட மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன், மதிப்புறு விருந்தினராக பிரபல வர்த்தகர் கே.ரி.ஐங்கரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். சுமார் 200 பேர் நிகழ்வில் மதிப்புறுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-108)

## பருத்தித்துறை தற்காப்புக் கலையகத்துக்கு தேசிய மட்டத்தில் தங்கம்



யாழ்ப்பாணம், நவ. 29
இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திவரும் தேசியமட்டத் தொடரில், பருத்தித்துறை தற்காப்புக் கலையகத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.
கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்று இடம்பெற்ற இந்தப் போட்டியில் 18 வயதுப்பிரிவு ஆண்களுக்கான குமித்தே பிரிவில் பருத்தித்துறை தற்காப்புக் கலையகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த காந்தறூபன் தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-23)

உங்களுக்கும், உங்கள் வியாபாரத்திற்கும் உங்கள் சேவைக்கும் ஒரு உதவிக்கை!

**உங்கள் தொடர்பு இலக்கத்தினை எங்களுக்கு கொடுங்கள்**

உங்கள் வியாபாரத்திற்கு வாடிக்கையாளர்களை நாம் பெற்றுத்தருவோம்

உங்கள் வியாபாரத்தினை மேம்படுத்த SLT RAINBOW PAGES உடன் **இலவசமாக பதிவு** செய்து கொள்ளவும்

Sri Lanka Telecom



இப்புதிய சேவையின் மூலம் நாம் பலதரப்பட்ட வாடிக்கையாளர்களை நாம் உங்களுடன் இனைப்போம்

**உங்கள் தகவல்களை எங்களுக்கு அனுப்பி வைக்க கூடிய வழிகள்:**

- த.பெ இல. 2233, கொழும்பு என்ற முகவரிக்கு ஒரு தபால் அட்டையை அனுப்பி வைக்கவும்,
- **rainbowpages.lk Log** செய்து **"Register Your Business"** ஐ க்ளிக் செய்யவும்,
- **info@rainbowpages.lk** க்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி வைக்கவும்,,
- **0712399399** என்ற இலக்கத்திற்கு **SMS, Viber or WhatsApp message** ஒன்றை அனுப்பி வைக்கவும்,
- **0112391888** என்ற இலக்கத்திற்கு **Fax** ஒன்றை அனுப்பி வைக்கவும்,

SLT RAINBOW PAG
Print & Digital Directo

**உங்கள் வியாபாரத்திற்கு ஸ்ரீ லங்கா டெலிகொம்மிடருந்து ஒரு உதவிக்கை!**

## சைவச் சிறுவர் இல்லத்துக்கு கிடைத்தது வெண்கலப் பதக்கம்



யாழ்ப்பாணம், நவ. 29
இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திவரும் தேசியமட்டத் தொடரில் 21 வயது ஆண்கள் பிரிவில் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்துக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.
கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்தத் தொடரில், 21 வயதுப்பிரிவு ஆண்களுக்கான 55-60 எடைப்பிரிவு குமித்தே போட்டியில் எஸ்.கமல்ராஜ் வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)

## வென்றது றேஞ்சர்ஸ்

யாழ்ப்பாணம், நவ. 29
சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.
அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் 'ஏ' அணியை எதிர்த்து சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)



## வேண்டும் ஸ்ரோக்ஸ்

ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியில் ஸ்ரோக்ஸ் சேர்க்கப்பட வேண்டும் என்று பல தரப்புக்களிடம் இருந்து பல்வேறு கருத்துக்கள் வந்துள்ளன.

ஆஷஸ் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 10 இலக்குகளால் தோல்வியடைந்ததை அடுத்தே ஸ்ரோக்ஸ் அணியில் வேண்டும் என்ற குரல்கள் வலுப்பெற்றுள்ளன.

ஆரம்பத்தில் ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியின் உபதலைவராகப் பெயரிடப்பட்டிருந்தார் ஸ்ரோக்ஸ். தொடர் ஆரம்பமாவதற்கு சில தினங்களுக்கு முன்னர் இரவுநேர விடுதியொன்றில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்டார் என்று ஸ்ரோக்ஸ் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டு அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ள இங்கிலாந்து கிரிக்கெட் சபை, ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியிலிருந்து ஸ்ரோக்ஸை விடுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# துடுப்பாட்டத் தளம்பல் தோல்விக்குக் காரணம்

### சந்திமல் அதிருப்தி



இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்தமைக்கு துடுப்பாட்ட வரிசையில் ஏற்பட்ட தடுமாற்றமே காரணம் என்று தெரிவித்தார் இலங்கை அணியின் தலைவர் சந்திமல்.

நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த இந்த ஆட்டத்தில் இந்திய அணி இன்னிங்ஸ் வெற்றியைப் பதிவுசெய்தது. இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே சந்திமல் இவ்வாறு தெரிவித்தார்.

"நாணயச் சுழற்சியில் வென்றது சிறப்பானதுதான். துரதிர்ஷ்டவசமாக முதல் நாளிலேயே நாங்கள் மோசமாக விளையாடி விட்டோம். எங்களது துடுப்பாட்டம் மீண்டும் சரிவைச் சந்தித்துள்ளது. இந்திய அணிக்கு எதிராக விளையாடும் போது,350 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க வேண்டும் என்று இந்தத் தொடருக்கு முன்னதாக நாங்கள் திட்டம் தீட்டியிருந்தோம். துடுப்பாட்ட வீரர்கள் நீண்ட நேரம் நிலைத்து நின்று விளையாட வேண்டும் என ஆலோசனை நடத்தியிருந்தோம். ஆனால் வீரர்கள் ஆரம்பத்திலேயே இலக்குகளைப் பறிகொடுத்து விடுகின்றனர். இது துரதிர்ஷ்ட வசமானது. எனினும் இளம் வீரர்கள் இதில் இருந்து வலுவாக மீண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. எங்களது தடுப்பாட்ட வரிசையில் மத்தியூஸ்தான் அனுபவம் மிக்கவர். அவர் பெரியளவில் ஓட்டங்களைக் குவிக்காத நேரங்களில் அணி சரிவைச் சந்திக்கிறது. மூத்த வீரர்கள் முன்னின்று சிறப்பாக செயல்படும் போது இளம் வீரர்கள் நிச்சயம் அதைத் பின் தொடர்வார்கள். மத்தியூஸ் சிறப்பாக செயல்படுவார் என்ற உறுதி எனக்கு இருக்கிறது" என சந்திமல் மேலும் தெரிவித்தார். (ம)


# 600 இலக்குகள் வீழ்த்துவேன்

### அஸ்வின் நம்பிக்கை

"டெஸ்ட் கிரிக்கெட்டில் 600 இலக்குகள் வீழ்த்துவேன் என்ற நம்பிக்கை உள்ளது" என்று தெரிவித்தார் இந்திய அணியின் சுழல்பந்து வீச்சாளர் அஸ்வின்.

இலங்கைக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவடைந்த டெஸ்ட் ஆட்டத்தில் 8 இலக்குகளை வீழ்த்தியதன் மூலம் 300 இலக்குகள் என்ற அடைவை எட்டினார் அஸ்வின். விரைவாக 300 இலக்குகளை வீழ்த்திய வீரராகவும் அஸ்வினே உள்ளார். இதையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்த 300 இலக்குகளை இருமடங்காக மாற்ற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இதுவரை 54 ஆட்டங்களில் விளையாடி உள்ளேன். சுழற்பந்து வீச்சு எளிதானது அல்ல. தற்போது கம்பீரமாக எழுந்து நிற்பது போல் தெரியும். ஆனால் இதன் பின்னால் அதிகம் இருக்கிறது" என அஸ்வின் மேலும் தெரிவித்தார். (ம)



# அடிலெய்டிலும் இங்கிலாந்து தடுமாறும் இப்படிச் சொல்கிறார் ஆஸி. தலைவர்



"ஆஷஸ் தொடரின் அடுத்த ஆட்டத்திலும் இங்கிலாந்து அணி தோல்வியடையும்'' என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணித் தலைவர் சிமித்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டம் பிரிஸ்பெய்னில் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. ஆஸ்திரேலிய அணி 10 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார் சிமித்.

"பிரிஸ்பெய்னில் (முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில்) வெற்றி பெற்றமை மகிழ்ச்சி. அடிலெய்ட் டெஸ்ட் ஆட்டம் இங்கிலாந்து அணிக்கு மேலும் சோதனைகளை வழங்கும். இந்த ஆட்டம் பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக அமையவுள்ளது. எனவே இரவில் அடிலெய்ட் ஆடுகளம் இன்னும் வேகம் காட்டும். அதில் எமது வேகப்பந்து வீச்சாளர்கள் இன்னும் சிறப்பாக வீசுவார்கள். அடிலெய்டிலும், ஏன் இந்த ஆஷஸ் தொடர் முழுதும் ஆஸ்திரேலிய அணி யின் தீவிரம் குறையாது. இங்கிலாந்து அணியை சும்மா விடப்போவதில்லை" என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

## திரிமன்னேக்கு எதிர்ப்பலை

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் திரிமன்னேக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் கடும் கருத்துக்கள் வைக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி விளையாடி வருகிறது. முதலிரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. நான்கு இன்னிங்ஸிலும் முறையே 51, 7, 9, 23 ஓட்டங்களையே திரிமன்னே எடுத்திருந்தார். இதையடுத்து இலங்கை ரசிகர்கள் பலரும் திரிமன்னேக்கு எதிராக காட்டமான கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். (ம)



## கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 29

வவுனியா பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுக் கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் 21 அணிகள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-23)



*லா லிகா தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டமொன்றில் பார்சிலோனாவும் மேர்சியாவும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்த ஆட்டத்துக்காக நேற்றுக் கடும் பயிற்சியில் ஈடுபட்டது பார்சிலோனா அணி.* (ம)

# கடைசி டெஸ்ட்டில் கேரத் இல்லை

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் கடைசி ஆட்டத்தில் கேரத் விளையாட மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெற்றது. மூன்றாவது ஆட்டம் டிசெம்பர் 2ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. இந்த ஆட்டம் டெல்லியில் நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றால் மட்டுமே குறைந்தபட்சம் தொடரைச் சமநிலையில் முடிக்க இயலும் என்ற கட்டாயம் இலங்கைக்கு உள்ளது. இந்த நிலையில் இந்த ஆட்டத்துக்கான அணியில் இருந்து கேரத் நீக்கப்பட்டார். வண்டர்சே அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். (ம)

# வென்றது மன்செஸ்டர்

இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது.

மன்செஸ்டர் சிற்றியை எதிர்த்து ஹட்டர்ஸ்பீல்ட் டவுன் மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் சிற்றி வெற்றிபெற்றது. சேர்ஜியோ, ரகிம் ஆகியோர் மன்செஸ்டரின் கோல்களைப் பதிவு செய்தனர். (ம)

திரு.ஷாம்சன் ஆசிரியரின் நேரடி வகுப்புகள்
SPOKEN ENGLISH
O/L, A/L எழுதியோர் இளைஞர், யுவதிகள்,பல்கலை மாணவர்கள் தொழில்புரிவோர், ஆசிரியர்கள்,வெளிநாடுசெல்வோர் இணையமுடியும்.
எமது நேரடியான உரையாடல்மூலமான பயிற்சியில் இணைவதன் மூலம் ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 02.12.2017 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் ஆரம்பம் (செவ்வாய் மற்றும் வியாழன்) - 05.12.2017
பிரிவு 1. காலை 08-10 பிரிவு 2. காலை 10-12
SAAMSON
Experts in English Training
403, மணிக்கூட்டு வீதி,
(பெருமாள் கோவில் அருகில்)
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

50 ஆவது ஆண்டை நோக்கி
வீறுநடை போடும் நிறுவனத்தில்
புதிய கல்வி ஆண்டில்
தரம் 01 முதல் O/L வரை
புதிய வகுப்புக்கள்
டிசம்பர் 06 இல் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- அதிபர் -
The Express Institute
Irupalai Junction-Kopay

## மரண அறிவித்தல்



### திருமதி நாகரத்தினம் நவரத்தினம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் நவரத்தினம் நேற்று (28.11.2017) செவ்வாய்க்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நவரத்தினம் (கடையடி மாஸ்டர்) அவர்களின் ஆருயிர் மனைவியும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணன் சின்னத்தங்கம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, அன்னம்மா, அன்னலட்சுமி மற்றும் இராஜலக் ஷ்மி காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரசுவாமி, நவரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜீவாஜி (சிவாஜி, இங்கிலாந்து), குமாரிதாமரா (தாமரா, இங்கிலாநது), விமல்ராஜ் (விம், இங்கிலாந்து), ஸ்ரீவிக்ரம் சேகரன் (சேகர், இங்கிலாந்து), மிதுனாலக் ஷ்மி (மிதுனா, கொக்குவில்), விமல்நாத் (பீயூட்டி, கனடா), விமல்ரூபி (ரூபா, இங்கிலாந்து), ஸ்ரீமயூரன் (ரஜி, ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் கிரேஷ், சுப்ரமணியம், திருவா, சுனித்தா, ரட்ணா, ஸ்ரீகரன், சந்திரிக்கா, பிரேம்ராஜ், மோகோஷா ஆகியோரின் அன்பு மாமியும் சிவானந்தகுமார், மாலினி, ஜக்குலின், ஜெகன், சிவந்தா, திலீப், சுதர்ஷினி, பிரசாந்தி, பிரதீப், பிரணவன், சாளினி, சுஜித்தா, நரேஷ், சஜித், பிரேமைசாயி, ஸ்ரீலக் ஷ்மி, ஜெனி, ரஜீவ், விநோத், பிரசாத், ஆர்த்தி, ஜெசிவன், ஜான்சன், மாலதி, நரேஷ், நய்லா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் தினேஷ், திலீப், சகானா, கஜேந்தினி, தனுஸன், லிங்கேதினி, ஜோகதர்சன், றித்திஜ, ஜோசுவ றித்திக், ஏவா ஆகியோரின் அன்புப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.11.2017) வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**7/17, புகையிரத வீதி அருகில்,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**021 221 6707**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# தற்போது அஸ்வின் மட்டுமே தலைசிறந்த சுழல்பந்து வீரர்

## முரளிதரன் புகழாரம்

"தற்போது விளையாடிவரும் வீரர்களில் அஸ்வினே ஆகச் சிறந்த சுழல்பந்து வீச்சாளர்" என்று தெரிவித்தார் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் முரளிதரன்.

இலங்கைக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 8 இலக்குகளைக் கைப்பற்றி இந்திய அணியின் இன்னிங்ஸ் வெற்றியில் காத்திரமான பங்களிப்பை வழங்கினார் அஸ்வின். இந்த 8 இலக்குகளின் உதவியுடன் பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் மிக விரைவாக 300 இலக்குகளைக் கைப்பற்றிய வீரர் என்ற அடைவையும் அவர் நிலைநாட்டினார். இந்தச் சாதனைக்காக அஸ்வினுக்கு பல தரப்புக்களிடம் இருந்தும் பாராட்டுக் குவிந்துவரும் நிலையில் முன்னாள் சுழல் ஜாம்பவான் முரளிதரனும் அஸ்வினை வெகுவாகவே பாராட்டியுள்ளார்.

"தற்போது விளையாடிவரும் வீரர்களில் ஆகச் சிறந்த சுழல்பந்து வீச்சாளராக அஸ்வின் திகழ்கிறார். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தற்போது அஸ்வின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான இந்திய அணியில் இல்லை. விரைவில் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான அணிகளிலும் இடம்பிடித்து ஆச்சரியங்களை நிகழ்த்துவார்" என முரளி மேலும் தெரிவித்தார். (ம)



# பரிஸ் செயின்ட் ஜேர்மன் அசத்தலான வெற்றி

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது.

பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியை எதிர்த்து மொனாக்கோ மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது. பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணிக்காகப் பதிவான கோல்களை நெய்மர், கவானி ஆகியோர் பெற்றனர். (ம)



Win Repair
சகலவிதமான குளிர்சாதனப்பெட்டிகளும், A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து துரிதகதியில் திருத்திக் கொடுக்கப்படும். 077 964 8942

சீரடி பாபா யாத்திரை
நாள்கள் 5, ஆரம்பம் 24.12.2017 சீரடி 2 நாள்கள், சனி சிங்கநாப்பூர், சென்னையில் ஒரு நாள் சொப்பிங், உணவு, போக்குவரத்து மற்றும் அனைத்துச் செலவுகளும் உட்பட. விவரம் கேட்டறிக!
தொடர்புகளுக்கு-
கலாநிதி ஸ்ரீ ரெங்கநாதன் 0777 680 102

# இங்கிலாந்து வீரர்களின் நடத்தை மீது அதிருப்தி

## பெய்லிஸ் முன்வைத்தார்

களத்துக்கு வெளியே இங்கிலாந்து வீரர்கள் நடந்துகொள்ளும் விதத்தில் அதிருப்தி தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் பயிற்சியாளர் பெய்லிஸ்.

ஆஸ்திரேலியாவின் பேர்த் நகரில் உள்ள விடுதியொன்றில் ஆஸ்திரேலிய வீரர் பான்கிராப்டை தனது தலையால் முட்டினார் என்ற குற்றச்சாட்டு இங்கிலாந்து இலக்குக் காப்பாளர் பரிஸ்ரௌவ் மீது வைக்கப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தற்போது படிப்படியாக உருப்பெற்று வரும் நிலையில் இங்கிலாந்து வீரர்களை கடிந்துகொண்டார் அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் பெய்லிஸ்.

"களத்துக்கு வெளியே இன்னும் கொஞ்சம் சாதுரியமாக இங்கிலாந்து வீரர்கள் நடந்துகொள்ள வேண்டும். பொது இடங்களில் சாதாரணமானவை போன்று வீரர்கள் நடந்துகொள்ளக்கூடாது' என்று பெய்லிஸ் மேலும் தெரிவித்தார்.

இரவு நேர விடுதியொன்றில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் இங்கிலாந்து அணியில் சகலதுறை வீரர் ஸ்ரோக்ஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடரில் இருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.